திருமதி சமிளா கூரே இலங்கை பட்டய கணக்காளர் சங்கத்தின் ஆட்சி சபையில் உறுப்பினராக கடந்த 60 ஆண்டு கால பட்டைய கணக்காளர் வரலாற்றில் பெறுநிறுவனத்துறையில் இருந்து (தொழிலில் ஈடுபடாத) தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண்மணி ஆவார். இவர் அண்மையில் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் ஆட்சி சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் உயர் தொழில் நுட்பக்கல்வி, உயர் கல்வி தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு ஆகியவற்றின் உறுப்பினராக இயங்குகின்றார். 2021 ஆம் ஆண்டில் அவர் இரண்டாவது முறையாக இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) தேச வலையமைப்புக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிக நிருவாகத்தின் முதுமாணிக் கற்கை நெறியின் பழைய மாணவர் சங்கத்தின் உதவிப் பொருளாளராகவும் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் கணக்கியல் சங்கத்தின் பழைய மாணவர் சங்க நிறைவேற்று உறுப்பினராவும் இயங்குகின்றார். பெண்கள் தொழில் பெறுதல் தொடர்பாக அவர் அர்ப்பணிப்புடன் இயங்குதல் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்களின் (CMA) தலைமைத்துவ முன்னெடுப்புக்கள் ஆகியவற்றுக்கு தலைமை தாங்குவதற்கும் SAFA பெண்கள் குழுவில் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு ஏற்றதாக பட்டய கணக்காளர் (CA) பெண்களின் தொழில் பெறுதல், தலைமைத்துவ விருத்தி என்பனவற்றின் உறுப்பினராக நியமனம் பெறவும் வைத்தது.

திருமதி சமிளா கூரே தற்போது WNS குளோபல் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தில் பொது முகாமையாளராகக் கடமை புரிகிறார்.

கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி சமிளா கூரே அவரது தொழிலை KPMG இல் ஆரம்பித்ததுடன் பல்வேறுபட்ட தொழில் துறைகளில் 20 வருடத்திற்கு மேலாக F&A இல் பல்வேறுவிதமான உயர் பதவிகளை வகித்துள்ளார். அவர் 2009 -2010 காலப்பகுதியில் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப பணிப்பாளராக கடமையாற்றியதுடன் சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகளை (IFRS) ஒன்றிணைக்கும் செயற்பாட்டினை முன்னின்று நடத்தினார். இந்த காலப்பகுதியில் இலங்கையின் முதலாவது பட்டயக்கணக்காளர் ஆனார். அத்துடன் ஆஸ்திரேலிய உதவித்திட்டத்தின் கீழ் முழுமையான கல்வி ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஈடுபட முடிந்தது.

திருமதி சமிளா கூரே இலங்கையின் பட்டயக்கணக்காளர்களின் (FCA) ஒருவராகவும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கணக்கியலாளர்களின் நிருவாக உறுப்பினராகவும் (CGMA-UK) ஆஸ்ரேலியாவின் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் (CPA-Ausraliya) முழுமையான உறுப்பினராகவும் இலங்கையில் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (FCMA) உறுப்பினராகவும்

பணிப்பாளர் சபை தொடர்ச்சி

சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்கீட்டு நிறுவனத்தின் முழு நேர அங்கத்தவராகவும் (FCMA) இலங்கை கணக்கீட்டு தொழில் நுட்ப வியலாளர் கழகத்தின் உறுப்பினராகவும் விளங்குகின்றார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணி (கணக்கியல்) விசேடபட்டத்தினைப் பெற்றுள்ளார். தற்போது இலங்கை பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாக முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

04 | திரு. எச்.சி.டி.எல். சில்வா

தற்போது நிதி அமைச்சின் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக கடமைபுரியும் எச். சி.டி.எல் சில்வா அவர்கள் 2020 ஜனவரி 11 ஆம் திகதியன்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்களின் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இற்றை வரை கடமையாற்றுகின்றார்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் இருந்து செயல்திட்ட நிருவாகத்தில் பொது நிருவாகம் தொடர்பான முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அரச பொது நிருவாக விசேட விஞ்ஞான இளங் கலைமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளதுடன் லண்டன் பொது நிதி கணக்கியல் பட்டய நிறுவனத்தின் அங்கத்துவராக இருப்பதுடன் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் மூலம் நடைபெற்ற பட்டய தொழில் வாண்மை பகுதி 1 (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் தகுதி பெற்றதுடன் 1992 முதல் இலங்கை கணக்காளர் சேவையில் கணக்காளராக 28 வருடங்களுக்கு மேலான அனுபவம் உடையவர் ஆவார். பொது நிதி முகாமைத்துவம் பொது கடன் முகாமைத்துவ கணக்காய்வு, கணக்கீட்டு மற்றும் பொதுப் பெறுகை முகாமைத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில் மூலோபாய அதிகாரியாகவும் இருந்துள்ளார்.

05 | திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர். சேனக பண்டார

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் குழுவின் பணிப்பாளராக 2020 ஜனவரி 02ஆம் திகதி நியமிக்கப்பட்ட திரு ஏ.ஜே.பி.எச்.பி.எம். ஆர். சேனக பண்டார அவர்கள் இற்றை வரை பணி புரிகின்றார்.

தொழில் ரீதியாக திரு சேனக பண்டார ஒரு வழக்கறிஞர் ஆவார். அவர் வழக்கறிஞர் இறுதிப்பரீட்சையில் இரண்டாம் தர விசேட பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன் டிசம்பர் 2010 இல் தொழில் புரியத் தொடங்கியுள்ளார். இவர் சிவில் மற்றும் குற்றவியல் துறைகளில் சிறந்த அனுபவத்தினைப் பெற்றுள்ளார். மேலும் இவர் தனியார் சங்கங்களின் சார்பாக முறையான நீதிமன்றங்கள் மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் ஆகியவற்றில் வாதாடியுள்ளார்.

இவர் இலங்கை வங்கி, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, பெற்றோலிக் கூட்டுத்தாபனம் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆகிய அரச நிறுவனங்களின் சார்பாக நீதி மன்றங்களில் கடமையாற்றியுள்ளார்.

நீதித் துறையில் கடமையாற்றுவதற்கு முன்னர் சான்றளிக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பராமரிப்பு திணைக்களத்தில் அதிபராக கடமையாற்றியுள்ளதுடன் குற்றவியல் துறையில் இரண்டாம் தரத்திலான விசேட பட்டம் பெற்றுள்ளார். அவர் மின்னணு ஊடகத்தில் பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார். திரு சேனக பண்டார இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் (OUSL) சட்டத்துறையில் முதுமாணிப் பட்டத்திற்கான கற்கை நெறியில் ஈடுபட்டுள்ளார்.

06 | பொறி. கே.ஆர். அபேசிறிவர்தன

பொறி.கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் 2020 ஓகஸ்ட் மாதம் முதல் இப்பதவியில் நியமிக்கப்பட்டு இன்று வரை செயற்பட்டு வருகின்றார். இவர் 1992 ஆம் ஆண்டில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் இளங்கலைப் பட்டம் (2 ஆம் வகுப்பு ஹானர்ஸ் மேல் பிரிவு) பெற்றார். மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நீர் வள பொறியியல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமா பெற்ற இவர் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்திலிருந்து பட்டய பொறியியலாளர் தகைமையையும் பெற்றுள்ளார். மேலும், அவர் இலங்கை பொறியியலாளர் சேவை (விசேட தர) அதிகாரியாவார். 1992 இல் பொறியியலாளராகவும் 2005 இல் பட்டயப் பொறியியலாளராகவும் தகுதி பெற்றிருந்தார். அம்பாந்தோட்டை மாவட்ட பொறியியலாளர் (கட்டிடம்) அலுவலகம், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், அம்பாந்தோட்டை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், மாத்தறை மாவட்ட பொறியியலாளர் (கட்டிடம்) அலுவலகம், மாத்தறை மாவட்ட பொறியியலாளர், தென் மாகாண நீர்ப்பாசன திணைக்களம் மாகாண பணிப்பாளராகவும், கிராமிய பால நிர்மாணங்கள் கருத்திட்டம் / மாகாண சபைகள் அமைச்சு போன்ற பல்வேறு நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்ததன் மூலம் 29 ஆண்டுகளுக்கும் மேலாக தொழில் அனுபவத்தைப் பெற்றுள்ளார். தென் மாகாண பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் (பொறியியல் சேவை) பிரதி பிரதம செயலாளராக (பொறியியல் சேவை) கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாண இராஜாங்க அமைச்சின் செயலாளர் பதவிக்கு மேலதிகமாக, நிர்மாண உத்தரவாத நிதியத்தின் (சி.ஜி.எ.ஃப்) தலைவர் பதவியையும் அவர் வகிக்கிறார்.

07. | திருமதி. எச்.என்.என். குணசேகர

திருமதி என். குணசேகர விவசாய அமைச்சின் நிர்வாகம் மற்றும் மனிதவளங்களுக்கான மேலதிக செயலாளராக உள்ளார். அவர் 22 ஜனவரி 2021 அன்று பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டதுடன் இன்று வரை அதனைத் தொடர்கிறார்.

1992 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் B.com பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் டுடுடி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திருமதி. குணசேகர அரச சேவையில் 27 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

மேலும் அவர் தனது ஆரம்ப காலத்திலிருந்து அரசாங்க அலுவலகங்களில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். திருமதி.குணசேகர 1995 ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் இலங்கை SLAS Cadet அரச சேவையில் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் உதவிச் செயலாளர் - (ஏற்றுமதி), உதவிச் செயலாளர் - (நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகிய பதவிகளை வகித்துள்ளார். திருமதி குணசேகர, தற்போதைய பதவிக்கு நியமிக்கப்படும் வரை, பிம்சவிய மற்றும் உற்பத்தித்திறன் சிரே்ட உதவிச் செயலாளராகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாளராகவும், மகாவலி, அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராகவும், மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு) மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது திருமதி குணசேகர விவசாய, கமநல காப்புறுதிச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகிய இரண்டின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றார்.

கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம்



01



02



03



04



05



06



07



08



09



10



11



12

01. திரு.ஐ.டீ.அசுரமான
பொது முகாமையாளர்∴ பிரதான நிறைவேற்று அலுவலர்
MBA - PIM (USJP), Bsc Eng (Hons)-UOM, ACMA-UK, CGMA, BMS - OUSL, Dip. In Mgmt (OUSL), AM(IESL), MIET-UK, Certified Expert in SME Finance- Frankfurt School of Finance & Management.

02. திரு. எல். ஐ. ரணசிங்க
பிரதி பொது முகாமையாளர் (கடன்)
MBA (Fin), B. Sc. Mkt. Mgt, AIB, ACIM

03. திரு. கே. எல். என். ஏ. பெரேரா
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
MBA (Fin), FCA, B. Com. (Sp), SAT, HNDA, Dip. in RM

04. திருமதி. நிஷானி. கே. லொக்குகே
உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்∴ பணிப்பாளர்கள் சபை
LLB, Attorney-at-Law, Notary Public and Commissioner for Oaths, Company Secretary

05. திரு. பி. எம். டி. பிரியங்க பி பஸ்நாயக்க
உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)
MSc (Mgt & IT), B. Sc. (MIS), MBCS UK

06. திரு. கே. கே. கபில கீரவெல
உதவிப் பொது முகாமையாளர் (மீட்பு)
B.Com (Sp) Hons (USJ), PG.EX.Dip. in Bank Mgt (IBSL)

07. திருமதி. அக்ஷி. எஸ். கே. அமரசிங்க
உதவிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஏற்பாட்டியல்
MBA, PQHRM, Dip in Psychology, AMCIPM

08. திருமதி. என். ஏ. ஆர். நிரோஷினி த சில்வா
பிரதான உள்ளக கணக்காய்வாளர
FCA, B. Sc. (Acc) Sp. (Hons.)

கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சி



13



14



15



16



17



18



19

09. திரு. எல். டபில்யூ. சமரவிக்ரம
பதில். உதவிப் பொது முகாமையாளர் (கடன்/ பிரதான முகாமையாளர் (கடன்)
B. Sc. (Sp) Estate Management & Valuation, AIV, ACBF - (IBSL)

10. திரு. டி. எம். ஆர். திசாநாயக்க
பிரதான முகாமையாளர *Estate/EPF/SME* மற்றும் நுண்கடன்)
MA, B. Sc. -EMV (Sp) Hons, DBF, Dip in MC, Dip in CE, AIV, AIB

11. திருமதி. ஆர்.வை. டயஸ்
இடர் தலைவர
ACII , MSC Risk Management (UK), SIRM, B.A (Dual Hons) Management Science and Finance (UK) in 10 Place

12. திருமதி. ஏ.எம்.டி.எஸ். அலககோன்
பணிப்பாளர் சபைக்கான செயலாளர்
ICCSLK, Dip ICSA, (UK)

13. திரு. எஸ். விக்ரமசிங்க
பிரதான முகாமையாளர் (கடன்)
B. Sc. EMV (Sp) Hons., AIV

14. திருமதி. டபில்யூ. ஜீ. எஸ். எஸ். கே. அபேவிக்ரம
பிரதான முகாமையாளர் (இணக்கம்)
Attorney at Law and Notary of Public, Commissioner for Oaths,

15. திரு. டி. பி. பிரசாத் வில்லாராச்சி
உள்ளக கணக்காய்வாளர
MBS, P.G. Dip. In Business & Finance, B.Com. (Sp), CBA, MAAT

16. திரு. ஆர். எம். யு. டி. பண்டார
பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஏற்பாட்டியல்
MHRM, B. Sc. BA (Sp), NDHRM. , AMCIPM

17. திரு. எஸ். ஏ. கே. ஏ. கே. சூரியாராச்சி
பிரதான முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)
MA Econ ,, PGD-App. Stat, BA Econ, ACCA - UK (part)

18. திரு. ஐ. எதிரிசூரிய
பிரதான முகாமையாளர் (மதிப்பீடு)
M. Sc. (REMV), B. Sc. (EMV) (Sp) Hons. MRICS (UK), AIV

19. திரு. எம். எம். லக்க்ஷ்மன் பெரெரா
தகவல் தொழில்நுட்ப ஆலோசனையாளர் (முக்கிய வங்கியியல் தீர்வுகள்)
M. Sc. (CS), MBA, B. Sc., BCS, FCS

படத்தில் இல்லை
திரு. ஐ. கே. காமினி
பிரதான முகாமையாளர் (கடன
BA. Hons, CBF

கூட்டிணைந்த ஆளுகை

பொதுவாக, கூட்டிணைந்த ஆளுகை நிறைவேற்று முகாமைத்துவத்தின் செயலாற்றுகை மற்றும் உபாயமார்க்க பணிப்புரைகளின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்கான அடிப்படைக் கொள்கையின் முக்கியத்துவத்தையும் மற்றும் பங்குதாரர்களுக்கான பொறுப்புக்கூறலையும் முனைப்புறுத்துகின்றது.

உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாக, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது, அதன் எதிர்கால வளர்ச்சி மற்றும் கூட்டிணைந்த செயலாற்றுகைக்கு ஒரு அடிப்படையை வழங்கும் கூட்டிணைந்த ஆளுகையின் முக்கியத்துவம் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றது.

மிக உயர்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் உடைய அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் குழுவானது செயற்பாடுகள் மற்றும் வங்கியின் நிதித் திறனுக்கான ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் வைப்பாளர்கள், கடன் வழங்குநர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் நலன்களை உறுதிசெய்யும் பொறுப்பை சந்திக்கின்றது

வங்கியின் பணியாளர்கள் குழுவானது வங்கி, நிதி, பொருளாதாரம், வணிக மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சட்டம், சந்தைப்படுத்தல் போன்றவற்றில் நடைமுறை அனுபவமுள்ள நிபுணர்களை கொண்டுள்ளது. அவர்களுக்கு உபாயமார்க்கம், செயலாற்றுகை மற்றும் வளங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற மற்றும் தீர்மானத்தை எடுப்பதற்கு போதியளவு திறன்களும் அனுபவங்களும் உள்ளன. நிறுவனத்தின் மூலோபாய நோக்கங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான தலைமைத்துவத்தை வழங்குதல், வணிகத்தின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பங்குதாரர்களை அவர்களின் சொத்து மேற்பார்வையை அறிக்கையிடுதல் போன்ற நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பான மேற்பார்வை பொறுப்புகளை வாரியம் தொடர்ந்து வலுப்படுத்தியது,

வங்கியின் ஆளுமை அடிப்படைக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்பானது திறமையான முடிவெடுப்பு, பாரிய வெளிப்படைத்தன்மைக்கான வசதி மற்றும் வியாபாரத்தின் அனைத்து அம்சங்களிலும் பொறுப்புணர்வை ஊக்குவித்தல் என்பவற்றை அடித்தளமாக கொண்டுள்ளது. வங்கியானது நாட்டின் மற்றும் ஆளுகை அதிகாரிகளின் சட்டங்கள் மற்றும் வங்கியின் உள்ளக் கொள்கைகள் ஒழுங்குமுறைகளின் கட்டமைப்பினுள் இருப்பதையும் விவேகத்துடன் நிர்வகிக்கப்படுவதையும் உறுதி செய்கிறது.

வங்கியின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் என்பன தலைவரின் மீளாய்வு/ செய்தி மற்றும் பொது முகாமையாளரின் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வில் விபரமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனினும், பொறுப்புக்கூறல், நேர்மை, நியாயம், ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள், சட்ட/ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்கம், வெளிப்படைத்தன்மை, வெளிப்படுத்தல் மற்றும் மிகச் சிறந்த திறமை போன்ற மிக முக்கியமான தரங்கள் மற்றும் பண்புகளை அடிப்படையாகக் கொள்ளுதல் முக்கியமானதுடன் இது வரை அதன் வங்கியின் வியாபார நடவடிக்கைகளை ஒழுக்கநெறிமுறைக்கு உட்பட்டே மேம்படுத்துகின்றது.

பொறுப்புக்கூறல்

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கான முக்கிய கற்களில் ஒன்று பொறுப்புக்கூறல் மிக்க கலாச்சாரத்தை வளர்த்தல் ஆகும், அந்த நிகழ்பாட்டை நன்கு புரிந்து கொண்ட வங்கி அதன் நடவடிக்கைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது.

பொறுப்புக்கூறல் எனும் கோட்பாடு சிறந்த ஆளுகையின் மூலங்களில் ஒன்றென விளங்கிக்கொள்ளல், பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழுவின் விதப்புரையின் மீது, வங்கியின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுகளை சபை மீளாய்வு செய்வதுடன் அதனை அங்கீகரிக்கின்றதுடன் வங்கியின் பங்குதாரர்களுக்கும் பொது மக்களுக்கும் நிதியியல் கூற்று மீதான தகவல்கள் அறிக்கையிடப்படல் வேண்டும் என்பதுடன் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என நம்புகின்றது.

நிதிக்கூற்றுகள் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் வங்கி காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை பத்திரிகையில் வெளியிடுகின்றதுடன், இது வங்கியின் கொள்கைகள் மற்றும் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை நம்பகத்தன்மையை அதிகரித்து அதன் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்துகின்றது.

வங்கி அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினாலும் அமுல்படுத்தப்படும் வங்கி வியாபாரத்திற்கு பொருத்தமான விடயங்களுடனான தேவைப்பாடுகளுடன் ஒழுகுகின்றது.

நியாயத்தன்மை

வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தில் உள்ளவர்கள் போன்ற எவரையும் காயப்படுத்தாது வியாபாரத்தின் தேவைகளை பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுத்தல் நிறுவனத்தின் ஓர் இலக்காகும் என்பதை வியாபாரத்தின் சூழலில் விளங்கிக்கொள்ள முடியும்.

வங்கி, தேசத்தின் ஒரு வீடமைப்பு வங்கியாக அதன் அனைத்து தரப்பினரையும் அது சரியானது அல்லது நியாயமானது எனும் அடிப்படையில் அவர்களைக் கவனிக்கும். வங்கி கடன் வசதிகளை வழங்கும் பொழுது மாதாந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வாடிக்கையாளர்களின் மீளக்கொடுப்பனவு இயலளவை மதிப்பீடு செய்கின்றது. வங்கி கடன் நிலுவையைப் பெற்றுக்கொள்வதற்கு தனது கடைசி நடவடிக்கையாக மட்டுமே சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றதுடன் வங்கி வாடிக்கையாளர்கள் எதிர்பாராத துன்பங்களுக்கு உள்ளாகும் போது எப்பொதும் வாடிக்கையாளர்களுடனேயே நிற்கின்றதுடன் அதனால் வங்கியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி காரணமாக வங்கித்துறையில் கடுமையான போட்டியை எதிர்கொள்கின்றது.

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல் என்பன கூட்டிணைந்த ஆளுகை சட்டத்தின் மிக முக்கியமான கூறுகளாகும், ஏனெனில் பங்குதாரர்கள், நலன்விரும்பிகள் மற்றும் உத்தேச முதலீட்டாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மூலதன ஒதுக்கீடு, கூட்டிணைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதியியல் செயலாற்றுகையைக் கண்காணிப்பதற்கும் அடிப்படையாக தகவல்கள் அமைகின்றன. அதற்கமைவாக, நிதியியல் பிரச்சினைகள் தோன்றுவதற்கு நேரடிக் காரணமாக அமைவது நிதியில் வெளிப்படுத்துகை பற்றாக்குறை மற்றும் போதியளவில் ஆளுகையினை பின்பற்றப்படாமை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

வெளிப்படைத்தன்மை என்பது கூட்டிணைந்த ஆளுகைக்கான ஒரு பிரதான படியாகும் மற்றும் அவர்கள் கண்காணிக்கப்படுகின்றார்கள் என்பதனால் முகாமைத்துவம் முறைசாரா நடவடிக்கைகளில் அல்லது சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது உறுதிசெய்யப்படுகின்றது. வெளிப்படைத்தன்மையை அடைவதற்கு, சரியாக கணக்கியல் முறைகள், வங்கியின் சரியானதும் முழுமையானதுமான தகவல்களை வெளியிடுதல் மற்றும் பணிப்பாளர்கள் அல்லது கட்டுப்படுத்தும் பங்குதாரர்களின் முரண்பட்ட விருப்பங்களினை வெளிப்படுத்தல் என்பற்றை பின்பற்றல் வேண்டும் என வங்கி பலமாக நம்புகின்றது. அதற்கமைவாக, வங்கி மூலதனப் போதுமை, பிரதான செயலாற்றுகை காட்டிகள், வியாபார ஒரு முகச்சிந்தனைகள், கூட்டிணைந்த

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

ஆளுமைக் கூற்றுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுகள் என்பவற்றை வருடாந்த அறிக்கை ஊடாக அதன் செயற்பாடுகளை முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் வெளிப்படுத்தியது.

மேலும் வங்கி காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் அறிக்கைகளை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் Basel III ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு அமைவாகவும் SLFRS நியமங்களுக்கு அமைவாகவும் தயாரித்து வெளியிடுகின்றது. இது பொது மக்களின் தேவைகள் வங்கி விவகாரங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வங்கி அதன் பிரதான விடயங்கள் மீதான வெளிப்படுத்துகையில் அதன் இடர் வெளிப்படுத்தல் மற்றும் இடர் முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் அதன் அவசியமான இரகசியத்தன்மையை மீறவில்லை என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும், அத்துடன் வழமையான அறிக்கைகள் உரிய அதிகாரசபைகளினாலும் பங்குதாரர்களினாலும் கோரப்படும் சட்டத்திற்குட்பட்ட அறிக்கைகள் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

2020ஆம் ஆண்டில். வங்கயில் எந்தவாரு தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடப்படவில்லை.

பணிப்பாளர்கள் சபை

வங்கியின் பணிப்பாளர் சபை, 1975ஆம் ஆண்டு 30ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சு மற்றும் பொது தொழில் முயற்சிகள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒன்பது உரிய வகையில் சுயாதீனமான மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. வங்கியின் நோக்கமான விவசாய, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதலை நிறைவேற்றும் வகையிலும் மற்றும் சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு மற்றும் நீர்ப்பாசன மற்றும் கமநல அமைச்சுகளின் சார்பில் மூன்று அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். சபையின் கலவையானது, சபையின் தீர்மானம் எடுப்பதற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்கு போதியளவு சக்தியைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

அதற்கமைவாக, கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவின் ஊடாக தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்கும் நிறைவேற்று அதிகாரியான பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு அதி உயர் மட்ட உபாயமார்க்க வழிகாட்டலையும் அதனை அமுல்படுத்துவதற்கான அதிகாரத்தையும் வழங்கி அரச சபையை ஒரு குழுவாக இயங்குவதற்கு அனுமதிக்கின்றது.

பணிப்பாளர் சபை, அவர்களுடைய தீர்மானங்கள், அனுபவம் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றைக் கொண்டு வங்கியின் உபாயமார்க்க முன்னுரிமைகளுக்கு இணங்கும் வகையிலான முன்செயற்படும் இடர் முகாமைத்துவ பொறிமுறை மற்றும் வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள், வளங்களின் வினைத்திறனான பயன்பாடு என்பவற்றுக்கு கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கு பலமான வழிகாட்டலை வழங்குகினறனர்.

பணிப்பாளர்கள் குழு, அவர்களின் தீர்ப்பு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்துவம், வளங்களின் திறமையான பயன்பாடு, பயனுள்ள உள் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் ஒரு செயல்திறன் மிக்க மூலோபாய முன்னுரிமைகள் வழியாக இடர் மேலாண்மை பொறிமுறையை உறுதிப்படுத்த பெறுநிறுவன நிர்வாகத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டுதலின் ஆதாரமாக செயல்படுகிறது.

தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் குழு தங்கள் வலுவான அர்பணிப்பு மற்றும் தொலைநோக்கு வழிகாட்டுதலுடன், வங்கியை முன்னோக்கி நிர்வகிக்கின்றது

பணிப்பாளர்கள் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுகின்றார்கள், 2021ஆம் ஆண்டு 15 முறை கூட்டம் நடைபெற்றது.

பொது முகாமையாளர் அனைத்துக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டுள்ளார். உபாயமார்க்க இலக்குகள், நிதி, சமூக மற்றும் சுற்றாடல் செயலாற்றுகைகள், தொழிற்பாட்டு சூழலினால் முன்மொழியப்பட்ட மாற்றங்கள் மற்றும் சவால்கள், கொள்கைச் சட்டக விதப்புரைகள் மற்றும் நிறைவேற்றுத்தர ஆளுகை கட்டமைப்புகள் என்பவற்றின் முன்னேற்றத்தை அமுல்படுத்தல் உட்பட ஏனைய நிறைவேற்றுனர்களின் பிரசன்னம் அவசியமாகிய பொழுது அவர்கள் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

வங்கியைக் காப்பாற்றும் கூட்டிணைந்த திட்டம், வங்கியின் தொலைநோக்கு, செயற்பணி, வியாபாரக் குறிக்கோள் மற்றும் உபாயமார்க்கம் என்பவற்றை உருவாக்கும் செயற்பாட்டுத் திட்டம், வியாபார சந்தர்ப்பங்களை கவனத்தில் கொள்ளல் மற்றும் பிரதான இடர்கள் என்பவற்றை சபை காலந்தோறும் மீளாய்வு, மதிப்பீடு செய்து அங்கீகாரத்தினை வழங்குகின்றது. உபாயமார்க்கத் திட்டம் போன்றவற்றுக்கான திருத்தங்களுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னர் அது பொருத்தமானதா எனக் கருதுவதற்கு முன்மொழிவுகளை சபை முன்மொழிகின்றது. முகாமைத்துவமானது உபாயமார்க்கங்களை அமுல்படுத்தி, முன்னேற்ற அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்கின்றது.

பணிப்பாளர் சபையின் அமைப்பு

	பணிப்பாளர்களின் பெயர்	நியமனத் திகதி	பணிப்பாளரின் வகுதி
1	டாக்டர். திரு. கே.டபில்யூ.ஏ.யு. காரியவசம் (தலைவர்)	13.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
2	திரு. எஸ்.கே.ஏ. கலபதி	02.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
3	திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	02.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
4	திருமதி. டபில்யூ.சி.என். குரே	02.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
5	திரு. எச்.சீ.டி.எல். சில்வா	11.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
6	திருமதி. எச்.என்.என். குணசேகர	21.01.2021	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
7	திரு. கே.ஆர். அபேசிறிவர்தன	16.11.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலரின் பணிகள்

பொது முகாமையாளர்□ பிரதான நிறைவேற்று அலுவலர் வங்கியில் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர் ஆவார். குழுவானது வங்கியின் பொது முகாமையாளர்□ பிரதான நிறைவேற்று அலுவலரை நியமிக்கிறது. கூட்டிணைந்த நிர்வாகக்குழு மற்றும் வங்கியின் அனைத்து முகாமைத்துவக் குழுக்களுக்கும் தலைமை தாங்கும் பொது முகாமையாளருக்கு வங்கியின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது முகாமையாளரின் பணிகள் வங்கியின் தொழிற்பாட்டு மற்றும் வியாபார நடவடிக்கைகளின் நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் நிறைவேற்றுனராகவும் இருத்தலாகும். உயர்மட்ட நிர்வாக தீர்மானங்களை எடுப்பதற்கான வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் அவர் பொறுப்புவாய்ந்தவராக திகழ்கின்றார். பொது முகாமையாளர்□ பிரதான நிறைவேற்று அலுவலரினால் நேரடியாக அறிக்கையிடப்படும், மேலும் வங்கியின் செயல்திறனுக்காக பணிப்பாளர்கள் குழுவிற்கு பொறுப்புக் கூற வேண்டும். வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கு மேலதிகமாக, பொது முகாமையாளர்□ பிரதான நிறைவேற்று அலுவலர் பங்குதாரர்களின் மதிப்பை அதிகரிக்கும் நோக்கில் நீண்டகால உத்திகளை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் தலைமை தாங்குகிறார்.

சபை அழைக்காவிடின் அல்லாது சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் பொது முகாமையாளர் சமூகமளித்து பங்குபற்றுவார், ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

அதனால், வங்கியின் அனைத்து மட்டங்களிலும் நடைபெறும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆழமான அறிவினைக் கொண்ட நபராக பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதனால், இந்தப் பொறுப்புக்குரிய பதவிக்கு வங்கித்துறையில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு துறைகளிலும் பணியாற்றிய அனுபவம் கோரப்படுகின்றது. வங்கியின் செயற்பாட்டுத் தலைவராக இருப்பதனால், வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் மேற்பார்வை செய்வது அவரது கடமையாக உள்ளதனால் அதனை அவர் கடுமையாக வங்கியின் பணிகளை பின்பற்றுவார்.

இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கு அமைவாக தலைவர் மற்றும் பொது முகாமையாளர் இருவருக்கிடையிலான பொறுப்புகள் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது

சபையின் உப குழுக்கள்

பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் கீழ்வரும் நான்கு உப குழுக்களை வங்கி நிறுவியுள்ளது. பொதுவாக சபையின் உப குழுக்கள் ஒருவருக்கொருவர் சுயாதீனமாக செயல்படுகின்றன, மேலும் அவை முழுமையாக சபைக்கு உதவும் வகையில் போதுமான அதிகாரம், வளங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் வழங்கப்படுகின்றன
இந்தக் குழுக்கள் பின்வருவனவாகும்

- சபையின் கணக்காய்வுக் குழு (BAC)
- சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC)
- சபையின் பரிந்துரைக் குழு (BNC)
- சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC).

வருடாந்த அறிக்கையில் உப குழுக்கள் அறிக்கையின் கீழ் சபையின் உப குழுக்களின் நோக்கங்கள் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் அந்தத்துறையில் நிபுணத்துவம் கொண்ட நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளரின் கீழ் தலைமை தாங்கப்படுகின்றது.

சபையின் கணக்காய்வுக் குழு நிதியில் அறிக்கையிடல் செயன்முறை, கணக்காய்வு செயன்முறை, வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல்களுடன் இணக்கம் என்பற்றுக்கான மேற்பார்வையினை வழங்குகின்றது. நிதியியல் கூற்றுகளின் மீது உத்தேச தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு அண்மைய நிபுணத்துவ மற்றும் ஒழுங்குபடுத்தல் அறிவிப்புகள் மற்றும் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்க முடியும். அறிக்கைகள் முழுமையானவை மற்றும் செம்மையானவை என மதிப்பிடுவதற்கு எவ்வாறு முகாமைத்துவம் உள்ளக இடைக்கால நிதியியல் தகவல்களை அபிவிருத்தி செய்துள்ளது என விளங்கிக்கொள்ளல் அவசியமானது.

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயிக்கின்றதுடன், காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஊதியம், நன்மைகள் மற்றும் செயலாற்றுகை மீதான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மீளாய்வு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கான செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றது. வங்கியின் சார்பாக மனித வள முகாமைத்துவ உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்து மற்றும் மீளாய்வு செய்வதுடன் ஏனைய உப குழுக்களுடனும் தொழிற்பாட்டுக் குழுக்களுடனும் அனைத்து ஊழியர் சார்பான அனைத்து மனிதவளப் பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை வகிபாகத்தை பேணுதல் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவிற்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பொறுப்புகளாகும்.

சபையின் பரிந்துரைக் குழுவானது பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுத்தல்/ நியமித்தலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களை நியமிப்பற்கு அல்லது பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகளை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. அதற்கமைவாக குழு வங்கியின் கூட்டிணைந்த ஆளுகையின் ஒரு அங்கமாக செயற்படும். குழுவானது பணிப்பாளர் சபையின் அதன் உரிய நிறுவனத்தை மதிப்பீடு செய்வதுடன் சபை அபேட்சகருக்கு தேவையான திறன்கள் மற்றும் பண்புகளை பரிசீலிக்கும்.

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு பொருத்தமான இடர் காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல் மூலம் வங்கிக்கான கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்கம் போன்ற அனைத்து இடர்களையும் மதிப்பீடு செய்யும். குழுவானது, அந்த குழுக்களினால் குறித்துரைக்கப்பட்ட அளவு மற்றும் தர வரையறைக்குட்பட்டு இந்த இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காகவும் குறித்துரைக்கப்பட்ட இடர்களைத் தீர்ப்பதற்காகவும் கடன் குழு மற்றும் சொத்து பொறுப்பு குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமை மற்றும் வினைத்திறன் தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ள முடியும். குழுவினால் வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் மட்டங்களுக்கு அப்பால் குறித்துரைக்கப்பட்ட இடர்களின் தாக்கத்தை இல்லாது செய்வதற்கு சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

வங்கியின் கூட்டிணைந்த ஆளுகை மற்றும் இடர் காரணிகள் மற்றும் கைத்தொழிற்துறையின் பிரதான இடர் குணகங்கள், அவர்களுடைய ஒருங்கிணைப்பு மற்றும் நிதித் தகவல்களை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் சபையின் கணக்காய்வு சபை மற்றும் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு என்பன சபைக்கு உதவுகின்றன. சபை சில சிக்கலான பரப்புக்களை தொழிற்பாட்டு மட்டத்திற்கு மாற்றாது, கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கு அமைவாக தன்னுடனேயே வைத்துக்கொண்டுள்ளது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சிறந்த இடர் முகாமைத்துவ காட்டிகள் குறைந்து இடர்களுடன் தொடர்புடைய நபர்களுக்கிடையில் குறைந்த விருப்ப முரண்பாடுகளையும் காட்டுகின்றது. சிறந்த இடர் முகாமைத்துவத்தின் இந்த சிறப்புகளின் அமுல்படுத்தல் வங்கியின் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகைக்கு கொண்டு செல்கின்றது.

முகாமைத்துவக் குழுக்கள்

பாஸல் வழிகாட்டி வரிசைக்கு அமைவாக சபையானது நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் கூடாது ஆனால் நியாயமான முகாமைத்துவத்திற்கான போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியினால் பிரதான முகாமைத்துவ நபர்கள் தலைமை தாங்கப்படுவதுடன், வியாபார தொழிற்பாடுகள் வங்கியினால் சாட்டப்பட்டுள்ளதுடன் வங்கிப் பணிப்பாளர்கள் வங்கியின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றனர். இந்தக் குழுக்கள் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகள் பாதுகாப்பாகவும் பிரதான முகாமைத்துவ நபர்களினால் சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த சபைப் பணிப்பாளர்களுக்கு குறிப்பறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன் கீழ் பணிப்பாளர் சபையினால் சபையின் உப குழுக்களுக்கு மேலதிகமாக கீழ்வரும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது.

- நிறைவேறறுக் கடன் குழு (ECC)
- சொத்துக்கள் - பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு (ALCO)
- சந்தைப்படுத்தல் குழு (MC)
- பண்ட அபிவருத்திக் குழு (PDC)
- மீட்புக் குழு (RC)
- நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (EIRMC)

சபையின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் சிரேஸ்ட முகாமைத்துவம் வியாபார உபாயமார்க்கம், இடர் சகிப்புத்தன்மை, ஊதியம் மற்றும் ஏனைய கொள்கைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்கி வங்கியின் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முகாமைத்துவம் செய்யவும் வேண்டும், அதன்படி, மேற்குறிப்பிட்ட முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் வியாபாரத்தை முகாமைத்தவம் செய்யவும் அவர்களின் கீழ் உள்ளவர்களை மேற்பார்வை செய்யவும் அவர்களுக்கு வழமையான பயிற்சிகளை அணுகுவதற்கு வழமையான பயிற்சியை பராமரித்தல் மற்றும் அவர்களுடைய இயலுமையை அவர்களின் விடயப்பரப்பில் இற்றைப்படுத்துதல் வேண்டும். கிளை முகாமையாளர்கள் மாதாத்திற்கு ஒரு முறை சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றுகின்றன.



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/F/SMIB/CG/2021/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 08 மாசி 2023

தலைவர்,
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை பணிப்புரையின் தேவைப்பாட்டுக்கு இணங்குவது மீதான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் விடயம் தொடர்பான முடிவுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 31 டிசம்பர் 2021

இலங்கை மத்திய வங்கியினால் (இமவ) வெளியிடப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் தேவைப்பாட்டு அனுமதி மற்றும் சந்திப்பதற்கு முன்வைக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் ஆளுகை அறிக்கை பற்றிய வகையில் என்னால் இந்த அறிக்கையின் பிற்சேர்க்கை I தொடர்பாக கணக்கிடப்பட்ட செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகள் இணங்கி செயன்முறைகள் பற்றி பொருத்தமான 4400 இலங்கை நியமம் தொடர்பான சேவைகளின் (SLSRS 4400) கொள்கைகளுக்கேற்ப செயற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டிணைந்த ஆளுகை பணிப்புரை இணக்கப்பாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதற்காக மட்டுமே செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இணைக்கப்பட்ட இணைப்பு-1 இல் எனது அவதானிப்புகளை தெரிவிக்கிறேன்.

மேற்கண்ட நடைமுறைகள் இலங்கை கணக்காய்வு தரநிலைகள் அல்லது பகுப்பாய்வு தொடர்பான இலங்கை தரநிலைகளுக்கு ஏற்ப செய்யப்பட்ட கணக்காய்வு அல்லது பகுப்பாய்வு அல்ல என்பதால், CBSL வழங்கிய பெருநிறுவன ஆளுகை உத்தரவுகளுக்கு இணங்குவது குறித்து நான் எந்த உத்தரவாதத்தையும் தெரிவிக்கவில்லை.

நான் மேலதிக நடைமுறைகளைச் செய்திருந்தால் அல்லது இலங்கை கணக்காய்வு தரநிலைகள் அல்லது பகுப்பாய்வு தொடர்பான இலங்கை தரநிலைகளுக்கு இணங்க ஆளுகை அறிக்கையின் கணக்காய்வு அல்லது பகுப்பாய்வு செய்திருந்தால், பிற விஷயங்கள் தொடர்பாக உங்களிடம் என்னால் அறிக்கை வெளியிட்டிருக்க முடிந்திருக்கும்.

எனது அறிக்கை இந்த அறிக்கையின் முதல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காகவும் உங்கள் தகவலுக்காகவும் மட்டுமே உள்ளது, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்லது என்பதுடன் வேறு எந்த தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுவதற்கோ பயன்படுத்தக்கூடாது.

இந்த அறிக்கையின் மேலுள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன் தொடர்புடையதுடன் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதிக் கூற்றுகளுக்கும் முழுமையாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

டபில்யூ.பீ.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கு அமைவாக இணக்கத் தேவைப்பாடுகள்

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.1		**பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்**	
3.1.(i)		வங்கியின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன .	
	(அ)	வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்களின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டன	**இணங்குகின்றது.** 2021 - 2025 வரையிலான கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.. முழுமையான வியாபார உபாயமார்க்கம் (கூட்டிணைந்த தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.. 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமும் மேற்குறித்த கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது
		வங்கியின் செயற்பாட்டின் ஊடாக வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்கள் உரிய முறையில் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது	**இணங்குகின்றது.** உபாயமார்க்க குறிக்கோள்கள் மற்றும் கூட்டிணைந்த பிரமாணங்கள் தொடர்பாக 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
	(ஆ)	வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயங்கள் தொடர்பான சபையின் அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** முழுமையான வியாபார உபாயமார்க்கம் (கூட்டிணைந்த தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (2021 -2025)
		ஒட்டு மொத்த இடர் தொடர்பான கொள்கைகள், இடர் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமை என்பன வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனவா எனவும் பரீட்சிக்கப்பட்டன.	**இணங்குகின்றது.** உபாயமார்க்கம், கடன், சநதை மற்றும் தொழிற்பாட்டு இடர்களுக்கான அடையாளம் காணல், அளவீடுகள் மற்றும் அகற்றும் நடைமுறைகளை உள்ளடக்கி ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது.
		குறைந்தது எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான அளவிடக் கூடிய இலக்குகளை ஒட்டுமொத்த வியாபார உபாயம் கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** 2021 - 2025ஆம் ஆண்டுக்கான அளவிடக்கூடிய இலக்குகளை உள்ளடக்கிய உபாயமார்க்க இலக்குகள் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	(இ)	பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட இடர்களை முகாமை செய்வதற்கு உரிய புத்திசாதுர்யமான முறையிலும் பொருத்தமான முறையிலும் அவற்றை முகாமை செய்தல் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது..	**இணங்குகின்றது** அந்த வருடத்தில் புதிய உபாயமார்க்கங்கள் மற்றும் புதிய பண்டங்கள் பற்றி விவாதிப்பதற்கு பணிப்பாளர் சபையில் ஓர் நடைமுறையுள்ளது.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	(ஈ)	வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்களை உள்ளடக்கிய சகல அக்கறை காட்டுனர்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையானது தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்து அமுல்படுத்தி உள்ளதா என பரீட்சிக்கப்பட்டது	**இணங்குகின்றது** 2015 இல் அக்கறை காட்டுணர்களுடனான தொடர்பாடல் கொள்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	(ந)	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத் தகவல் முறைமையின் ஒருமைப்பாடு மற்றும் நிறைவுத் தன்மையினை சபை மீளாய்வு செய்துள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது..	**உள்ளக கட்டுப்பாட்டு முறைமையுடன் இணங்குகின்றது** சபையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பலத்தை மதிப்பீடு செய்வதற்கு நடைமுறையொன்றுள்ளது. மேலும் வங்கியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு மேற்குறிப்பிட்ட நடைமுறையின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் நடைமுறைக்கு பெறுமதிகளை சேர்க்கின்றது. **முகாமைத்துவ தகவல் முறைமையுடன் இணங்குகின்றது.** பணிப்பாளர் சபையினாலும் பணிப்பாளர் சபையின் உப குழுக்களினாலும் பயன்படுத்தப்படும் அனைத்து நிதி/ நிதியல்லா தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் செம்மையை மீளாய்வுசெய்வதற்கு உள்ளக கணக்காய்வு திணைக்களத்தில் சரியான செயல்முறை உள்ளது.
	(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமங்களில் வரையறுத்த பிரகாரம், முக்கிய முகாமைத்துவப் பதவியினர் அடையாளம் காணப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் (i) முக்கியமான கொள்கைகள் தொடர்பாக செல்வாக்கு செலுத்துபவர்களாகவும; (ii) செயற்பாடுகளை நெறிப்படுத்து பவர்களாகவும் (iii) வியாபாரச் செயற்பாடுகள், தொழிற்பாடுகள் மற்றும் முகாமை இடர் தொடர்பான கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்களாகவும்	**இணங்குகின்றது** சபை பொது முகாமையாளர், பிரதித் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், சிரேர்ட கணக்காளர், பிரதி உள்ளக கணக்காய்வாளர், இணக்க அலுவலர் மற்றும் சபையின் செயலாளர் என்பவர்களை வங்கியின் பிரதான முகாமைத்துவ பணியாளர்களாக அடையாளம் கண்டுள்ளது.
	(v)	பணிப்பாளர் சபையின் கொள்கையுடன் நிலையான தன்மையினைப் பேணுகின்ற பிரதான முகாமைத்துவ பதவியினர்களால் வங்கி அலுவல்கள் உரிய முறையில் மேற்பார்வை செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி பணிப்பாளர் சபையால் பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** மேலும் பிரதான முகாமைத்துவ பணியார்கள் தங்களின் விடயப்பரப்புகளின் கீழ்வருவன தொடர்பாக தொடர்ச்சியான காட்சிப்படுத்தலை பணிப்பாளர் சபைக்கும் உப குழுக்களுக்கும் மேற்கொள்வார்கள்.
	(V)	பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் தங்களுக்கும் மற்றும் பிரதான முகாமை பதவினர்களுக்குமான வரையறுக்கப்பட்ட விடயம் பரப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** பணிப்பாளர் சபையினால் உப குழுக்களுக்கான பணிப்பாளர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுக்களுக்குமான பட்டயம் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. தொழில் விபரிப்பில் பிரதான முகாமைத்துவ பணியாளர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் பணிபாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பிரதான பொறுப்புகள் அதிகாரப் பரப்புகள் டீர்சுசுஊ இனால் கலந்துரையாடப்பட்டது. . TOC இன் BIRMC, BHRRC மற்றும் BNC பரீட்சிக்கப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	(ஒ)	பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மற்றும் பணிப்பாளர்களின் சொந்த ஆளுமைச் செயன்முறைகள் கால அடிப்படையில் பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்துள்ளமையினை பரீட்சித்துள்ளதுடன் அவை கீழ் வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன (i) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைப் பதவியினர்களின் தெரிவு, பெயர் குறிப்பிடல் மற்றும் வாக்கெடுப்பு (ii) முகாமை ஆளணியினரின் ஈடுபாடுகளின் முரன்பாடுகள் மற்றும் ஆர்வங்கள் மற்றும் (iii) பலவீனங்கள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்தல்.	**இணங்குகின்றது.** 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அமைச்சரினால் பணிப்பாளர் நியமனத் தேர்வு, பரிந்துரை, மற்றும் தேர்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதன் சுய ஆளுகை நடைமுறைகளின் வருடாந்த மதிப்பீடு அவர்களின் சுய மதிப்பிட்டுப் படிவங்களின் ஊடாக பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்துகின்றன. சபையின் தீர்மானங்களின் அமுல்படுத்தலை ஆய்வு செய்வதற்கு சபை தீர்மானித்துள்ளது. வினாக்கொத்துக்களின் ஊடாக பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது.
	ஒ	பிரதான முகாமைப் பதவியினர்கள் தொடர்பாக உள்ளீர்ப்புத் திட்டமொன்றை பணிப்பாளர் சபை கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது	**இணங்குகின்றது.** பிரதான முகாமைத்துவ பணியாளர்களை உள்வாங்குவதற்கான திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
	ஓ	கொள்கைகளின் மீளாய்வு, தொடர்பாடல் மார்க்கங்களின் உருவாக்கம் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களின் செயலாற்றுகையினை கண்காணித்தல் போன்ற பணிகள் தொடர்பாக பிரதான முகாமைப் பதவியினர்களுடன் வழமையான கூட்டங்களை பணிப்பாளர் சபையானது நிரற்படுத்தியுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** பிரதான முகாமைத்துவ நபர்கள் பணிப்பாரள் சபை மற்றும் உப குழுக் கூட்டங்களில் செயலாற்றுகை, உபாயமார்க்கம், கொள்கை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக தங்களின் விடயப்பரப்புகளின் கீழ் வருவன தொடர்பாக தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் பங்குபற்றுகின்றனர்
	ஔ	ஒழுங்கு முறைப்படுத்தல் சூழலினை புரிந்து கொள்வதற்கான செயற்பாடுகள் மற்றும் செயன் முறைகளை பணிப்பாளர் சபை எடுத்துள்ளமை பற்றியும் அவ் ஒழுங்கு முறைகளுடன் வங்கி ஒரு பிணைப்பினைப் பேணுகின்றமை பற்றியும் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** ஒழுங்குபடுத்துனர்களுடனான உறவுமுறையை வங்கு பராமரித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சுற்றாடலை விளங்கிக் கொள்வதற்கு சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அதற்கான செயன்முறைகள் நடைமுறையில் உள்ளது. இணக்க அலுவலர் ஊடாக ஒழுங்குபடுத்துனர்களுடான சிறந்த உறவுமுறையை வங்கி பாரமரிக்கின்றது. அவர் ஒழுங்குபடுத்துனர்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளை பராமரிக்கின்றார். ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்க அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கிக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றதுடன் இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட பரீட்சிப்பு அறிக்கைகள் கிடைத்தவுடன், சபை அதற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
	∴	வெளியக கணக்காய்வாளர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான செயன்முறையொன்றினை பணிப்பாளர் சபை மேற்கொண்டிருக்கின்றமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**பொருத்தமானதல்ல.** 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாகவும் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு யாப்பிற்கு அமைவாகவும் கணக்காளர் நாயகமே வங்கியின் வெளிவாரிக் கணக்காளர் ஆவார்.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.1.(ii)		பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினை (பி.நி.அ) நியமித்துள்ளமை பரீடச்சிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டல்களின் 3 (5) ஆம் பிரிவுகளுக்கு இணைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 14.1ஆம் பிரிவுக்கு அமைவாக, நிதி அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார். அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 20ஆம் பிரிவுக்கு அமைவாக பொது முகாமையாளர்□ பிரதான நிறைவேற்று அதிகாரி பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றார்.. **பணிப்பாளரின் பெயர்** — **நியமனத் திகதி** திரு. கே.டபில்யூ.ஏ.யு. காரியவசம் — 2020.01.13 திரு. எஸ்.கே.ஏ. கலபதி — 2020.01.02 திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார — 2020.01.02 திரு டபில்யூ.சீ.என். குரே — 2020.01.02 திரு. எச்.சீ.டி.எல். சில்வா — 2020.01.11 திருமதி. எச்.என்.என். குணசேகர — 2021.01.21 திரு. கே.ஆர். அபேசிறிவர்தன — 2020.11.16
3.1.(iii)		பணிப்பாளர் சபை அண்ணளவாக ஒரு வருடத்தின் போது மாதம் ஒரு முறை என்ற வகையில் உரிய தினங்களில் கூடி பணிப்பாளர் சபை கூட்டங்களை குறைந்தது பன்னிரண்டு முறையாவது நடாத்தியுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** இந்த வருடம் பதினைந்து பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடந்தது..
3.1(iv)		வங்கியின் இடர் முகாமை மற்றும் வியாபார மேம்பாடு தொடர்பான விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் தேவைப்படுகின்ற சந்தரப்பங்களில் வழமையான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்குப் பணிப்பாளர்களை இயலச் செய்யும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** ஒரு நடைமுறையாக, பணிப்பார் குழு அனைத்து பணிப்பாளர்களையும் சேர்க்க உதவுகின்றது, வழக்கமான நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளும் கலந்துரையாடப்படுகின்றன. நிகழ்ச்சி நிரலில் விடயங்களை உள்ளடக்குவதற்கு செயலாளர் உள்ளார்.
3.1.(v)		சகல பணிப்பாளர்களும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்காக வழமையான கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அறிவித்தல் விடப்படுகின்றமை மற்றும் ஏனைய சகல சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் விடப்பட்டுள்ளமை பற்றியும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சபைத் தலைவரினால் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் கூட்டம் நடப்பதற்கு 7 நாட்களுக்கு முன்னதாக பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.
3.1.(vi)		பணிப்பாளர்கள் ஒரு வருட காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட எண்ணிக்கையில் 2/3 கூட்டங்களுக்கு அல்லது தொடர்ச்சியாக நடைபெற்ற 3 கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக் கூட்டம் தொடர்பில் மாற்றுப் பணிப்பாளர் ஒருவரின் பங்குபற்றல் எவ்வாறாயினும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான சமுகமளித்தமை தொடர்பான எற்புடைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.	**இணங்குகின்றது.**

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.1(vii)		1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் தொடர்பில் செயலகச் சேவைகளை வழங்குதல் மற்றும் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் 43 ஆவது பிரிவுக்கு அமைவாக, சபை செயலாளரை நியமித்துள்ளது.
3.1(viii)		கம்பனிச் செயலாளரின் சேவைகள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேச இயலுமையினை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**ணங்குகின்றது.** சபையின் செயலாளர் என்ற வகையில், கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் மற்றும், சேவைகளையும் பணிப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ளவதற்கான வசதியுள்ளது.
3.1.(ix)		பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளை கம்பனிச் செயலாளர் பேணுவதுடன் அவ்வாறான கூட்ட அறிக்கைகளைப் பணிப்பாளர்கள் பரீட்சிப்பதற்கான செயன் முறையொன்று உள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது,.	**இணங்குகின்றது.** சபையின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் கிரமப்படி கோவையிட்டு சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டன. சபைச் செயலாளரின் கூற்றின்படி, சபை கூட்டங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் எந்த நேரத்திலும் எந்த ஒரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும்.
3.1.(x)		சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது அல்லது பின்வரும் விடயங்களை மேல் ஆய்வு செய்துள்ளது என செவ்வை பார்க்கப்பட்டுள்ளது: அ) பணிப்பாளர் சபையானது தனது கலந்துரையாடலின் போது சுருக்கத் தரவுகள் மற்றும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டமை. ஆ) பணிப்பாளர் சபையினால் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள். இ) உரிய கவனம் மற்றும் மதிநுட்பத்துடன் பணிப்பாளர் சபையானது தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்ததா என வெளிப்படுத்தக் கூடிய விலகல்கள் அல்லது உள்ளடக்கப் பிரச்சினை அல்லது உண்மை நிலவர கலந்துரையாடல்கள்: ஈ) குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகவும் பணிப்பாளர் சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணைவாகவும் விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. உ) எவ்வகையான இடர் தொடர்பாக வங்கி முகங் கொடுக்கின்றது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள இடர் முகாமைச் செயற்பாடுகளினை மீளாய்வு செய்வதற்கும், மற்றும் ஊ) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள்.	**இணங்குகின்றது.** தேவைப்படும் தகவல்கள் போதியளவில் பணிப்பாளர் சபைக் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.
3.1.xi		வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுதந்திரமான தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** தேவைப்படும் தகவல்கள் போதியளவில் பணிப்பாளர் சபைக் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.1.xi		வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுதந்திரமான தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** தேவைப்படும் தகவல்கள் போதியளவில் பணிப்பாளர் சபைக் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது..
3.1(xii)		பிணக்குகள் தொடர்பான நிலைமைகள் அல்லது பிணக்குகள் ஏற்படுவதற்கான தோற்றப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் மற்றும் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்குமான ஒழுங்கு முறைமை ஒன்று பிரயோகத்தில் உள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** நியமனத்தின் போதும் வருடாந்தமும் பணிப்பாளர்கள் தங்களுடைய விருப்ப பிரகடனத்தை மேற்கொள்ளுவார்கள்.
		பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது அவ் விடயம் தொடர்பான முக்கியமான ஆர்வம் இருக்கின்ற பட்சத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் மிக முக்கியமாகும்.	**இணங்குகின்றது.** இணக்க அலுவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 2021ஆம் ஆண்டுக்கு அவ்வாறானதொரு நிலமை ஏற்படவில்லை.
		குறிப்பிட்ட கூட்டத்தின் கூட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கூட்ட நடப்பெண் தொடர்பில் அவரின் / அவளின் பெயர் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டது.	பொருத்தமற்றது
3.1(xiii)		வங்கியின் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான தீர்மானங்கள் தொடர்பாக வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேடவிடயங்களின் முறைசார் நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான அதிகாரம் தொடர்பாக வங்கி உறுதியாக இருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சபை முறைசார் அட்டவணை விடயங்களைக் கொண்டுள்ளது, சபை அட்டவணைப்படுத்தப்பட்ட விடயங்களை விசேடமாக பராமரிப்பதுடன், இது வங்கியின் பணிப்புரை மற்றும் கட்டுப்பாட்டினை அடையாளம் காணும் வகையில் தீர்மானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன.
3.1(xiv)		வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அல்லது அது போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கின்ற நிலைமையில் அல்லது சொத்து இழப்புக்கள் ஏற்படுவதற்கான அண்மித்த நிலையில் இருக்கின்ற நிலைமையில் அல்லது வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன்காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்துவதற்கு அண்மித்த நிலையில் இருக்கின்ற போது அல்லது அவ்வாறான நிலைமைகளின் போது ஏதாவது தீர்மானம் அல்லது செயற்பாட்டினை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமை தொடர்பாக வங்கி மேற்பார்வை பணிப்பாளர்கள் முன்னோடியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**பொருத்தமற்றது.** மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் நிகழவில்லை.
3.1(xv)		நிதிச் சபை வேண்டியுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபையினால் வங்கி உரிய காலத்தில் மூலதனப்படுத்தி உள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** 31.12.2021 அன்று, பொது உரிமைப்பங்கு அடுக்கு 1 மூலதன வீதம் 21.91% வீதமாகவும் மொத்த மூலதன வீதம் 23.97% வீதமாகவும் குறைந்தபட்ச தேவையுடன் இணங்கியது.
3.1(xvi)		இந்த வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுக்கு இணைவாக வங்கியின் வருடாந்த அறிக்கை, வருடாந்த கூட்டாண்மை அறிக்கை போன்றவற்றை பணிப்பாளர் சபை வெளியிட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** வருடாந்த கூட்டிணைந்த ஆளுகை வங்கியின் 2021 வருடாந்த அறிக்கையின் 27 தொடக்கம் 82ஆம் பங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
3.1.(xvii)		வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றின் பின்பற்றல் மற்றும் அவ்வாறான மதிப்பீடுகளின் தரவுகள் பராமரிக்கப்படுகின்றமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** 2021ஆம் ஆண்டுக்கு பணிப்பாளர் சபையினால் சுய மதிப்பீட்டு/ மதிப்பீட்டு படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. .

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.2		**பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்**	
3.2.(i)		பணிப்பாளர் சபையானது 7 பேரைவிடக் குறையாததும் 13 பேரை விஞ்சாததுமான பணிப்பாளர்களைக் கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** பணிப்பாளர் சபை ஏழு சுதந்திரமான நிறைவேற்று அதிகாரமில்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.
3.2.(ii)	(அ)	பிரதான நிறைவேற்று அலுவலர் தரப் பதவியொன்றை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களை விஞ்சுதல் கூடாது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.
	(ஆ)	ஏதேனுமொரு பணிப்பாளர் 9 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருப்பாராயின், அவ்விடயம் தொடர்பில் நிலை மாற்று ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கவும்..	**பொருத்தமற்றது.**
3.2(iii)		பிரதான நிறைவேற்று அலுவலர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட சிரேட்ட நிறைவேற்றுத்தர அலுவலர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது	**இணங்குகின்றது** பணிப்பாளர் சபை செயலாளரினால் வழங்கப்பட்டன்படி, அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்றவர்களாவர்.
3.2.(iv)		குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் அல்லது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கினர் எது உயர்வானதோ அதனை சபை கொண்டிருப்பதை சரிபார்த்தது. நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் சுதந்திரமான அலுவலர்களாக கருதப்படுவார்களாயின், அவர் / அவள்:	**இணங்குகின்றது** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அனைவரும் சுயாதீனமான, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களாவர்.
		அ.) வங்கியின் 1 சதவிதத்திற்கு அதிகமான பங்கு முதலை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வைத்திருத்தல்	**பொருத்தமற்றது.**
		ஆ.) 3 (7) ஆம் அறிவுறுத்தலில் விளங்கப்படுத்திய பிரகாரம் வங்கியின் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில், நியமனம் பெற்றதன் பின்னர் தொடர்கின்ற இரண்டு வருட காலப் பகுதியின் போது அல்லது தற்பொழுது வங்கியின் ஒழுங்கு முறையான மூலதனத்தின் 10 சதவீதத்தினை விஞ்சுகின்ற பிரகாரம், ஒரு தொகை முதலை வைத்திருத்தல்.	**பொருத்தமற்றது.**
		இ. பணிப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியான இரண்டு வருட காலத்தில் வங்கியின் ஊழியராக இருந்திருத்தல்..	**பொருத்தமற்றது..**
		ஈ.) பணிப்பாளாராக, பி.நி.அ, பிரதான முகாமை அங்கத்தவராக, இவ் வங்கியின் அல்லது வேறு வங்கி யொன்றின் பிரதான பங்குதாரருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல். (இவ் விடயம் தொடர்பில், நெருங்கிய தொடர்பு என்பதன் பொருள், துணை அல்லாத நிதி ரீதியாக தங்கியிருக்கின்ற பிள்ளை என்று பொருள்படும்)	**பொருத்தமற்றது.**
		உ.) வங்கியின் குறிப்பிட்டதொரு பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல்.	**இணங்குகின்றது.** வங்கியின் ஒயொரு மற்றும் முழுமையான பங்குதாரர் அரசாங்கத்தின் திறைசேரியாகும்.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
		(f) கம்பனி ஒன்றின் அல்லது வியாபார நிறுவனம் ஒன்றின் ஊழியர் அல்லது ஒரு பணிப்பாளர் அல்லது முக்கியமான பங்குதாரராக இருத்தல்	
		i. வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சுகின்ற அளவானதும், 3 (7) ஆம் அறிவுறுத்தலில் வரையறுத்த பிரகாரம் வங்கியுடன் தற்போது ஒரு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருத்தல். அல்லது	**பொருத்தமற்றது.** 2021 ஆம் ஆண்டில் நேரடியாக அல்லது முறைமுகமாக பணிப்பாளர்கள் எவரும் அத்தகையை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவில்லை.
		ii. வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுக்கு மத்தியில் எவரேனும் ஒருவர் அதன் ஊழியராக அல்லது பணிப்பாளராக இருத்தல் அல்லது அங்கு பங்குதாரராக நியமனம் பெறல், அல்லது	அவ்வாறன நிகழ்வுகள் எதுவும் எழவில்லை.
		iii. இங்கு உள்ள அறிவுறுத்தல்களில் 3 (7) அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், வங்கியுடன் அதன் செயற்பாட்டு மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சும் வகையிலான கொடுக்கல் வாங்கல் ஒனறை வங்கியின் வேறு யாரேனும் ஒருவர் பணிப்பாளர் ஊடாக நடாத்துதல்.	அவ்வாறன நிகழ்வுகள் எதுவும் எழவில்லை.
3.2(v)		சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், சுதந்திரமான பணிப்பாளர் ஒருவர் தொடர்பாக பிரயோகிக்கத் தக்க பிரமானங்களை அடையும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்ச்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** இவ்வருடத்தினுள் மாற்றீடாக பணிப்பாளர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.
3.2(vi)		வங்கி சுதந்திரமான பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக ஒரு முறைமையினைக் கொண்டிருக்கின்றதா என்று பரீட்ச்சித்துப் பார்த்தல்.	**இணங்குகின்றது.** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.
3.2(vii)		வங்கியின் கூட்ட நடப்பெண் 50% இனை விட அதிகமான பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றதா என்றும் அவ் நடப்பெண்ணில் 50% இலும் அதிகமான நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** ஏழு பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.
3.2(viii)		வருடாந்த கூட்டாண்மை ஆட்சி அறிக்கையில் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்று தரம் இல்லாத பணிப்பாளர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளர்களின் வகையடிப்படையில் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளிப்படுத்துகின்றதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** 2021ஆம் ஆண்டு நகல் வருடாந்த அறிக்கையின் 22ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.
3.2(ix)		பணிப்பாளர் சபைக்கான புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்கின்ற ஒழுங்கு விதிகள் செவ்வை பார்க்கப்பட்டுள்ளன.	**இணங்குகின்றது** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்
3.2(x)		பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நியமிக்கப்படுவர் என்ற நிபந்தனையின் பிரகாரம் சகல பணிப்பாளர்களும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.2(xi)		பணிப்பாளர்கள் தங்களது அலுவலகம் அல்லது சபையிலிருந்து பதவி விலகியுள்ளனரா அல்லது நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. சபை,	**பொருத்தமற்றது.** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றது.
		(அ)வங்கியுடனான பணிப்பாளர்களின் உடன் பாடின்மை போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக வரையறுக்கப்படாது, பணிப்பாளர்களின் பதவி விலகல் அல்லது நீக்கம் மற்றும் அவ்வாறான பதவி விலகல் அல்லது நீக்கத்திற்கான காரணங்கள் உள்ளடங்கலாக அவ் விடயங்கள் அறிவிக்கப்படல். மற்றும	
		(ஆ)பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் இருப்பின் அல்லது இல்லாது இருப்பினும், அது தொடர்பில் உறுதிப்படுத்திக் கூற்றொன்றை வெளியிடல்..	
3.2 (xii)		வங்கி ஒன்றின் ஊழியர் அல்லது பணிப்பாளர் இன்னொரு வங்கியின் பணிப்பாளர் ஒருவராக பெயர் குறிப்பிடப் பட்டிருக்கின்றமை அல்லது தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை அல்லது நியமனம் செய்யப்பட்டிருக்கின்றமை தொடர்பாக அடையாளம் கண்டு கொள்வதற்கான செயன் முறையொன்று இருக்கின்றதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது..	**இணங்குகின்றது.**
3.3		**பணிப்பாளர்களின் உரிமைத்துவம் மற்றும் வலிமையினை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள**	
3.3(i)	(அ)	பணிப்பாளராகச் சேவையாற்றுகின்ற ஒரு நபரின் வயது 70 வயதை விடத் தாண்டக் கூடாது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சத்தியக்கடதாசியில் உள்ள தகவல்களுக்கு அமைவாக, அனைத்துப் பணிப்பாளர்களும் 70 வயதிற்கும் குறைவானவர்கள்.
	(ஆ)	இத்துடன் நிலைமாற்று ஏற்பாடுகள் இணக்கம் காணப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**பொருத்தமற்றது.**
3.3(ii)		வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 மேற்பட்ட கம்பனிகள் / தொழில் தாபனங்கள் / நிறுவனங்களில் பணிப்பாளராக ஒரு நபர் பதவி வகித்துக் கொண்டிருப்பாராயின் அது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** மத்திய வங்கிக்கு சமர்ப்பித்த சத்தியக்கடதாசிக்கு அமைவாக, எந்த ஒரு பணிப்பாளரும் 20 இற்கும் மேற்பட்ட கம்பனிகளில் பணிப்பாளர்களாக பதவி வகிக்கவில்லை.
3.3(iii)		முன்னைய வங்கியில் அவனது /அவளது சேவை நிறுத்தப்பட்ட திகதியில் இருந்து 6 மாதம் நிறைவடைவதற்குள் இலங்கையில் உரிமம் பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் இலங்கையில் உரிமம் பெற்ற மற்றொரு வங்கியின் பணிப்பாளராக அல்லது பிரதான நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படமாட்டார் என்பதை சரிபார்க்கவும்.	**இணங்குகின்றது.** சத்தியக்கடதாசியில் உள்ள தகவல்களுக்கு அமைவாக, எந்தவொரு பணிப்பாளரோ அல்லது பொது முகாமையாளரோ / பிரதான நிறைவேற்று அலுவலரோ இன்னொரு வங்கியில் இருந்து நியமிக்கப்படவில்லை.
3.4		**சபையினால் வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவ தொழிற்பாடுகள்**	
3.4 (i)		பணிப்பாளர் சபையினால் அதிகாரக் கையளிப்பு ஏற்பாடுகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவுகள் 20,21இற்கு அமைவாக பொது முகாமையாளருக்கு / பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வியாபாரத்தை முகாமைப்படுத்துவதற்கான அதிகார கையளிப்பு பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டது.
3.4 (ii)		அந்த செயற்பாடுகள் கையளிப்பு செய்திருந்த சந்தர்ப்பங்களில் 3(1) (1) இல் குறிப்பிடப்பட்ட விடயங்களில் சபை பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளதா எனப் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** சபைக் குழுக்களின் எந்தவொரு செயற்பாட்டுக்குமான அதிகார கையளிப்பை வரையறை செய்வதற்கு சபையினால் முடியும். சபையின் நடவடிக்கைகளை வரையறை செய்வதற்கு அல்லது அதன் பணிகளை இல்லாது செய்வதற்கு பிரதான நிறைவேற்று அதிகாரியினால் அல்லது பிரதான முகாமைத்துவ நபரினால் இயலாது.

தொடர் இல.		வீபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.4(iii)		வங்கியின் தேவைகளுடன் தொடர்புடையதாக அவை இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கால அடிப்படையில் அதிகாரக் கையளிப்பு செயன் முறைகள் காணப்படுகின்றமையினை சபை மீளாய்வு செய்திருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** காலத்திற்குக் காலம் அதிகாரப் பகிர்ந்தளிப்பு நடைமுறை சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.
3.5		**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**	
3.5 (i)		தலைவர் மற்றும் பி.நி.அ ஆகிய இருவர்களினதும் பாத்திரங்கள் வேறுபட்டவை, ஆகவே, அவர்கள் இருவரும் செய்கின்ற வேலைகளை ஒன்றாக ஒப்பீடு செய்ய முடியாது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமைகள் வேறுபடுத்தப்பட்டுள்ளதுடன் இருவேறு நபர்களினால் செயற்படுத்தப்படுகின்றது.
3.5 (ii)		தலைவர் ஒரு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக தலைவர் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் உத்தியோகபூர்வமற்ற ஒரு சுதந்திரமான பணிப்பாளர் ஆவார்.
		தலைவர் சுதந்திரமான பணிப்பாளராக இல்லாத சந்தர்பத்தில், பொருத்தமான எழுத்து மூலமான ஆவணங்களுடன் ஒரு சிரேட்ட பணிப்பாளராக ஒரு சுதந்திரமான பணிப்பாளரை நியமித்துள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது	**பொருத்தமற்றது.** சபையில் தலைவர் ஒரு சுதந்திரமான பணிப்பாளராக இருக்கின்றார்.
3.5.(ii)		வங்கியின் வருடாந்த அறிக்கையில் சிரேட்ட பணிப்பாளர் ஒருவரின் பதவி வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. .	**பொருத்தமற்றது.**
3.5(iii)		அவ்வாறு ஏதும் தலைவர் மற்றும் பி.நி.அ மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு மத்தியில் ஏதேனும் உறவு முறைத் தன்மையின் உள்ளடங்கலாக இருப்பின், வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, அது தொடர்பாக (நிதி, வியாபாரம். குடும்பம் அல்லது ஏனைய விடயங்கள்/ தொடர்புடைய உறவு முறைகள்) இருக்கக் கூடிய வங்கியின் கூட்டாண்மை அறிக்கையினை அடையாப்படுத்துவதற்கும் வெளிப்படுத்துவதற்குமான செயற்பாட்டினை சபை கொண்டுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**பொருத்தமற்றது.** வருடாந்த கூட்டிணைந்த ஆளுகை வங்கியின் 2021 வருடாந்த அறிக்கையின் 27 தொடக்கம் 82ஆம் பங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
3.5(iv)		தலைவர் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது சபை சுய மதிப்பீட்டு செயன்முறையொன்றைக் கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது அ) சபைக்கு தலைமைத்துவம் வழங்கல ஆ) சபையானது வினைத்திறனாக தனது பணிகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் மேற்கொள்கின்றது மற்றும இ) கால அடிப்படையில் சபையினால் சகல பிரதான மற்றும் பொருத்தமான பிரச்சினைகள் உரிய முறையில் கலந்துரையாடப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	அனைத்துப் பணிப்பாளர்களினாலும்,
3.5(v)		கம்பனி செயலாளரினால் சுற்றுநிருபனப்படுத்தப்படும் வழமையான நிகழ்ச்சிநிரல் தலைவரினால் அனுமதியளிக்கப்பட்டதா எனப் பரீட்சிக்கப்பட்டுள்ளது..	**இணங்குகின்றது.** தலைவரின் அனுமதியின்றி சபைச் செயலாளரினால் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு சுற்றுநிருபம் செய்யப்பட்டுள்ளது.
3.5(vi)		சகல பணிப்பாளர்களும் முழுமையானதும் வினைத்திறனானதுமான பணிப்பாளர் சபைச் செயற்பாடுகள் தொடர்பாக ஊக்கப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையில் சுயமான கணிப்பீட்டு முறைமை ஒன்று உள்ளதா என்றும் வங்கியின் நலன் கருதி தலைவரின் தலைமைத்துவத்துடன் செயற்படுகின்றதா என்றும் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது** சபையினால் சுய மதிப்பீட்டு முறை செயற்படுத்தப்பட்டதுடன் இது அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையான மற்றும் செயற்பாடான பங்களிப்பை வழங்குவதற்கு ஊக்குவிக்கும். இது வருட இறுதியில் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட சுய மதிப்பீட்டுப் படிவங்களின் ஊடாக வெளிப்படுகின்றது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.5(vii)		சகல பணிப்பாளர்களும் முழுமையானதும் வினைத்திறனானதுமான பணிப்பாளர் சபைச் செயற்பாடுகள் தொடர்பாக ஊக்கப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையில் சுயமான கணிப்பீட்டு முறைமை ஒன்று உள்ளதா என்றும் வங்கியின் நலன் கருதி தலைவரின் தலைமைத்துவத்துடன் செயற்படுகின்றதா என்றும் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சபையினால் சுய மதிப்பீட்டு முறை செயற்படுத்தப்பட்டதுடன் இது அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையான மற்றும் செயற்பாடான பங்களிப்பை வழங்குவதற்கு ஊக்குவிக்கும். இது வருட இறுதியில் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட சுய மதிப்பீட்டுப் படிவங்களின் ஊடாக வெளிப்படுகின்றது.
3.5 (viii)		நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களின் பங்களிப்பினை அடைந்து கொள்வதற்கான செயன் முறை தொர்பான சுய மதிப்பீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சபையினால் சுய மதிப்பீட்டு முறை செயற்படுத்தப்பட்டதுடன் இது அனைத்துப் பணிப்பாளர்களும் முழுமையான மற்றும் செயற்பாடான பங்களிப்பை வழங்குவதற்கு ஊக்குவிக்கும். இது வருட இறுதியில் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட சுய மதிப்பீட்டுப் படிவங்களின் ஊடாக வெளிப்படுகின்றது.
3.5 (ix)		பிரதான முகாமைப் பதவியினரால் அல்லது ஏனைய நிறைவேற்று கடமைகளின் நேரடியான மேற்பார்வை செயற்பாடுகளில் தலைவர் ஈடுபடுகின்றார் என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** பிரதான முகாமைத்துவ நபர்களை நேரடியாக மேற்பார்வை செய்தல் அல்லது ஏனைய நிறைவேற்றுத் தரமுள்ள பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் தலைவர் ஈடுபடுவதில்லை.
3.5 (x)		பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலை பராமரிப்பதற்கான செயன் முறையொன்று இருக்கின்றமையினையும் அந்தக் கண்ணோட்டத்தில் சபையுடன் பங்குதாரர்கள் தொடர்பாடல் செய்கின்றமையும் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** வங்கியின் 100% வீதப் பங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. உரிய அமைச்சரினால் அனைத்துப் பணிப்பாளர்களினதும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது. சபையின் நிரந்தரப் பணிப்பாளராக திறைசேரியின் அங்கத்தவர் இருக்கின்றார்.
3.5 (xi)		வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரம் தொடர்பான நாளாந்த முகாமைக்குப் பொறுப்பான பிரதான நிறைவேற்றுனராக பி.நி.அ தொழிற்படுகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** நிறுவன ஒழுங்கமைப்புக்கு அமைவாக நிறைவேற்றுனராக, வங்கியின் செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவத்தில் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்ற அலுவலர் பங்கேற்கின்றார்.
3.6		**சபை நியமனம் செய்த குழுக்கள்**	
3.6 (i)		வழிகாட்டல்களின் 3(6)(ii), 3(6)(iii), 3(6) (iv), 3(6)(v) ஆம் பிரிவுகளுக்கு ஏற்ப ஆகக் குறைந்தது நான்கு சபைக் குழுக்களை வங்கி தாபித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** வங்கி பின்வரும் உப குழுக்களை நியமித்துள்ளது. • கணக்காய்வுக் குழு (BAC) • மனித வளங்கள் மற்றும் ஊதியக் FO(BHRRC) • பரிந்துரைக் குழு (BNC) • சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)
		பணிப்பாளர் சபையிற்கு ஒவ்வொரு சபைக் குழு அறிக்கைகளும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** ஒவ்வொரு சபையின் குழுவும் தலைவரின் ஊடாக நேரடியாக அறிகையை சபைக்குச் சமர்ப்பிக்கும்.
		ஒவ்வொரு குழுவும் தத்தமது கடமைகள், பாத்திரங்கள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான அறிக்கையினை தமது வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்துகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	வங்கியன் நகல் ஆண்டறிக்கையில் ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், வகிபாகங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகள் அவதானிக்கப்பட்டது.. • பரிந்துரைக் குழு (BNC) - பக்கம் 83-84 • மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு(BHRRC) – பக்கம் 85-86 சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) – பக்கம் 87-91 • கணக்காய்வுக் குழு (BAC) – பக்கம் 125-127 .

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.6(ii)		**கணக்காய்வுக் குழு:**	
	(அ)	குழுவின் செயலாளர் சுயாதீனமான நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளராக இருப்பதுடன் தகைமைகள் மற்றும் தொடர்பான அனுபவங்களைக் கொண்டிருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது..	**இணங்குகின்றது.** சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவர் சுயாதீன நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக இருப்பதுடன் அவசியமான தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ளார். சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவர் ஒரு பட்டயக் கணக்காளர் ஆவார்.
	(டி)	குழுவின் சகல அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** சபையின் கணக்காய்வுக் குழு மூன்று அங்கத்தவர்களையும் ஒரு பதில் அங்கத்தவரையும் கொண்டுள்ளதுடன், இவர்கள் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள்.
	(உ)	குழுவின் சகல அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் என்று பரீட்சிக்கப் பட்டுள்ளது.	**இணங்குகின்றது.** இலங்கையின் யாப்பு, நிதியியல் சட்டம், கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 65ஆம் பிரிவுக்கு அமைவாக வெளிவாரிக் கணக்காளராக கணக்காளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.
		i. உரிய நியதிச் சட்டங்களுக்கு இணங்க வழங்கப்படும் கணக்காய்வு சேவைகள் தொடர்பான வெளியக கணக்காய்வாளரின் நியமனம்:	
		i. காலத்துக்குக் காலம் மத்திய வங்கியால் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அமுலாக்கம்:	
	(d)	v. வங்கியின் சுயாதீனத்தின் நிமித்தம் வெளியகக் கணக்காய்வாளரிடமிருந்து குழு சுட்டிக்காட்டுதல்களைப் பெற்றுள்ளமையும், கணக்காய்வானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுவதும் பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.**
	(e)	vi. சம்பந்தப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் வெளியகக் கணக்காய்வாளர் ஒருவர், கணக்காய்வு சாராத சேவைகளை வழங்குவதுடன் தொடர்புடைய கொள்கையொன்றை குழு அமுல்படுத்தியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** இந்த வருடம் அவ்வாறான சேவைகள் எதுவும் பெறப்படவில்லை.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு முன்னர் குழுவானது கணக்காய்வின் தன்மை மற்றும் விடய எல்லைகள் தொடர்பில் வெளியக கணக்காய்வாளருடன் கலந்தாராய்ந்து அவற்றை உறுதி செய்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு பரப்பெல்லை மற்றும் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது.
	(எ)	வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் நம்பகத்தன்மை, அதன் வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் போன்றவற்றை கண்காணிக்கும் நோக்கில் வங்கியின் நிதிசார்ந்த விவரங்களை மீளாய்வு செய்வதற்கானதொரு செயன்முறையும் மற்றும் பின்வருவனவற்றை சீ.எப்.ஒ. இடமிருந்து பெறுமிடத்து அதற்கான செயன்முறை ஒன்றையும் குழு கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டது. i. தீர்மானம்சார் பிரதான பகுதிகள் ii. கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதேனும் மாற்றங்கள் iii. இயங்கிக் கொண்டிருப்பதாக கருதப்படுகின்ற ஊகம், மற்றும் iv. சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் என்பவற்றுடனான இணக்கப்பாடு, மற்றும் v. வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்விலிருந்து எழுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கல்கள்.	**பொருத்தமற்றது.** சபையின் கணக்காய்வுக் குழு கணக்காய்வாளருக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் நகல் நிதியியல் கணக்குகளை மீளாய்வு செய்தது. சபையின் கணக்காய்வு குழு 2021ஆம் ஆண்டுக்கு வெளிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட அதன் வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் காலண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்ததுடன் பிரதான நிறைவேற்று அதிகாரி குறிப்பிட்டவாறு செயற்முறை நடைமுறையில் உள்ளது.
	(.ஏ)	கணக்காய்வின் போது எழுகின்ற ஏதேனும் பிரச்சினைகள் தொடர்பில் நிறைவேற்று முகாமைத்துவத்தின் உதவி கிடைக்காதவிடத்து, அதற்காக வெளியக கணக்காய்வாளர்களை குழு சந்தித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** 2021ஆம் ஆண்டு கணக்காய்வு தொடர்பாக நிறைவேற்று முகமைத்துவம் இல்லாமையினால் சபையின் கணக்காய்வுக் குழு வெளியக கணக்காய்வாளரைச் சந்திக்கவில்லை.
	(ஐ)	வெளியக கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்றவற்றை குழு மீளாய்வு செய்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**பொருத்தமற்றது.** கணக்காய்வுக் குழு, கணக்காய்வாளர் நாயகத்தின் வருடாந்த முகாமைத்துவ அறிக்கையையும் முகாமைத்துவ அறிக்கைகளையும் மீளாய்வு செய்ததுடன் முகாமைத்துவம் அதற்குப் பதிலளித்தது.
	(ஒ)	வங்கியின் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளை குழு மேற்கொள்ள வேண்டுமென பரீட்சிக்கப்பட்டது.	
		(i) உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் விடய எல்லை, தொழிற்பாடு மற்றும் வளங்கள் என்பவற்றில் அதன் நிறைவுத் தன்மை தொடர்பில் ஆராய்ந்து, திணைக்களமானது தனது பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை அது கொண்டமைவதற்கு வழிவகுத்தல்.	**பொருத்தமற்றது.** சபையின் கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் தன்மை, செயற்பாடுகள் மற்றும் வளங்கள் தொடர்பாக அவர்களுடைய கூட்டங்களில் மீளாய்வு செய்தது. கணக்காய்வு குழுவினால் 2021ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
		(ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகளை மீளாய்வு செய்தல், மற்றும் தேவையானவிடத்து, உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.	**பொருத்தமற்றது.** உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் கணக்காய்வு அறிக்கைகளையும் கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்ததுடன், அவசியமானவிடத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.
		(i) உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை தொடர்பில் ஏதேனும் கணிப்பீட்டை அல்லது மதிப்பீட்டை பரிசீலனை செய்தல்.	**பொருத்தமற்றது.** கணக்காய்வு குழு சபைத் தலைவர் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் தலைவரின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வார்.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
		(iv) உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஏதேனும் நியமனம் தொடர்பில் அல்லது அதன் தலைவர், சிரேஷ்ட உத்தியோகத்தர் மற்றும் வெளியக சேவை வழங்குனர்கள் போன்றோரின் சேவை நிறுத்தம் தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளல்.	இதற்கான தேவைகள் ஏதும் இவ்வருடத்தினுள் எழவில்லை.
		(v) பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஏனைய வெளியக சேவை வழங்குனர்கள் உள்ளடங்கலாக திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் இராஜிநாமா தொடர்பிலும் மற்றும் இராஜிநாமாச் செய்கின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வெளியக சேவை வழங்குனர்கள் ஆகியோர் தமது பதவியை இராஜிநாமா செய்வதற்கான காரணத்தைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பிலும் குழு மதிப்பிடப்பட்டமை பரீட்சிக்கப்பட்டது.	
		(vi) உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது சுயாதீனமான செயற்பாடு என்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** உள்ளக கணக்காய்வுப் பணிகள் சுயாதீனமாக மேற்கொள்ப்படுகின்றன. அதன் கணக்காய்வுகள் நேரடியாக சபையின் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.
	(ஒ)	உள்ளக விசாரணைகள் தொடர்பிலான பிரதான பண்புகள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்றவற்றை குழு பரிசீலித்துள்ளதா என்பதை அறியும் நோக்கில் கூட்ட அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டன	**இணங்குகின்றது.** மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் குழுவானது பிரதான கண்டுபிடிப்புகளை மீளாய்வு செய்ததுடன் அதற்கு முகாமைத்துவம் பதிலளித்துள்ளது.
	(ஓள)	குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் சமூகமளிப்பு இன்றிய குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது வெளியக கணக்காய்வாளர்களுடன் மேற்கொண்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** 2021ஆம் ஆண்டு கணக்காய்வு தொடர்பாக நிறைவேற்று முகமைத்துவம் இல்லாமையினால் சபையின் கணக்காய்வுக் குழு வெளியக கணக்காய்வாளருடன் கூட்டம் எதுவும் நடாத்தப்படவில்லை.
	(∴)	பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் குழுவின் ஆய்வெல்லை பரீட்சிக்கப்பட்டது, i. அதன் ஆய்வெல்லையினுள் எந்தவொரு விடயத்தையும் விசாரிப்பதற்கான வெளிப்படையான அதிகாரம் ii. அதற்குத் தேவையான வளங்கள் iii. தகவல்களைப் பெறுவதற்கு முழு அளவிலான அணுகல்கள் மற்றும் iv. வெளியக தொழில்சார் ஆலோசனையைப் பெறுவதற்கான தத்துவம் மற்றும் தேவையேற்படின், பொருத்தமான அனுபவம் கொண்டோரை வெளியிலிருந்து அழைப்பதற்கான தத்துவம்.	கணக்காய்வு குழுவின் விதிமுறைக் குறிப்புகள் வங்கியிடம் கிடைக்கப்பெறவில்லை.
	(க)	குழுவின் செயலாளரானவர், நிறுவனத்தின் செயலாளர் அல்லது உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டுத் தலைவர் என்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** 2021 ஆண்டறிக்கையில் விபரங்கள் பக்கம் 52இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	(கா)	வருடாந்த அறிக்கையில் சபையானது வெளியிட்டுக் காட்டியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது கணக்காய்வுக் குழுவின் செயற்பாட்டு விபரங்கள் இவ்வாண்டில் இடம்பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளரினதும் சமூகமளிப்பு பற்றிய விபரங்கள்	2021 ஆண்டறிக்கையில் விபரங்கள் பக்கம் 52இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. .

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	(கி)	குழுவின் செயலாளரானவர், நிறுவனத்தின் செயலாளர் அல்லது உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டுத் தலைவர் என்பது பரீட்சிக்கப்பட்டது	**இணங்குகின்றது.** "ஊழலை வெளிப்படுத்தல்" கொள்கையானது நடைமுறையில் உள்ளதுடன், சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.
	(கீ)	பின்வரும் விடயங்களுடன் கையாள்வது தொடர்பிலான செயன்முறையினை "ஊழலை வெளிப்படுத்தல்" கொள்கையானது உள்ளடக்குவது பரீட்சிக்கப்பட்டது. i) நிதிசார் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களிலுள்ள முறையற்ற நிலைமைகள். ii) 1.மேலே (i) தொடர்பிலான அத்தகைய விடயங்களில், நியாயமான, சுயாதீன முடைய விசாரணைக்கான பொருத்தமான ஏற்பாடுகள் இடம்பெறுவதை குழு உறுதிப்படுத்த வேண்டும், மற்றும்	**இணங்குகின்றது.** "ஊழலை வெளிப்படுத்தல்" கொள்கையானது நடைமுறையில் உள்ளதுடன், சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.
3.6 (iii)		பின்வரும் விதிமுறைகள் மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு என்பன தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்றனவா என்பது பரீட்சிக்கப்பட்டது.	
	(அ)	"ஆய்வெல்லை" மற்றும் கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலம் வங்கியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்கள் தொடர்பிலான ஊதியத்தினைத் (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய பணக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கும் நோக்கிலானதொரு கொள்கையினை குழு அமுல்படுத்தியிருப்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** பணிப்பாளர்களுக்கான ஊதியங்கள் நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி சுற்றுநிருப இலக்கம் PED 3/2015இன் ((PED 3/2015 dated 17 June 2015.) தீர்மானிக்கப்படுகின்றது.. பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஊழியர்களின் ஊதியங்கள் ஊதியச் சபையினால் விதப்புரை செய்யப்பட்ட வங்கிகளின் சபையின் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான ஊதியம் தீர்மானிக்கப்படுகின்றதுடன் (BHRRC dated 21.09.2021, BHRRC Paper No 21/hr.02.04)நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது
	(ஆ)	பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்களுக்குப் பொறுப்பான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் ஆவணமாகத் தயாரிக்கப்படுவது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** வேறுபட்ட பிரதான முகாமைத்துவ பணியாளர்களுக்கான இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள், அவர்களுடைய விடயப்பரப்பின் கீழ் வரும் திணைக்களங்கள் மற்றும் அலகுகளுக்கான இவ்வருட செயற்பாட்டுத் திட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	(இ)	நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக, பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோரின் செயலாற்றுகைகள் தொடர்பிலான மதிப்பீடுகளை அவ்வப்போது பரிசீலித்துள்ளமையும், ஊதியம், பயனடைவுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்றவற்றை திருத்தியமைப்பதற்கான அடிப்படையை நிர்ணயிப்பதும் பரீட்சிக்கப்பட்டது..	**இணங்குகின்றது.** பிரதான முகாமைத்துவப் பணிப்பாளர்களின் செயலாற்றுகை மதிப்பீடுகள் வங்கியின் மார்சுஊ சபையினால் மேற்கொள்ளப்படமாட்டாது. BIRMC உடன் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் சம்பளங்கள் தீர்மானிக்கப்படும்.
	(ஈ)	கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலமான பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்தாராய்வின் போதான குழுக் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரியானவர் சமூகமளிப்பதில்லை எனும் கருத்தை குழுவின் "ஆய்வெல்லை" கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** பிரதான நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் போது அவர் கூட்டங்களுக்கு வருகை தருவதில்லை. இது மனித மூலவளங்களும் ஊதியங்களும் குழுவின் புறக்குறிப்பின் விதிமுறைகளில் குறிப்பிடப்படுகின்றது.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.6(iv)		**பின்வரும் விதிமுறைகள் பரிந்துரைக் குழு தொடர்பில் ஏற்புடையதாயிருக்கும்.**	
	(அ)	குழுவானது புதிய பணிப்பாளர்களை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கு/ நியமிப்பதற்கானதொரு நடைமுறையினை அமுல்படுத்தியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது	**பொருத்தமற்றது.** பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுகிற்றார்கள். 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 20ஆம் பிரிவுக்கு அமைவாக, வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராக செயற்படுக்கூடிய பொது முகாமையாளன் பொருத்தமான நபராக சபையினால் நியமிக்கப்படுகின்றதுடன், ஆட்சேர்ப்பு பிரமாணம் மூலம் பிரதான முகாமைத்துவ நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்
	ஆ	தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தெரிவுசெய்தல் தொடர்பில் குழுவானது பரிசீலனை செய்து பரிந்துரை செய்துள்ளது (அல்லது பரிந்துரை செய்யவில்லை) என்பது பரீட்சிக்கப்பட்டது	**பொருத்தமற்றது.** நியமனங்கள் நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றது.
	இ	தொழில் விபரத்தை பரிசீலித்து, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம் அல்லது பதவியுயர்வு தொடர்பில் கருதப்படத்தகு தகுதியுடைமைக்குத் தேவையான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகள் போன்றவற்றுக்கான தகுதித்திறன்களை குழு உருவாக்கியுள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராக செயற்படுக்கூடிய பொது முகாமையாளன் பொருத்தமான நபராக சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். சபையின் பரிந்துரைக் குழுவின் விதப்புரையின் கீழ் பணிப்பாளர் சபையினால் பிரதான நிறைவேற்று பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.
	ஈ	வழிப்படுத்தல் 3(3) இல் கொடுக்கப்பட்டுள்ள மற்றும் சட்டவிதிகளில் அமைக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய அலுவல்களை பேணுவதற்கு தாங்கள் உறுதியுடனும் பொருத்தமான நபராகவும் இருப்பதாகப் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்து அவர்களின் ஒப்பமிடப்பட்ட பிரகடனங்களை குழு பெற்றுள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** நியமனத்தின் போது, சபையின் செயலாளரினால் பணிப்பாளர்களினால் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசிகளும் பிரகடனங்களும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.
	உ	பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர் தொடர்பில் ஓய்வுபெறச் செய்வதற்கான முறைசார் தொடர் திட்டங்களை குழு பரிசீலித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது	**இணங்குகின்றது.** அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தில் பணிப்பாளர்கள், தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் நியமனம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2019/2021ஆம் ஆண்டுகளுக்கான சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ நபர்களின் உள்ளீர்ப்புத் திட்டம் காணப்படுகின்றது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	ஊ	குழுவானது சுயாதீன தன்மை கொண்ட பணிப்பாளர் ஒருவரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும் என்பதும் பெரும்பான்மை சுயாதீன பணிப்பாளர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும் என்பதும் பரீட்சிக்கப்பட்டது. பிரதம நிறைவேற்று அலுவலர் கூட்டங்களுக்கான அழைப்பின் பேரில் அவற்றுக்கு சமுகமளிக்கலாம	**இணங்குகின்றது** அமைச்சரினால் நியமிக்கப்படும் அனைத்துப் பணிப்பாளர்களும் (தலைவர் உள்ளடங்களாக) சுயாதீன நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்களாவர். சபையின் பரிந்துரைக் குழுவிற்கான அங்கத்தவர்கள் சபையினால் நியமிக்கப்படுகின்றனர்.
3.6.(v)		**பின்வரும் ஒழுங்குவிதிகள், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) தொடர்பில் ஏற்புடையதா என பரீட்சிக்கப்பட்டது:**	
	அ	குழுவானது குறைந்தது 3 நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருக்க வெண்டுமென்பதோடு, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ நபர் ஆகியோர் கடன், சந்தை, பணமாக்கல், இயக்க மற்றும் உபாய முறை இடர்கள் மற்றும் அதிகார வரைச்சட்டகத்தில் அடங்குகின்ற பணிகள் மற்றும் குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் போன்ற பரந்த இடர் வகைகளை கண்காணிப்பர்.	**இணங்குகின்றது** குழு நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் வங்கியின் பிரதான இடர் அலுவலரை உள்ளடக்கியிருக்கும்.
	ஆ	வங்கி தொடர்பான கடன், சந்தை, பணமாக்கல், இயக்க மற்றும் உபாய முறை இடர்கள் போன்ற சகல இடர்களையும் பொருத்தமான இடர்ச் சுட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் மூலம் மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையினை குழு கொண்டிருந்தமை பரீட்சிக்கப்பட்டது. துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவமானது வங்கி அடிப்படையிலும் கூட்டாகவும் என இருவாறாக மேற்கொள்ளப்படல் வேண்டும	**இணங்குகின்றது.** இடர் முகாமைத்துவ அலகு ஒருங்கிணைக்கப்ட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு காலாண்டு இடர் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்.
	இ	கடன் குழு, சொத்து-பொறுப்புக் குழுக்கள் போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்குமான அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த குறிப்பிட்ட இடர் எல்லைகளை குழு மீளாய்வு செய்துள்ளமை மற்றும் அவ்வப்போதான ஏதேனும் இடர் சுட்டிகள் தொடர்பில் அறிவித்தமை பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களின் அளவுசார்ந்த மற்றும் பண்பு சார்ந்த மட்டங்களை குழு மீளாய்வு செய்கின்றது.
	ஈ	குறிப்பிட்ட அளவு சார் மற்றும் பண்பு சார் இடர் மட்டங்களுக்கு அப்பால் சென்றுள்ள சகல இடர் சுட்டிகளையும் குழு பரிசீலித்துள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அனைத்து இடர் காட்டிகள் தொடர்பாகவும் செலுத்தியுள்ளதுடன் மீளாய்வினையும் மேற்கொள்ளுகின்றது.
	உ	குழுவானது குறைந்தது காலாண்டு காலத்திலாவது எத்தனை தடவைகள் கூட்டம் நடாத்தியுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** 2021ம் ஆண்டில் ஐந்து கூட்டங்களை நடாத்தியது 2021ஆம் ஆண்டு நகல் ஆண்டறிகையின் 60ஆம் பக்கத்தில் கூட்டங்கள் மற்றும் பங்குபற்றியவர்களின் விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது
	ஊ	குறிப்பிட்ட இடர்களை அடையாளப் படுத்தத் தவறிய அதிகாரிகள் தொடர்பில் ஆவணப்படுத்தப்பட்ட முறைசார் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான நடைமுறையொன்றை குழு மீளாய்வு செய்து ஏற்றுக் கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** வங்கியில் ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்றல் முகாமைத்துவ விதிகளுகள் காணப்படுகின்றது.

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	எ	சபையின் கருத்துகள், ஒத்திசைவு மற்றும்/அல்லது குறிப்பிட்ட வழிகாட்டல்கள் போன்றவற்றைப் பரிமாறும் நோக்கிலான சபையின் ஒவ்வொரு கூட்டம் இடம்பெறுகின்ற வாரத்தினுள்ளும் இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை குழு சமர்ப்பிப்பதானது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** இடர் மதிப்பீட்டு அறிக்கையை குழு பணிப்பாளர் சபைக்கு ஒரு வாரத்தினுள் சமர்ப்பித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. .
	ஏ	வங்கியின் இணக்கப்பாட்டினை சகல வியாபார தொழிற்பாட்டுப் பரப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள், விதிமுறைகள், கட்டுப்பாட்டு வழிமுறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு மதிப்பிடுவதற்கான இணக்கச் செயற்பாடு ஒன்றை குழு நிறுவியுள்ளமையும், இணக்கப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு அது தொடர்பில் அவ்வப்போது குழுவிற்கு அறிக்கை செய்யும் நோக்கில் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு இணக்கப்பாட்டு அதிகாரியாக செயற்படுவதும் பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** சபை இணக்கப்பாட்டு செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்காக பிரதான முகாமையாளர் - இணக்கத்தை நியமித்துள்ளது.
	ஐ	வங்கியின் இடர் முகாமைத்துவத்தின் இடைவெளிகள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கூற்று, அல்லது இவற்றுடன் இணங்காமை, வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் சுட்டிக்காட்டப்பட்ட பணிப்புரைகள், இவ்வாறு ஏதும் இருப்பின், அவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு நாணயச் சபை பணிப்புரை வழங்கியுள்ளது	**பொருத்தமற்றது** இந்த வருடம் பொது மக்களுக்கு வெளிப்படுத்தவதற்கு எவ்வித பணிப்புரையையும் நாணயச் சபை வழங்கவில்லை.
3.7		**சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்**	
3.7.i		எந்தவொரு நபரினாலும் வங்கி நடவடிக்கையில் வட்டி தொடர்பில் எழக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் சபையினால் நிறுவப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது. மேலும் இது "சம்பந்தப்பட்ட தரப்பினர்" எனக் குறிப்பாக கருதப்படுகின்ற பின்வரும் வகையிலடங்கும் நபர்கள் தொடர்பிலானதாகும்: அ) வங்கியின் யாதேனும் துணை நிறுவனம் ஆ) வங்கியின் யாதேனும் கூட்டு நிறுவனம் இ) வங்கியின் யாரேனும் பணிப்பாளர்கள் ஈ) வங்கியின் யாரேனும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் உ) வங்கிப் பணிப்பாளரின் அல்லது பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தரின் நெருங்கிய உறவினர் ஊ) வங்கியில் கூடியளவு வட்டிக்குச் சொந்தமாக விருக்கும் ஒரு பங்குதாரர். எ) யாரேனும் வங்கியின் பணிப்பாளர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர் அல்லது அதன் பிரதான பங்குதாரர் கணிசமானளவு வட்டியினைக் கொண்டிருத்தல் தொடர்பிலான கரிசனை	**இணங்குகின்றது.** விருப்ப முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காண்பதற்கு நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொள்கை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.7.(ii)		சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புடையதாக பின்வரும் வகையிலடங்கும் நடவடிக்கைகளை அடையாளங்கண்டு அதனை அறிக்கை செய்வதற்கான செயன்முறையொன்று காணப்படுவது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது.** தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் கொள்கை "தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களின் வகை" எனும் தலைப்பின் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	அ	கடன் வசதிக்கான அதிகபட்ச தொகை தொடர்பில் நாணய சபையினால் வரையறுக்கப்பட்டவாறான எவ்வகையானதொரு கடன் வசதியளிப்பு..	
	டி	வங்கியின் யாதேனும் பொறுப்புகளை வைப்புகள், கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகள் ஆகிய வடிவங்களில் ஏற்படுத்தல்.	
	இ	வங்கிக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வங்கியிடமிருந்து பெறுகின்ற நிதிசார் அல்லது நிதிசாரா தன்மையுடைய ஏதேனும் சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள்.	
	ஈ	சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பயனுள்ள வகையிலான இரகசிய அல்லது முக்கிய தகவல்களை தெரிவிக்கும்படியான தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் தொடர்பான செயற்பாட்டினை வங்கிக்கும் அத்தகைய ஏதேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் உருவாக்குதல் அல்லது பேணுதல்.	
3.7.(iii)		மேலே பணிப்புரை 3(7)(i) இல் விபரிக்கப்பட்டவாறான சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வங்கியானது தொடர்பினைப் பேணவில்லை என்பதை உறுதிப் படுத்துவதற்கானதொரு செயன்முறையை சபை கொண்டுள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது.	**இணங்குகின்றது** தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் கொள்கையின் கீழ் "definition of more favorable treatment" எனும் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	அ.	வங்கியின் தொழிற்பாட்டு மூலதன சதவீதத்தை விஞ்சுகின்ற தொடர்புடைய வகுதியினர்களுக்கு முழு மொத்தக் கவனம் வழங்குதல் பரீட்சிக்கப்படுவது பணிப்பாளர் சபையினால் நடைபெறுவதுடன் அது இங்கு உப கட்டளையின் ஊடாக தீர்மானிக்கப்படும். "கவனம் எடுத்தல்" என்பதன் ஊடாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் உச்ச அளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. "மொத்த நிகர ஆர்வம்" கணக்கெடுக்கப் படுவது மொத்த ஆர்வத்தில், அது போன்ற தொடர்புடைய பகுதியினரால் வங்கியின் கொடுக்கல் வாங்கல் மூலதனம் மற்றும் 5 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான கடன் அளவான தொகைக்கு சமமான அளவான மூதலீட்டை குறைப்பதன் ஊடாகவாகும்.	
	ஆ	வங்கியின் சிறந்த கடனுக்கான வீதத்தைவிட குறைந்த வட்டி வீதம் ஒன்றை அறவிடல் அல்லது சம்பந்தமில்லாத ஒப்பிடத்தகு வாடிக்கையாளருடனான ஒப்பிடத்தகு நடடிக்கை ஒன்றுக்காக வங்கியின் வைப்பீட்டுக்கான வீதத்தைவிட அதிகம் செலுத்துதல்.	

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	இ	சாதகமான தவணைக்காலம், வியாபார இழப்புகளை மீட்கும் வகையில் மற்றும்/அல்லது சம்பந்தமற்ற தரப்பினரால் மேற்கொள்ப்படும் சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட பிரமானங்களுக்கு அப்பால் விரிவாக்குகின்ற கட்டணங்கள்/ தரகுப்பணங்களை விலக்களிப்புச் செய்தல் போன்ற விரும்பத்தகு நடவடிக்கைகளை வழங்கல்.	
	ஈ	மதிப்பீட்டு நடைமுறை எதுவுமின்றி ஒரு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சேவைகளை வழங்கல் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து சேவைகளைப் பெறுதல்	
	உ	சட்டப்படியான கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான போது தவிர உரிய வகுதியினருடன் முக்கியமான தகவல்கள் அலலது உரிமைகள் வெளிப்படுத்தப்படுகின்ற விதத்தில் தகவல் பரிமாற்றம் மற்றும் அறியப்படுத்தல் செயன்முறைகள் பேணப்பட்டுள்ளன.	
3.7.iv		வங்கி அதன் எவராவது பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு கடனுதவியை வழங்குவதற்கான செயன்முறையொன்றை கொண்டிருக்கின்றது என்பது பரீட்சிக்கப்பட்டது. அத்தகைய கடனுதவியானது சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்கு குறையாத அதன் பணிப்பாளர்களின் சபை கூட்டமொன்றில் அத்தகைய கடனுதவிக்குச் சார்பாக வாக்களிப்பது தடைசெய்யப்படுவதோடு இந்த கடனுதவி வசதியானது நிதிச் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பாதுகாப்பினால் பாதுகாக்கப்படல் வேண்டும்.	**இணங்குகின்றது.** தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் கொள்கையின் கீழ் “அவன் அல்லது அவள் தொடர்புடைய தரப்பினராக இருந்தால், முன்மொழியப்பட்ட தொடர்புடைய தரப்பினருக்கான கலந்துரையால்களில் பணிப்பாளர்கள் பங்குபற்றதல் கூடாது”.
3.7.(v)	அ	கணிசமான நலனை கொண்டுள்ள நபரொருவருக்கு அல்லது நபரொருவரின் நெருங்கிய உறவினர் அல்லது சம்பந்தப்பட்ட நபரொருவருக்காக வங்கியினால் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதாவது கடனுதவியொன்றுக்கு வங்கி செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்பதைப் பரீட்சித்து அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	அவ்வாறான கடனுதவி ஏதும் வழங்கப்படவில்லை. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்தின் 17ஆம் பிரிவு மற்றும் வங்கிச் சட்டத்தின் 47ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பணிப்பாளர்கள் ஆளுகை செய்வதற்கு அனுமதியளிக்கப்டப்பட்டுள்ளது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	ஆ	மேலே 3(7)(V) (அ) பணிப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அக்காலத்தில் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது பரீட்சிக்கப்பட்டு அத்தகைய பணிப்பாளரின் நியமனத்திகதியிலிருந்து பதினெட்டு மாத காலங்கள் காலாவதித் திகதியில் அல்லது கடனுதவி வசதி வழங்கப்பட்ட காலத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எது முன்னையதோ அக்காலப்பிரிவினுள் ஏதாவது கடனுதவி வசதி கணக்கின் மீதான ஏதாவது செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியுடன் மீட்பதற்கு நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கின்றது.	அவ்வாறான கடனுதவி ஏதும் வழங்கப்படவில்லை.
	இ	பணிப்பாளர் பதவியில் விலகிச்சென்றுவிட்டார் என கருதப்படக்கூடிய மேற்குறிப்பிட்ட உப பணிப்புரைகளுடன் இயைந்துசெல்லத் தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரையும் அடையாளம் காண்பதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டிருக்கின்றதோடு அந்த விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது.	
	ஈ	வங்கியில் ஊழியர் ஒருவராகக் கடனுதவி வசதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த எந்தவொரு பணிப்பாளருக்கும் பிரயோகிக்கப்பட முடியாத 3(7) (V) (இ) உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிக்கப்பட்டதோடு அத்தகைய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்ககூடிய திட்ட மொன்றின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டது.	ஏதும் நிகழவில்லை
3.7.(vi)		ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்க கூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான வட்டியை கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய தரப்புக்கு அல்லது மேலே 3(7) (V) இன் பணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் நிதிச் சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான பாதுகாப்பினால் பாதுகாக்கப்பட்டவருக்கு கட்டணங்கள் அல்லது தரகுகள் விலக்களிப் பெற்றவர் தொடர்பிலான ஏதாவது கடனுதவி அல்லது “மிகவும் சார்புடைய நடவடிக்கை” ஐ வங்கி வழங்குகின்ற போது அடையாளங் காண்பதற்கான செயன்முறையொன்று இருப்பது பரீட்சிக்கப்பட்டது	ஏதும் நிகழவில்லை

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
3.7(vii)		மேலே பணிப்புரை 3(7)(v) மற்றும் 3(7) (vi) என்பவற்றின் கீழ் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு கடனுதவி வசதிக்காக நிதிச் சபையின் முன்அங்கீகாரத்தை பெறுவதற்கான செயன்முறையொன்று பரீட்சிக்கப்பட்டதா நிதிச் சபையின் முன்அங்கீகாரமின்றி அத்தகைய கடனுதவி வசதியின் ஏதாவது ஒரு பகுதியோ அதன் பேரிலான ஏதாவது வட்டி அனுப்பப்பட்டிருக்கின்றதா அத்துடன் அத்தகைய அங்கீகாரமின்றி எந்தவொரு பண அனுப்புகையும் செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகும்.	ஏதும் நிகழவில்லை
3.8.		**வெளிப்படுத்தல்கள்**	
3.8 (i)	அ	சபை வெளிப்படுத்தியவை சரிபார்க்கப்பட்டது கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு தராதரங்களினால் குறித்துரைக்கப்பட்ட அமைப்புகளுடன் இயைந்த வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதோடு அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன	**இணங்குகின்றது.** வருடாந்த கணக்காய்வுக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய கணக்கீட்டு நியமங்களுடனும் தயாரிக்ப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றகள் விசேட வடிவங்களில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கல மொழிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.
	ஆ	காலாண்டு நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.	
3.8.(ii)		வருடாந்த அறிக்கையில் சபை பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்களை மேற் கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது:	
	அ.	கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்களுடன் தொடர்புடைய கூற்றானது குறிப்பான வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட பொருத்தமான கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்த வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.	**இணங்குகின்றது.** நிதியியல் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.
	ஆ	நம்பகமான நிதிசார் அறிக்கையிடல் தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற நிதிசார் அறிகையிடல் முறைமை வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான சபையின் அறிக்கையை உறுதிப்படுத்துவதோடு வெளியக நோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது	2021 வருடாந்த அறிக்கையில் பக்கம் 121 இருந்து 123 வரை நிதியில் அறிக்கையிடல் முறைமைகளின் வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீதான பணிப்பாளரின் கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.
	இ	மேலே 3(8)(ii)(b) பணிப்புரையோடு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதி மீதான வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை சபை பரீட்சித்தது.	வருடாந்த அறிக்கையில் நிதியில் அறிக்கையிடல் முறைமைகளின் வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பக்கம் 116இல் உள்ளடக்கப்பட்டுள்ளது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர் இல.		விபரங்கள்	2021ஆம் ஆண்டில் இணக்க மட்டம்
	ஈ	பெயர்கள், தகைமைகள், வயது வழிகாட்டல் பொருத்தப்பாடு மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற அனுபவம் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணம்/ஊதியம் உள்ளிட்ட பணிப்பாளர்களுடன் தொடர்புடைய விபரங்கள்	வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் விபரத்திரட்டு பக்கம் 11 இருந்து 16 வரை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
	உ	தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3(7) (iii) இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த நிகர கடனுதவி. தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட நிகரக் கடனுதவி வங்கியின் ஒழுங்குறுத்துகை மூலதனத்தின் வீதமொன்றாக வெளிப்படுத்தப்படும்.	**இணங்குகின்றது** இணக்க அலுவலரின் தகவல்களின் படி, மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சார்புடைய தரப்பினருக்கான கொடுக்கல் வாங்கல்கள் ஏதுமில்லை.
	ஊ	செலுத்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்பட்ட கடனுதவி வங்கியிலுள்ள முதலீடுகள் போன்ற சபை வகுதியினால் குறிப்பிடப்பட்ட வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் அதனால் வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பெறுமதி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி.	நகல் வருடாந்த அறிக்கையில் நிதியியல் கூற்றில் குறிப்பு 23இல் பிரதான முகாமைத்தவ நபர்களின் கொடுகல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
	எ	கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் இயைந்ததாக சபை வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை பெற்றிருந்தமை	**இணங்குகின்றது..** வருடாந்த அறிக்கையில் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணங்கல் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.
	ஏ	சாதுரியமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் இயைந்து செல்லக்கூடிய விபரங்களின் அறிக்கையொன்றை தயாரித்திருப்பதோடு இயைந்து செல்லாத ஏதாவது விடயத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	**இணங்குகின்றது.** பணிப்பாளரின் அறிக்கை பிரயோகத்தில் உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கக்கூற்றினை உள்ளடக்கியுள்ளது..
	ஐ	வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை போன்ற ஒழுங்கமைப்பு கூற்றுகள் என்பனவற்றுடன் மேற்பார்வை அக்கறைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இருப்பின், அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் நாணயச் சபையின் பணிப்புரைகளுடன் சேர்த்து, அத்தகைய அக்கறைகள் குறித்து வங்கியினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைள் எடுக்கப்படுதல் வேண்டும்.	**இணங்குகின்றது.** 2021ம் ஆண்டு இணங்காமை தொடர்பாக முனைவுறுத்தி எவ்வித அறிக்கையையும் பணிப்பாளர், வங்கி மேற்பார்வை அனுப்பவில்லை



மிகப் பழமையான அரச வங்கி 1931ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 52

சபையின் பரிந்துரைக் குழுவின் அறிக்கை 54

சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை 55

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 56

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை மீது 2007ம் ஆண்டு 12ம் இலக்க பணிப்புரையின் பிரிவு 3 (6)(ii)ற்கு இணங்குமாறு சபையின் கணக்காய்வு குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளதுடன், பணிப்பாளர் சபையானது கணக்காய்வுப் பட்டயத்தையும் அதனுடன் இணைந்த சபைத் தீர்மானங்களையும் அங்கீகரித்துள்ளது.

வங்கியின் நிருவன ஆளுமை பிரயோகங்கள் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வது சபை கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீனமான நோக்கத்துடன் மீளாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்காக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட TOR யை பின்பற்றி உள்ளக மற்றும் வெளியக காரணிகள் இரண்டினாலும் வடிவமைக்கப்பட்ட அதன் நிகழ்ச்சி நிரலுடனும், மத்திய வங்கியின் பணிப்புரையில் தரப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இயைந்ததாகவும் சபையின் கணக்காய்வு குழு மற்றுமொரு போட்டி ஆண்டை பார்வையிட்டது.

குழுவின் அமைப்பு

2021ஆம் ஆண்டு கீழ்வரும் அங்கத்தவர்களை சபையின் கணக்காய்வுக் குழு கொண்டிருந்ததுடன் ஒரு நிறைவேற்றுத் தரமல்லாத மாற்றும் பணிப்பாளரும் உள்ளடங்கியிருந்தார்.

வருகை

	அங்கத்தவர்	BAC யின் நிலை	சபையின் அங்கத்துவம		2020 கூட்டங்களுக்கான வருகை எண்ணிக்கை
			இருந்து	வரை	
1	திருமதி.டபில்யூ.சீ.என்.குரே	தலைவர் (NED)	2020 சித்திரை	இத்திகதி வரை	8
2	திரு.எச்.சீ.திலிப் லால் சில்வா	அங்கத்தவர் (NED)	2020 சித்திரை	இத்திகதி வரை	8
3	திரு.எஸ்.கே.ஏ.கலப்பதி	அங்கத்தவர (NED)	2020 சித்திரை	இத்திகதி வரை	7

குழுவின் அங்கத்தினர்கள் அனைவரும் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் என்பதுடன் அவர்கள் கல்வித் தகைமையுள்ள நிதியியல் முகாமைத்துவமும் பெற்றவர்கள். சட்டம், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் நிதி துறைகளில் ஒவ்வொருவரும் அனுபவம் வாய்ந்தவர்கள். இந்த ஆண்டறிக்கையில் அங்கத்தவர்களின் விபரக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. சபையின் கணக்காய்வு குழுவின் பட்டயத்திற்கு அமைவாக சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வு குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். அழைப்பின் பேரில் கணக்காய்வாளர் நாயகத்தின் (வங்கியின் வெளியக கணக்காய்வாளர்) பிரதிநிதி, பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய சிரேஸ்ட அலுவலர்கள் வழமையாக கூட்டங்களில் கலந்துகொள்வர்.

உள்ளக கணக்காய்வு மற்றும் சபையின் கணக்காய்வுப் பட்டயம்

உள்ளக கணக்காய்வு மற்றும் சபை கணக்காய்வு ஆகியவை திறமையாக மற்றும் சுயாதீனமாக தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு பட்டயம் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பட்டயம், உள்ளக் கணக்காய்வின் பரப்பெல்லை, செயற்பாடுகள், பொறுப்புகள், அதிகாரங்கள், அறிக்கையிடல் நடைமுறைகள், சுயாதீனத்தன்மை மற்றும் நோக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

சபையின் கணக்காய்வு குழுப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள நியதிகளினுள் குழு செயற்படுகின்றது. பட்டயத்தின் நியதிகளின் படி பணிப்பாளர் சபையின் கீழ்வரும் பொறுப்புகளை பூர்த்திசெய்வதற்கு, உதவுதல் குழுவின் பரப்பெல்லையாக அமைந்துள்ளது.

(அ) வங்கியின் நிதியியல் கூற்றுகளின் ஒருங்கிணைப்பு

(ஆ) வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் வினைத்திறன்

(இ) சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் வங்கியின் இணக்கம்

(ஈ) வங்கியின் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை

(உ) வங்கியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை

அறிக்கையிடல்

குழுவானது கூட்டங்களின் கூட்டறிக்கையுடன் சேர்த்து அதன் செயல்பாடுகள் பற்றி நேரடியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கை அளிக்கிறது. வாரிய கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வு, வெளிப்புற கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு இடையிலான திறந்த தொடர்பிற்கான வழியை வழங்குகிறது. குழுவின் கண்ணோட்டத்தின் படி குழுவின் குறிப்பு விதிமுறைகள் (TOR) யாவும் அனைத்து பொருள் அம்சங்களுக்கும் இணங்கியுள்ளது.

குழுவின் இலக்கு மற்றும் பொறுப்பு

குழுவின் இலக்கு மற்றும் பொறுப்பு வங்கியின் நிதியியல், நிர்வாக மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் பணிப்பாளர் சபைக்கு உதவுவது சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். சபையின் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையில் உள்ளடங்குபவை.

- வங்கியின் நிதி அறிக்கையிடல் இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளுடன் நேர்மையாகவும் இணங்குவிப்பாகவும் செயற்படுவதை கண்காணிப்பது
- செயற்படுத்தல் மற்றும் நிதிசார்ந்த கட்டுப்பாட்டு முறைகள் உறுதியாக உள்ளதா என்பதை மீளாய்வு செய்வது.
- உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையையும், செயலாற்றல் மதிப்பீட்டையும் கண்காணிப்பது மற்றும் மீளாய்வு செய்வது
- வங்கியினால் சந்திக்கப்படும், இடர்களை தவிர்ப்பதற்கு,. குறைப்பதற்கு, உள்ள உள்ளக ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமையை மீளாய்வு செய்வது.
- அனைத்து ஒழுங்கமைப்பு விதிகள் தொடர்பாகவும் இணங்குவிப்பாக செயற்படுவதையும் கண்காணிப்பதையும் மீளாய்வு செய்வது.
- வெளியக கணக்காய்வாளர்களுடன், அவர்களின் கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் அறிக்கைகள் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்துவது.

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை தொடர்ச்சி

கூட்டங்கள்

2021 ஆண்டின் போது எட்டு (08) தடவைகள் குழு சந்திப்பினை மேற்கொண்டது. சபையின் கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பாக அரசாங்க கணக்காய்வின் அத்தியட்சகர் பிரதிநிதியாக கலந்துகொண்டார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது

2020ஆம் ஆண்டு சபையின் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்

கீழ்வரும் செயற்பாடுகளில் குழு பங்குபற்றியது:

01. சபையின் கணக்காய்வுக் குழுவினால் 2021ம் ஆண்டுக்கு அமுல்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு காலாண்டு திட்டத்தை மீளாய்வு செய்து அங்கீகரித்தது.

02. 2020ம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகளுக்கான பதிலளிப்பின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தது.

03. கிளைகளின் வரவு செலவு திட்ட இலக்குகள் எய்தப்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் குழு மீளாய்வு செய்தது. கிளைகளினால் பேணப்படும் உத்தேச இலக்குகள் மற்றும் தரமான புத்தகங்கள் மற்றும் கிளைகளினால் மேற்கொள்ளப்படும் பதிவுகள் என்பவற்றில் குழு விசேட கவனம் செலுத்தியது

04. 2020 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான மற்றும் 2021 31 மார்ச், 30 ஜூன், 30 செப்டெம்பர் முடிவடைந்த காலாண்டுக்கான வங்கியின் நிதியியல் கூற்றக்களை மீளாய்வு செய்ததுடன் அதனை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு விதப்புரை வழங்கியது.

05. அனைத்து ஒழுங்குவிதிமுறைத் தேவைகளுகளுடனும் வங்கியின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் ஒழுகுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு காலாண்டு மீளாய்வுகள் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

06. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகைகளுக்கான காலாண்டு மீளாய்வுகளை மேற்கொண்டது.

07. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிரேஸ்ட ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டது.

08. வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கு முகாமைத்துவத்தின் பதில்களை குழு கண்காணித்துள்ளதுடன் மீளாய்வும் செய்துள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றல்களின் திறமையை குழு மீளாய்வு செய்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒத்ததாக, உள்ளக கணக்காய்வு பணிகளின் போதுமை இருப்பதையும் கண்காணித்துள்ளது.

வெளியக கணக்காய்வு அறிக்கைகள்

சட்டத்தின்படி, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார், வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழு கூட்டங்களின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புகளை விவாதிக்க அழைக்கப்பட்டனர். கணக்காய்வு நோக்கத்திற்காக, வெளிவாரி கணக்காய்வாளருக்கு அவசியமாகும் அனைத்துத் தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதை இக்குழு உறுதிசெய்தது. இறுதியான கணக்காய்வு அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள வெளியக கணக்காய்வு அவதானிப்புகளை குழு மீளாய்வு செய்துள்ளதுடன், வெளியக கணக்காய்வாளர்களின் அவதானிப்புகளுக்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள சரிப்படுத்தல் நடவடிக்கைகளின் போதுமையையும் மீளாய்வு செய்துள்ளது.

உள்ளக கட்டுப்பாடுகளின் முறைமை

உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பின் கையேட்டில் வரையறுக்கப் பட்டுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் முறையுடன் ஒத்துப் போகத்தக்கதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை திறமையானதாக இருப்பதை, பணிப்பாளர் சபையின் சார்பாக, குழு மீளாய்வு செய்தது..



டபிள்யூ.சீ.என். குரே
தலைவர் - சபையின் கணக்காய்வுக் குழு /NED

சபையின் பரிந்துரைக் குழுவின் அறிக்கை

குழுவின் பரப்பெல்லை

பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்க நடைமுறையை அமுல்படுத்தல், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவியுயர்வு செய்வதற்கு அவசியமான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய இயல்புகளைத் தீர்மானித்தல், உள்ளீர்ப்பு திட்டமிடல் மற்றும் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கியின் விவகாரங்கள் தொடர்பாக பொருத்தமான தொலைநோக்கு உள்ளதென்பதை உறுதிசெய்வதுடன், சந்தையில் வங்கி போட்டியிடுவதற்கு போதியளவு இயலளவைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் நோக்குடன் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பை மீளாய்வு செய்தல்.

குழுவின் அமைப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்றுப் பணிப்பாளரையும் கொண்டு நாங்கு பணிப்பாளர்களை உள்ளடக்கி சபையின் பரிந்துரைக் குழு அமைந்திருக்கும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் சபையின் பரிந்துரைக் குழு கீழ்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கி அமைந்திருந்தது.

#	பணிப்பாளரின் பெயர்	பதவி
1.	டாக்டர். கே.டபிள்யூ.ஏ.யு. காரியவசம் – தலைவர்	குழுவின் தலைவர்
2.	திரு. எச்.சி.டி.எல். சில்வா – அங்கத்தவர்	அங்கத்தவர்
3.	திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி – அங்கத்தவர்	அங்கத்தவர்
4.	திரு. ஏ.ஜே.பீ.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார – மாற்று அங்கத்தவர	அங்கத்தவர்

குழுவின் கூட்டங்கள்

குழுவானது வருடத்திற்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும். கூட்டத்தின் தேவை எழும் பொழுது கூட்டத்தை கூட்டுவதற்கு முடியும். கூட்டம் நடத்த தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கையானது குறைந்தது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் அவர்கள் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக கூட்டம் முழுவதிலும் இருக்க வேண்டும். குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தகவலுக்கும் அனுமதிக்குமாக பணிப்பாளர் தொடர்ச்சியாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. குழுவின் தலைவர் வழிகாட்டுதலின் பேரில் அழைப்பாளர்களாக பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தகவலுக்கும் அனுமதிக்குமாக பணிப்பாளர் தொடர்ச்சியாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. வங்கியைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டில் ஒரு குழு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு குழு அங்கத்தவர்களின் வருகை

	பணிப்பாளரின் பெயர்	பரிந்துரைக் குழுவில் பதவி	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை
1	டாக்டர். உதயசிறி காரியவசம்	தலைவர	02	02
2	திரு. எச்.சீ.டி.டிஎல். சில்வா	அங்கத்தவர்	02	01
3	திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி	அங்கத்தவர்	02	02
4	திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	அங்கத்தவர்	02	02

செயலாளர்

சபையின் செயலாளர் சபையின் பரிந்துரைக் குழுவின் செலாளராக செயற்படுகின்றார்.



டாக்கடர் உதயசிறி காரியவசம்
குழுவின் தலைவர்

சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை

2021ஆம ஆண்டு சபையின் அமைப்பு மற்றும் கூட்டம் நடத்த தேவையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்று பணிப்பாளரையும் கொண்டு நான்கு பணிப்பாளர்களை உள்ளடக்கி சபையின் மனிதவள மற்றும் ஊதியங்கள் குழு அமைந்திருக்கும். கூட்டம் நடத்த தேவையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை இரண்டாகும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் மனிதவள மற்றும் ஊதியங்கள் குழு கீழ்வரும் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கி அமைந்திருந்தது.

2021ஆம் ஆண்டின் அங்கத்தவர்கள்

டாக்டர். உதயசிறி காரியவசம் - தலைவர்

திரு. ஏ.ஜே.பீ.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார - அங்கத்தவர்

திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி - அங்கத்தவர்

திருமதி. டபில்ய்.சீ.என். குரே - மாற்று அங்கத்தவர்

செயலாளளர்

சபையின் செயலாளர் சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் செலாளராக செயற்படுகின்றார்.

குழுவின் பரப்பெல்லை

குழு மனித வள கொள்கைகள், உபாயமார்க்கங்கள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அமுல்படுத்தவதற்கும் வழிகாட்டி ஆலோசனைகளை வழங்குகின்றது, மனித வளங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கின்றதுடன் வங்கியின் பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதியில் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கின்றது. சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான இலக்குகளை நிர்ணயிக்கின்றதுடன், காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஊதியம், நன்மைகள் மற்றும் செயலாற்றுகை மீதான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மீளாய்வு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கான செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றது.

குழுவின் கூட்டங்கள்

மனிதவள மற்றம் ஊதியங்கள் குழுவானது காலாண்டுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும். கூட்டத்தின் தேவை எழும் பொழுது கூட்டத்தை கூட்டுவதற்கு முடியும். 2021ம் ஆண்டு இரண்டு குழுக்கூட்டங்கள் நடைபெற்றது.

கூட்டங்களுக்கு குழு அங்கத்தவர்களின் வருகை

பணிப்பாளரின் பெயர்	மனிதவள மற்றும் ஊதியக் குழுவில் பதவி	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை
டாக்டர். உதயசிறி காரியவசம்	தலைவர்	02	02
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	அங்கத்தவர்	0	0
திரு. எஸ்.கே.ஏ.கலப்பதி	அங்கத்தவர்	02	02
திருமதி. டபில்யூ.சீ.என். குரே	மாற்று அங்கத்தவர்	0	0

டாக்டர். உதயசிறி காரியவசம்
குழுவின் தலைவர்

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அமைப்பு - 2021

2021ம் ஆண்டு சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு நான்கு நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர், தலைவர் - இடர் முகாமைத்துவம் மற்றும் குழுவுக்கான செயலாளர் என்பவர்களை அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது.

குழுவின் அமைப்பு (1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 4ஆம் கூட்டங்களின் போது) பின்வருமாறு அமைந்திருந்தது.

திரு. எச்.சீ.டி.எல். சில்வா	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் (குழுவுக்குத் தலைவர்)
திருமதி. டபில்யூ. சீ.என். குரே	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. டபில்யூ.எம். தயாசிங்க	- பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் (2021 மார்ச் வரை நடைபெற்ற BIRMC கூட்டங்களுக்கு)
திரு. எல். ரனசிங்க	- பதில் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் (2021 மே இல் இருந்து நடைபெற்ற BIRMC கூட்டங்களுக்கு)
திருமதி. ஆர்.வை. டயஸ்	- தலைவி, இடர் முகாமைத்துவ அலகு
திருமதி. ஏ. அமரசிங்க	- பதில் பிரதி பொது முகாமையாளர் மனிதவள அபிவிருத்தி குழுச் செயலாளர் (2021 மே வரை நடைபெற்ற BIRMC கூட்டங்களுக்கு)
திருமதி. டி. அழககோன்	- சபைச் செயலாளர் (2021 ஒகஸ்ட் இல் இருந்து நடைபெற்ற BIRMC கூட்டங்களுக்கு)

BIRMCயின் பட்டயம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பு வங்கி நிறுவன ஆளுமை மீதான 2007 இன் 12 ஆம் இல. பணிப்புரையின் 3 (6) (V) பிரிவிற்கு இணங்குவிப்பாக, பணிப்பாளர் சபையினால் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டது.

27.03.2012 இல் நடந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம் அங்கீகரிக்கப்பட்டு கிரமமாக செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் அதன் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகின்றது.

பட்டயத்திற்கு அமைவாக, சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு,.

1. வங்கியின் இடர் அவாவை மீளாய்வு செய்வது.
2. நிறுவப்பட்டுள்ள இடர் மட்டங்களுக்கு அமைவாக, வங்கியின் முக்கிய இடர் கொள்கைகளை மீளாய்வு செய்வதும் அங்கீகரிப்பதும், மற்றும் முக்கிய மட்டங்களுக்கு வங்கியின் இணக்கப்பாடு மீதான அறிக்கைகளைப் பெறுவதும்.
3. வங்கி முகங்கொடுக்க வேண்டியுள்ள இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாக முகாமைத்துவத்திடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது, மீளாய்வு செய்வது மற்றும் கருத்துகளை வழங்குவது என்பவற்றுடன், கடன். சந்தை, திரவத்தன்மை செயற்பாட்டு இடர்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வகைப்படுத்தலின் கீழான வெளிப்படுத்தல், குறிப்பிடத்தக்க அவதானிப்புகள் என்பவையும், அத்தகைய இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாகவும். மற்றும் வங்கியின் வர்த்தகத்தை செயற்படுத்துவதற்கும் வங்கியினால் கைக்கொள்ளப்படும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து புரிந்து கொள்வதற்கும் போதுமைத் தன்மையை அறிந்து கொள்ளுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு உதவுவது. அத்தகைய இடர் வெளிப்படுத்தல்களின் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருத்தமானதுமான வெளிப்படுத்தல் கண்காணிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட அளவீடுகளும் முகாமைத்துவக் கருத்துகளும் அவதானிக்கப்பட்டன.
4. வங்கியின், முக்கிய கொள்கைகளும் முகாமைத்துவ இடர் வெளிப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளும் அமைப்பு முறைகளும் உள்ளடங்களாக. வங்கியின் கடன், சந்தை, திரவத் தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்யும் சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், இடர் முகாமைத்துவ முறைமைகளும் அழுத்த பரிசோதனைகளுக்கான அணுகுமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன.
5. அனைத்து இடர் வகைகளையும் ஆனால் கடன், சந்தை, பணப்புழக்கம், தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க/மதிப்பு இடர்கள் என்பவை உள்ளடங்களாக, அதற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் வங்கிக்கு பொருத்தமான ஆபத்துக் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் மூலம் மதிப்பீடு செய்யலாம்.
6. வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்புத் தேவைகளின் அடிப்படையில், குழுவால் அமைக்கப்படும் இடர் சகிப்புத்தன்மைக்கு அப்பால் எடுக்கப்பட்ட இடர்களைத் தீர்மானிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அதிகாரசபைகளுக்கு இணங்க இடர் முடிவுகள் எடுக்கப்பட்டன.
7. இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் இடர் போதுமை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடர் அலுவலர்களின் தகைமைகள் மற்றும் பின்னணி என்பவற்றை மதிப்பீடு செய்தல்.
8. இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரத்தை மீளாய்வு செய்தல்.
9. குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளிட்ட வங்கியின் இடர் மூலதன கட்டமைப்பு (கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்கள்), குறித்த மீளாய்வு

10. வெளிப்படுத்தலை முகாமைத்துவப்படுத்துவதற்கு முகாமைத்துவம் பயன்படுத்தும் குறிப்பிட்ட கொள்கைகள், படிமுறைகள் மற்றும் முறைமைகள் உள்ளடங்களாக வங்கியின் ஐந்தொகை, ஐந்தொகைக் கட்டமைப்பு, மூலதனம், நிதியிடல், வட்டி வீதம் மற்றும் திரவ முகாமைத்துவ கட்டமைப்பை மீளாய்வு செய்தல்.

11. வங்கியின் திரவத்தன்மை, வைப்புத் தொகை மற்றும் நிதியிடல் செயற்பாடுகள் பற்றிய முகாமைத்துவத்தில் இருந்து அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

12. வங்கியின் ஒழுங்குமுறை மூலதன நிலை மற்றும் மூலதனக் கட்டமைப்பைப்புற்றிய முகாமைத்துவ அறிக்கையை மீளாய்வு செய்தல்.

13. அதன் மூலதன இலக்குகள் உட்பட வங்கி மூலதன மதிப்பீட்டு கட்டமைப்பை மீளாய்வு செய்தல்.

14. இடர் முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான விடயங்களைப் பொறுத்தவரை, உதவி பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம், தலைமை இணக்க அலுவலர், பிரதான கணக்காய்வாளர், பிரதான நிதி அலுவலர், பொருளாளர், முகாமைத்துவத்தில் உள்ள ஏனையவர்கள், சுயாதீன கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் வெளிவாரி நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து தகவலைப் பெறுதல்.

15. நிறைவேற்று ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, மீட்புக் குழு, நிறைவேற்று கடன் குழு மற்றும் கடன் மற்றும் பொறுப்புக்கள் குழு போன்ற குறிப்பிட்ட இடர்களைக் கையாளும் அல்லது இடரின் சில அம்பங்களைக் கையாளும் அனைத்து முகாமைத்துவக் குழுக்களின் குறிப்பு விதிமுறைகளை மீளாய்வு செய்தல்.

16. மேலே குறிப்பிடப்பட்ட அந்தந்த குழுக்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயற்திறனை பரிசோதிக்க தலைமை நிர்வாகத்தால் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல்.

17. BIRMC ஆல் அமைக்கப்பட்ட தரத்திற்கான மற்றும் அளவீட்டிற்கான அளவுருக்களை கொண்டு மேற்கூறிய குழுக்களின் வருடாந்த பணித் திட்டம், தொடர்புடைய உத்திகள், கொள்கைகள் மற்றும் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்தல், குழுக்கள் அவற்றின் கட்டளை குறித்து நல்ல புரிதலைக் கொண்டிருப்பதை உறுதிசெய்து கொள்ளுதல்.

18. குறிப்பிட்ட இடர்களைக் கையாள்வதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிர்வாகக் குழுக்களுடன் தொடர்ந்து உரையாடலைப் பேணுதல், ஆகவே, அவற்றின் செயற்பாடுகளின் செயற்திறன் மற்றும்- அல்லது அவர்களின் முடிவுகளை செயற்படுத்துவதில் ஏதேனும் தடைகள், இடையூறுகள், உளச்சோர்வு அல்லது கட்டுப்பாடுகள் குறித்து BIRMC க்கு உடனடியாக அறிவிக்கப்படும்

19. இடர் முகாமைத்துவ குறிக்கோள்களின் நோக்கத்தை பூர்த்தி செய்ய இதுபோன்ற குறிகாட்டிகளின் போதுமைத்தன்மையை தீர்மானிக்கும் விதத்துடன், எந்த நேரத்திலும் குறிப்பிட்ட அபாயங்களின் அளவைக் கண்காணிக்க வடிவமைக்கப்பட்ட இடர் குறிகாட்டிகளை மதிப்பாய்வு செய்தல்.

20. ஒவ்வொரு இடர் குறிகாட்டிக்கும் எதிராக மாதந்தோறும் கணக்கிடப்பட்ட உண்மையான முடிவுகளை மதிப்பாய்வு செய்து, அத்தகைய இடர் பணிப்பாளர்கள் குழுவால் வரையறுக்கப்பட்ட விவேகமான வரம்புகளை மீறினால் குறிப்பிட்ட இடர்களின் விளைவுகளைத் தணிக்க உடனடி திருத்த நடவடிக்கை (களை) எடுத்துக் கொள்ளுதல்.

21. பல்வேறு வகை இடர்களுக்கு எதிராக நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்கள் மற்றும் வரம்புகளை மதிப்பாய்வு செய்து ஒப்புதல் அளித்தல் மற்றும் அவை தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப உள்ளதா என்பதையும், பணிப்பாளர்கள் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விரும்பிய கொள்கை நிலைகளையும் உறுதிப்படுத்தல்.

22. இடர்களை அடையாளம் காணத் தவறியதற்கும் "உள்ளகக் கட்டுப்பாடுகளுடன்" வழிகாட்டுதல்களுக்கு இணங்காத மற்றும் குழு பரிந்துரைத்தபடி உடனடியாக சரியான நடவடிக்கைகள், ஒழுக்காற்று நடைமுறைகளை எடுக்கத்தவறிய குறித்த பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

23. வணிக நடவடிக்கைகளின் அனைத்துத் துறைகளிலும் வங்கியின் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் இணங்குவதை மதிப்பிடுவதற்குமான இணக்க செயற்பாட்டின் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல்.

24. வணிக தொடர்ச்சி மற்றும் அனர்த்த மீட்பு திட்டத்தை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்தல்.

25. வங்கியின் உள் மூலதன போதுமை மதிப்பீட்டு செயல்முறையை மீள்பார்வை செய்து ஒப்புதல் அளித்தல்.

26. வங்கியின் முக்கிய செலவுத் திட்டத்தின் படி வாரியத்திற்கு அறிவிப்பு தேவைப்படும் மூலதன பங்களிப்புகளை மதிப்பாய்வு செய்தல்.

27. ஒரு குறிப்பிடத்தக்க நெருக்கடியான நிகழ்வு ஏற்பட்டால், வணிகங்கத்தில் அதன் நெருக்கடியின் தாக்கத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, நிர்வாகத்தால் தொடரப்பட வேண்டிய சாத்தியமான விடயங்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்தல்.

28. கணக்காய்வுக் குழுவுடன் கலந்தாலோசித்து, குறைந்தபட்சம் ஆண்டுதோறும் நிர்வாகத்துடன் மதிப்பாய்வு செய்து விவாதித்தல்.

29. சபை கோரியபடி BIRMC சாசனம் தொடர்பான பிற செயற்பாடுகளைச் செய்தல்.

பட்டயத்தின்படி, BIRMC இன் பிற பொறுப்புகள் பின்வருமாறு.

1. கணக்காய்வுக் குழு அதன் சட்டரீதியான, ஒழுங்குமுறை மற்றும் பிற பொறுப்புகளைச் செய்ய அனுமதிக்கப்பட தேவையானதாக மற்றும் பொருத்தமானதாக இருப்பதால் குழுவானது வாரிய கணக்காய்வுச் சபை குழுவுடன் (BCA) தகவல்களைத் தொடர்புகொண்டு பகிர்ந்து கொள்கிறது.

2. குழு மற்றும் நிர்வாகத்தின் பதில்களின் எல்லைக்குள் உள்ள விடயங்கள் தொடர்பான ஒழுங்குமுறை தேர்வு அறிக்கைகளின் நகல்களை குழு பெறுகிறது.

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை தொடர்ச்சி

டீஐசுஆஇ இன் கூட்டங்கள்

டீஐசுஆஇ காலாண்டு அடிப்படையில் சந்திக்கிறது மற்றும் டீஐசுஆஇ உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு -

For Q 1st, 2nd, 3rd, 4th & 5th BIRMCs -

பணிப்பாளரின் பெயர்	கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை / கலந்து கொள்ள வேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கை)
திரு. எச்.சீ.டி.எல். சில்வா (குழுவின் தலைவர்)	4/5
திருமதி. டபில்யூ.சீ.என். குரே	4/5
திரு. எஸ். கலபதி	4/5
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார (மாற்று அலுவலர்)	விடுப்பு வழங்கப்பட்டது

இந்த ஆண்டில், குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில், வணிக நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் அபாயங்களை நிர்வகித்தல் போன்ற சிரேஸ்ட நிர்வாக பணியாளர்களுடன் டீஐசுஆஇ மிகவும் நெருக்கமாக பணியாற்றியது.

அறிக்கையிடல்

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் விதப்புரையுடன், சபையின் பார்வைகள், இசைவு மற்றும் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை சபையிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவில் முன்மொழியப்பட்டவகைள் மற்றும் கலந்துரையாடப்பட்டவை சபைக்கு அறிக்கையிடப்பட்டது. குறிப்பிட்ட வருடத்தில் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் வழங ்கப்பட்ட விதப்புரைகள் பணிப்பாளர் சபை மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. சபைக்கு அவசியமான போது தகவல்களுடன் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் கூட்டக் குறிப்புகள் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.



திரு. எச்.சீ.டி.எல். சில்வா
தலைவர் - சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு




நாங்கள் எவ்வாறு பெறுமதியை உருவாக்குகின்றோம்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் 60

மனிதவள முகாமைத்தவம் 67

முன்னோக்கி ஒரு பாதை 69

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம்



நாங்கள், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில், வியாபாரத்தின் வளர்ச்சியை நோக்கிய பயணத்திற்கும் அதன் வணிக அபிலாஷைகளை அடைவதற்கும் வினைத்திறனுள்ள இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளோம்.

2021ஆம் ஆண்டில், ஒரு வலுவான மற்றும் திறமையான இடர் நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக நிறுவன அளவிலான இடர் முகாமைத்துவ கட்டமைப்பை (ERMF) அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவுவதற்குமான எங்கள் முயற்சிகளைத் தொடர்ந்தோம். திட்டமிடப்படாத நிதி மற்றும் செயற்பாட்டு சவால்களுக்கு எதிராக வங்கியைப் பாதுகாப்பதுடன், நியாயமற்ற விளைவுகளில் இருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாத்து, அனைத்து பங்குதாரர்களுக்கும் நன்மையினை அளிக்கும் வகையில், உபாயமார்க்க இலக்குகளை அடைவதில் இது ஒருங்கிணைந்த பாத்திரத்தை வகிக்கின்றது.

வங்கி முழுவதிலும் ஒரு நிலையான மற்றும் வினைத்திறனான வழியில் இடர்களை முகாமைப்படுத்துவதற்கு பொருந்தும் வகையில் நிறுவன அளவிலான இடர் முகாமைத்துவ கட்டமைப்பு பல்வேறு செயல்முறைகளை உருவாக்குகின்றது. இடர் முகாமைத்துவத்தின் பிரதான ஆக்கக்கூறுகள் இடர் தொடர்பான மதிப்பீடு, கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் சார்ந்த செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு இடர் முகாமைத்துவ கட்டமைப்பை, மீளாய்வு செய்து அங்கீகரித்துள்ளதுடன், இது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

- இடர் கலாச்சாரம் - பெறுமதி மற்றும் நடத்தைகளை உருவாக்குவதற்கு இடர் முகாமைத்துவத்தின் முன்னுரிமைகளை தீர்மானித்தல், இது வங்கியின் இடர் தீர்மானத்தை வடிவமைக்கும்.
- இடர் அவா: வங்கியின் வாடிக்கையாளர்களை நோக்கி நிலைபேற்றையும் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் பாதுகாப்பான வங்கியாக தொழிற்பூத்துவதற்கு வங்கியின் உபாயமார்க்க நடவடிக்கைகளை வழங்குவதகும் வங்கியால் உள்வாங்கக்கூடிய இடரின் அளவு.
- கொள்கை மற்றும் ஆளுகை - வினைத்திறனான தீர்மானங்களை எடுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இடர்களைக் கருத்தில் கொள்ளல் மீது வங்கி எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- இடர் மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடு - வங்கி எவ்வாறு இடர்கள்.'. வாய்ப்புகளை மதிப்பிடும் மற்றும் அவதானிக்கும் மற்றும் போதியளவு கட்டுப்பாட்டு பொறிமுறையின் ஊடாக அடிக்கடி நிகழும் இடர்களைக் கட்டுப்படுத்தும்.
- இடர் நிகழ்வுகள் - எதிர்பார்க்காத நிகழ்வுகளுக்கும் மற்றும் அந்த நிகழ்வுகளால் எழும் எதிர்பார்க்காத பெறுபேறுகளுக்கும் வங்கி தன்னை எவ்வாறு தயார் செய்யும் மற்றும் பதிலளிக்கும் மற்றும் ஒரு நிகழ்வு பிழையான வழியில் செல்லும் போது அதனை தடுப்பதற்கும் அதே நிகழ்வு மீண்டும் நிகழாது இருப்பதற்கும் பதிலளிப்பதற்கு எடுக்கும் செயற்பாடுகள்.
- கணக்காணிப்பு மற்றும் உத்தரவாதம் - கட்டுப்பாடுகள் உரிய முறையில் உள்ளன என்பது தொடர்பாக அதன் செம்மை மற்றும் வினைத்திறனை வங்கி எவ்வாறு பரிசீலிக்கும்.


இடர் முகாமைத்துவத்திற்கான வங்கிகளின் அணுகுமுறை மூன்று வகையன பாதுகாப்பு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது, இது முகாமைத்துவம் மற்றும் இடர் கட்டுப்பாட்டுக்கான நேரடிப் பொறுப்பு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் செயற்திறன் மற்றும் ஒருமைப்பாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பு மற்றும் முதல் மற்றும் இரண்டாவது வரிகளுக்கிடையே சுதந்திரமான உத்தரவாதத்தை வழங்குதல் ஆகியவற்றை வேறுபடுத்த முயல்கின்றது.

வங்கியின் இடர் ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் முகாமைத்துவ கட்டமைப்பு வணிக செயல்பாடு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு இணக்கம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. வங்கிக்கு எதிரான ஏற்றுக்கொள்ள முடியாத இடர் வெளிப்பாட்டைத் தடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் இந்த மூன்று வரிசைப் பாதுகாப்பு தொழிற்படுத்தப்படும். பொறிமுறையின் முக்கிய செயற்பாடாக சபை இருப்பதுடன் சிரேஸ்ட முகாமைத்துவம் இடர் முகாமைத்துவம், இடர் அளவீடு மற்றும் கண்காணிப்பு கட்டுப்பாடு என்பற்றுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வரையறுப்பதுடன் ஊடாக மேற்கொள்வதுடன் மூன்றாவது நிரலில் சுயாதீன கணக்காய்வின் ஊடாக பாதுகாக்கப்படுகின்றது.

அரச சந்தை மற்றும் செயற்பாட்டு அபாயங்களுக்கு பொறுப்பான இடர் மேலாண்மை கொள்கைகளையும் நடைமுறைகளையும் வரையறுத்துள்ளது. அதன் இணக்கத்தை உறுதிப்படுத்த கொள்கைகள் மற்றும் அமைப்புகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. வங்கியின் நிறுவன அமைப்பானது ஆபத்தை மேற்கொள்ளும் மற்றும் நிர்வகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளை தெளிவாக வரையறுக்கின்றது. திறன் மேம்பாடு மற்றும் மீளாய்வு முறைகள் மூலம் வங்கியில் உள்ள இடர் முகாமைத்துவக் கருத்துகளை உள்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை செயல்பாடு, நிறுவனத்திற்கு இடையில் இடர் ஆபத்து தொடர்பாக பார்க்க பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளது.



இடர் நாட்டம்

வங்கியின் இடர் நாட்டமானது, அதன் மூலோபாய இலக்குகளை அடைவதில் வணிகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள இடர் சராசரி குறைந்தபட்ட தேவையை ஈடுசெய்வதற்கு வங்கியின் விருப்பத்தை வரையறை செய்கின்றது. ஒழுங்குமுறைத் தேவைகள் மூலோபாய இலக்குகள், மூலதனப் போதுமை மற்றும் பிற விவேகமான காரணிகள் ஆகியவை குழுவால் ஆபத்து நாட்ட அறிக்கையை வரையும் போது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

வங்கியின் இடர் நிர்வாகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது. இடர் நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை வரம்புகளை வெளிப்படுத்தும் பொருட்டு குழு தர மற்றும் அளவு நடவடிக்கைகளை உருவாக்கும். சபையினால் உருவாக்கப்பட்ட உபாயமார்க்க வழிகாட்டல்களை கொள்கைகளாகவும் நடைமுறைகளாகவும் உருமாற்றுவதும், அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வினைத்திறனுள்ள படிநிலையை உருவாக்குவதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கடமையாகும்.

வங்கியின் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் இந்த கொள்கைகள் சரியாக ஒழுங்கை தொடர்புபடுத்தி, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிந்துள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இடர் சகிப்புத்தன்மையானது அளவிடக்கூடிய இடர்களுடன் தொடர்புடையது பொதுவாக வங்கி சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தரமான அபாய இடர் தவிர்ப்பு நடவடிக்கைகள் வழிகாட்டுதல்களாக அறிவிக்கப்பட்டு, இவை நிர்வாக வணிக முடிவுகளிலிருந்து வருகின்றன.

வங்கியின் இடர் நாட்டம், இடர் முகாமைத்துவ செயற்பாட்டினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றதுடன் அது அன்றாடம் பணிப்பாளர் சபைக்கு, கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கு மற்றும் உரிய குழுக்களுக்கு அறிக்கையிடும்.

இந்தக் கொள்கைகளை உள் மற்றும் புறச்சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, பணிப்பாளர் சபை அவ்வப்போது இந்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்து, அதற்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்தல் வேண்டும்.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் சட்டகத்தில் இடர் நாட்ட அறிக்கைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

இடர் விழிப்புணர்வுக்கான கலாச்சாரம்

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள கொள்கைகள் ஒழுங்கான முறையில் தொடர்புபடுத்தப்பட்டு, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிக்கப்பட்டன என்பதை வங்கின் சிரேஸ்ட முகாமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அளவுபடுத்தக்கூடிய இடர்களுக்கு தொடர்புடைய இடர் சகிப்புத்தன்மையானது பொதுவாக வங்கியின் சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் என அறிவுறுத்தப்படும். முகாமைத்துவ வியாபார தீர்மானங்களில் இருந்து ஊகிக்கக்கூடிய மற்றும் வழிகாட்டல்களாக பண்பார்ந்த இடர் நடவடிக்கைகள் அறிவிக்கப்படும். சிரேஸ்ட முகாமைத்துவம் / பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் இடர் உள்ளதென்பதை வியாபார வரிசை முகாமையாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் சகிப்புத்தன்மைகளுக்கு விதிவிலக்கு எதுவாக இருந்தாலும், சிரேஸ்ட முகாமைத்துவம் - பணிப்பாளர் சபை முறையான திருத்த நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இந்த விதிவிலக்குகள் இடர் முகாமைத்துவம் தொடர்பான முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் தகுதியை மதிப்பிடுவதற்கான ஒரு உள்ளீடுகளாகவும் செயல்படுகின்றன.

வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகத்தினுள் இடரினை முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களில் பங்குபற்றும் மற்றும் இடர்களை தெளிவாக விளங்கிக்கொண்டு முகாமைத்துவம் செய்யும் ஊழியர்களுக்கு வங்கி இடர் விழிப்புணர்வு தொடர்பான கலாச்சாரத்தை உருவாக்க எண்ணியுள்ளது.

வங்கி இடர்களை எடுத்துக்கொள்ளும் அல்லது முகாமைத்துவம் செய்யம் ஊழியர்களை அதனை தெளிவாக விளங்கிக் கொண்வதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ சட்டகத்தினுள் இடர்களை முகாமைத்துவத்திற்காக தீர்மானங்களை எடுப்பதில் பங்குபற்றுபவர்களுக்கு இடர் விழிப்பணர்வு கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

உலகலாவிய நோய்ப்பரவல்

2021ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்த கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கம் உடல் நலம் மற்றும் நல்வாழ்வு பற்றிய கவலைகளை தொடர்ந்து எழுப்பியதுடன் உலகளாவிய பொருளாதாரத்தை எதிர்மறையாக தாக்கியது. தொற்றுநோயின் விளைவுகள், வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் இதன் காரணமாக பாரிய சவால்களை எதிர்கொண்டனர், அதன் காரணடாக வளர்ச்சி மற்றும் நிலைபேற்றின் இளவு மட்டம் நலிவடைந்தது.

சவால்களின் மத்தியிலும், வங்கி இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை செயல்படுத்த விரிவான நடவடிக்கைகளை எடுத்ததுடன் முன்னிருக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகளை அமுல்படுத்தியது. வங்கியின் அணுகுமுறை முக்கியமாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தியது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

- வங்கி ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு மற்றும் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகளை வங்கிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கின்றதுடன் மாற்று வேலை இடத்தை வழங்குவதற்கான வியாபார தொடர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இடர் மீட்பு தளங்களை வலுப்படுத்தல்.

  வாடிக்கையாளர்களுக்கு இடையூறு இல்லாத சேவையை வழங்க வியாபார நடவடிக்கைகளைத் தொடரும் போது ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவை

- குறைந்த பட்ச டிஜிடல் சேவையின் இயளவு காரணமாக, தொடர்ச்சியான கிளை வலையமைப்பின் தொழிற்பாடு அத்தியாவசியமானதாகும

  நாட்டின் நிதியில் முறைமையில் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் போது நோய்ப்பரவலினால் கடுமையாக தாக்கமுற்ற கைத்தொழிற்துறைகளை விளங்கிக்கொள்வதற்கும் மீளாய்வு செய்வதற்கு வங்கி தன் கவத்தை செலுத்துகின்றது.

  வங்கிக்கு பணம் செலுத்தும் முறைகளை எளிதாக்குவதற்காக திருப்பிச் செலுத்தும் விருப்பங்கள் வலுப்படுத்தப்பட்டன (அதாவது அரசுக்குச் சொந்தமான பிற வங்கிகள் மூலம் பணம் செலுத்துதல்).

உபாயமார்க்க நடவடிக்கைகளை அடைதல்

- நாட்டின் பொருளாதார நிலைமையில் குறிப்பிடக்கூடிய மாற்றத்தைக் கவனத்தில் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான உபாயமார்க்க திட்டத்தை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தது.

  வங்கியின் செயற்படாத தொத்தில் கவனம் செலுத்துதல் தடையை உறுதி செய்யும் போது மீட்பு முகாமைத்துவத்தை புரிந்துசொள்ள மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் அழுத்த சோதனைகள் வியாபார இலாபத்திற்கும் மூலதனத்திற்கும் ஏற்படும் தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு வங்கிகளின் கடன் தரம் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டது.



2021 இல், கோவிட் தொற்றுநோயின் எதிர்மறையான விளைவுகளுக்கு மேலதிகமாக, பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கான கொள்கை மாற்றங்கள், டிஜிடல் சேவையில் வங்கியின் பலவீனங்கள் என்பன வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட மேலும் சில சுமைகளாகும். இந்த சவால்கள் நெருக்கடியான பொருளாதாரம் மற்றும் செயல்பாட்டு இடைவெளிகள்/ அமைப்பு காரணமாக குறைக்கப்பட்ட கடன் வளர்ச்சி மற்றும் வாழ்க்கை செலவு அதிகரிப்புடன் ஒழுங்குமுறை உத்தரவுகளில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாக்கப்பட்ட சிக்கல்கள் வங்கித்துறையில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியது.

பிரதான இடர்கள் மற்றும் அதனை எவ்வாறு நிவர்த்தி செய்வது

பொருளாதார சுழற்சியில் நாம் நகரும் போது எங்களுடைய பிரதான இடர்களும் மற்றும் இடர் பட்டியலும் உருவாகின்றன. 2021இல் இந்த இடர்களை நாங்கள் எவ்வாறு சமாளித்தோம் மற்றும் அளவிட்டோம் என்பது தொடர்பாகவும் அது தொடர்பாக அடையப்பட்ட முன்னேற்றத்தின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன் இடர்

வங்கியின் கடன் பெறுனர் ஒருவர் அல்லது எதிர்தரப்பினர், ஒப்புக்கொண்ட விதிமுறைகளுக்கு அமைவாக தனது கடப்பாடுகளை சந்திக்க தவறும் போது உருவாகும் சாத்தியமுள்ள இடர், கடன் இடர் என எளிமையாக வரையறுக்கப்படுகின்றது.


இடர் குறைப்பு	பிரதான இடர் காட்டி	வர்ணிப்பு
• கடன் கொள்கை மற்றும் கடன் கையேடு கீழ்மட்ட வழிகாட்டலையும் விவேகமான கடன் வழங்குவதற்கான வழிமுறைகளையும் வழங்குகின்றது. • இடர் அவா வரம்புகளுக்குள் அந்தக் கடன் வழங்கப்படுகின்றது என்பதை ஒரு வலுவான கடன் இடர் கட்டமைப்பு உறுதி செய்கின்றது மற்றும் மீறல் இருந்தால் பொருத்தமான சரிசெய்தல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆளுகைக் குழுக்களின் ஊடாக பின்பற்றுவது தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. . • வருமான மூலங்களின் நம்பிக்கையான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு வருமான மூல சரிபார்ப்பு மாதிரி உள்ளடங்களாக வருமான ஆய்வுக்கான சிறப்பு பிரிவு உள்ளடங்களாக சரிபார்ப்பு மாதிரி வாடிக்கையாளர் திரையிடல் மீதான வலுவான நடைமுறைகள் பின்பற்றப்படுவதுடன் கடன் தரத்தை உறுதிப்படுத்த கடன் விநியோகத்திற்கு முந்தைய மதிப்பாய்வுகளுக்கான தனி அலகு உள்ளது • அனைத்து சில்லறை வாடிக்கையாளர்கள் மீதும் கடன்பெறுனர் வீதம் பிரயோகிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட குறுமட்டத்தின் மேல் உள்ள அனைத்துக் கட்னகளுக்கும் இடர் முகாமைத்துப் பிரிவினால் சுயாதீன மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது மற்றும் கடன் இடர் முகாமைத்துவச் சட்டகத்தின் தரத்தினை மேம்படுத்தல் தொடரப்பட்டது • துறை, பண்டம் மற்றும் இடர் வீதம் தர ரீதியான கண்காணிப்பு உள்ளடங்களாக போர்ட்போலியோ பகுப்பாய்வு	 	• இந்த வருடம் 10% வளர்ச்சியை பதிவுசெய்த தனிப்பட்ட கடன்கள் கடன்கள் மற்றும் முற்பணப் பட்டியிலை ஆட்சிசெய்து வளர்ச்சியை வெளிளப்படுத்தியதில் 44% வீத கடன் பட்டியல் ஈட்டின் ஊடாகவும் நீகு கடன்களின் காசு மீள்திருப்பத்தின் ஊடாகவும் உருவாகியுள்ளது. • 2020இல் செயற்படுத்தப்படாத கடன்களின் வீதம் உச்சளவாக இருக்கையில், மீட்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டமையினால், 2021இல் செயற்படாத கடன்களின் வீதத்தின் வீழ்ச்சியைக் காட்டியது. இதற்கு முந்தைய ஆண்டில் இருந்த 10.71% வீதத்துடன் ஒப்பிடுகையில் நீகு அல்லாத மொத்த செயற்படாத கடன்களின் வளர்ச்சி 9.19% வீதமாக இருந்தது. • பல்வேறுபட்ட துறைகள் மற்றும் கைத்தொழிற்துறைகளில் நுழையும் நோக்குடன் வங்கி அதன் கவனத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி / வியாபார கடன்களில் அதிகரித்துள்ளது. • அனைத்து கடன்பெறுனர் தரப்படுத்தல் மாதிரிகளும் முழுமையான மீளாய்வின் ஊடாக மேம்படுத்தப்பட்டதுடன் அதற்கு சமாந்தரமாக வினைத்திறனா அமுல்படுத்தலுக்கான ஓட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. வியாபார கடன் தரப்படுத்தல் மாதிர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அமுல்படுத்தலுக்கு முன்னர் பரீட்சாத்த மட்டத்தில் உள்ளது.


ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

இடர் குறைப்பு	பிரதான இடர் காட்டி	வர்ணிப்பு
• சகிப்பு வரம்புகளுடனான பிரதான இடர் காட்டிகள் மற்றும் ஏனைய பிரதான வீதங்கள் காலத்திற்கு காலம் மதிப்பிடப்படுவதுடன் BIRMC க்கு அறிக்கையிடப்படுகின்றது. • மீட்பு செயற்பாடுகளை பலப்படுத்துதல் மற்றும் பிரச்சினைக்குரிய கடன்களின் வகைகளாக முன்னச்சரிக்கை / கையாளல் பட்டியலை அறிமுகப்படுத்தல்.		• 2022இல், கடன், இடர் முகாமைத்துவத்தின் கீழ் பின்-பகிர்ந்தளிப்பு கண்காணிப்பு மற்றும் பின்னூட்டலை மேம்படுத்துவதற்கு வங்கி தன் கவனத்தை செலுத்தியுள்ளது.

திரவத்தன்மை இடர் உள்ளடங்களாக சந்தை இடர்


சந்தை இடர் என்பது சந்தை விகிதங்கள் அல்லது விலைகளின் அசைவு காரணமாக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் இருந்து பெறப்படும் வருமானம் அல்லது பெறுமதி ஆகும். காசுப்பாய்ச்சல் இடர் என்பது தற்போதைய அல்லது எதிர்காலத் தேவைகளை அல்லது எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்ய போதுமான காசுப்பாய்ச்சலைக் கொண்டிருக்காததால் ஏற்படும் இடராகும்.

இடர் குறைப்பு	பிரதான இடர் காட்டி	வர்ணிப்பு
• சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு மற்றும் முதலீட்டுக் கொள்கை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்தவக் கட்டமைப்புடன் இணைந்து வழிகாட்டலை வழங்குவதுடன் • சகிப்பு எல்லையை கண்காணிப்பு மற்றும் எதேனும் மீறல்கள் அறிக்கையிடப்பட்டால் அவசிய நடவடிக்கைகளுக்கு உரிய அதிகாரிகள் • வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்பகளின் கட்டமைப்புக்கு / கலவையை கண்காணிப்பு செய்வதற்கும் அதிகரிக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் பலவை மற்றும் அவசியமான முதிர்ச்சி பட்டியல் மீது தீர்மானம் எடுக்கும் வேளையில் வைப்புகள் மற்றும் முற்பணங்களுக்கு பண்ட விலையிடல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கும் SMIB யின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு பொறுப்பாகும் • அவசியமான சரியான செயல்பாடுகளை அடையாளம் காண்பதற்கு திரவத்தன்தை இடர் மற்றும் வட்டி வீத இடர்களை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல் • தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உபாயமார்க்க தீர்மானங்களை எடுப்பதற்கும் சந்தை அபிவிருத்தி மற்றும் போக்கினை நெருக்கமாக கண்காணித்தல்		• வங்கியின் முதன்மையான நிதியில் மூலம் வைப்புகளின் ஊடாக மேற்கொள்ளப்படுவதால், வங்கிக்கு பிரதான சந்தை இடராக வட்டி வீத இடர் அமைந்துள்ளது. • வங்கியின் பிரதான வியாபாரத், வீட்டு நிதி என்பதனால் பொதுவாக நீண்ட கால கடன் வழங்கலாக இருந்தபோதிலும், வங்கியின் வைப்பு போர்ட்போலியோ போக்கு பொதுவாக குறுகியதில் இருந்து நடுத்தரமானமாக இருக்கும். • பெரும்பாலும் அதன் பொறுப்புகள் வழக்கமான மீள்விலையிடலின் கீழ் இருக்கையில் வங்கி முக்கியமாக நிலையான வீதத்தில் தொழிற்படுகின்றது. அதிகரித்த வட்டி செலவு அதிகரித்தமையினால் எல்லையானது குறிப்பிட்டளவில் பாதிப்படைந்ததுடன் இந்த பொருத்தமின்மையை தீர்ப்பதற்கு உபாயமார்க்கங்களைவ ங்கி கருத்தில் கொள்கின்றது. • இந்த பொருத்தமின்மையை இல்லாமல் செய்வதற்கும் வாடிக்கையாளர் தேவைகளுடனும் சந்தை நிலைமைகள் இணங்கும் வகையில் இந்த வருடம் பல்வேறுபட்ட புதிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பண்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன

இடர் குறைப்பு	பிரதான இடர் காட்டி	வர்ணிப்பு
• ஒரு தொடர் வீத சாந்தர்ப்பங்களின் மீது ஏற்றுக்கொள்ளக்கூடிய வீச்சுக்குள் சந்தை இடர் உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு தொடர் உள்ளக அழுத்தப் பரிசோதனைகளை இந்த வங்கி தொழில்படுகின்றது. • வழமையான காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்கள், திரவமாக்கல் வீதம் மற்றும் முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு என்பவற்றின் ஊடாக வங்கி திரவத்தன்மை அசைவுகளைக் கணக்காணிக்கின்றது. • திரவத்தன்மை பிரச்சினைகளை ஒரே இடத்தில் கையாளுவதற்கு தற்செயல் நிதியிடல் திட்டத்தை பராமரிக்கின்றது. • மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்ட மட்டத்தின் மேல் திரவத்தன்மை சொத்துக்களைப் பராமரித்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கு திறைசேரித் திணைக்களம் பொறுப்பாக உள்ளது.		• அதிகரித்த வங்கி வலையமைப்பு ஊடாக சில்லறை வைப்புகளின் அணுகல் அதிகரித்துள்ளது எனினும் மொத்த வைப்புகளின் வலுத்தன்மை குறைந்துள்ளது.

மூலதன இடர்

போதியளவு மூலதன வளங்கள் இல்லாமையினால் அதன் உபாயமார்க்க திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாட்டினை அடைவதற்கு வங்கிக்கு இயலாமல் போவதற்கான இடர் மூலதன இடராகும்.

இடர் குறைப்பு	பிரதான இடர் காட்டி	வர்ணிப்பு
• மூலதன உபாயமார்க்கத்தின் ஊடாக மேலும் ஆளுகை செய்யப்படும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் அவாவினால் மூலதன இடர் கட்டுப்படுத்தப்படுகின்றது. • தற்போதைய மற்றும் எதிர்பாக்கப்படும் மூலதன நிலை தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதுடன் ICAAP யின் ஒரு பகுதியாக அழுத்த சந்தர்ப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படும் • அழுத்த சந்தர்பங்களில் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளை வங்கி பராமரிப்பதற்கு வங்கி அனுமதிக்கக்கூடிய அனைத்து நேரங்களிலும் போதியவு மூலதனம் கிடைக்கப்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கி ஒரு தொடர் உள்ளக அழுத்தப் பரிசோதனைகளை தொழிற்படுத்துகின்றது.		• 31.12.2021 அன்று SMIBயின் அடுக்கு I மூலதன வீதம் 23.9% வீதமாவதுடன் மொத்த மூலதன வீதம் 25.2% வீதமாகும். இந்த விகிதங்கள் சந்தை சராசரியை விட மேலாகக் காணப்படுகின்றதுடன் இடர் அகத்துறிஞ்சலுக்கான பலமான இயலளவை அது குறிப்பிடுகின்றது. • நடைமுறையில் மற்றும் முன்கணிப்பு எனும் இரண்டு நிலைகளிலும் வங்கி பலமான மூலதன நிலையைப் பேணுகின்றதுடன், 2020இன் இறுதியில் குறைந்தபட்ச மூலதனப் போதுமையான ரூபா 7.5 பில்லியனை அடைவதற்கு வங்கி அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

இடர் குறைப்பு	வர்ணிப்பு
• செயல்பாட்டு இடர் நிகழ்வுகள், ஒவ்வொரு செயற்பாட்டு அலகுகளிலும் நியமிக்கப்பட்ட அலுவர்களினால் இடர் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்படுகின்றதுடன் அது தொழில்முயற்சி பரந்த இடர் முகாமைத்துவ கட்டமைப்பினால் நிர்வகிக்கப்படுகின்றது. • நட்ட நிகழ்வுகள் சேகரிக்கப்பட்டு வியாபார செயற்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்வுதற்கு நட்டத்தை அடையாளம் காணும் தரவுத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல்கள் கற்றுக்கொண்ட பாடத்திற்கு அமைவாக தடுப்பு நடவடிக்கைகளை முன்மொழிவதற்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. • உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கும், வினைத்திறனான சேவையை வழங்குவதற்கும் செம்மையான தீர்மானங்களை எடுப்பதற்கு வசதியளிப்பதற்கும் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை என்பவற்றை மேம்படுத்தவதற்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை வங்கி ஆரம்பித்துள்ளது. • இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு செயன்முறையின் வழிகாட்டல்கள் கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுவதுடன், அது கட்டாயமாகப் பின்பற்றப்படுதல் வேண்டும் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகளின் தொகுதி பொருத்தமானதா எனத் தீர்மானிப்பதற்காக உத்தரவாதம் இருத்தல் வேண்டும். • குறைந்தபட்ச இழப்புடன்கூடிய எதிர்பாராத பேரழிவில் இருந்து மீள்வதற்கு திறம்பட திட்டமிட்டு வங்கி அதன் வியாபார தொடர்ச்சியை தொடரந்து நடத்துகிறது. • நிதியியல் குற்ற இடர் உள்ளடங்களாக இணக்க மற்றும் நடத்தை இடர், ERMF ஊடாக மேலும் நிர்வகிக்கப்படும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் அவாவினால் கட்டுப்படுத்தப்படுகின்றது.	• இந்த வியாபாரம் முழுவதிலும் தொடர்ச்சியான உட்பொதிதலை உறுதிப்படுத்துவதற்கு பிரதான இடர் வகைகளுக்கான கட்டுப்பாட்டு கட்டமைப்பை மேம்படுத்துதல் பிரதான முன்னுரிமையாகும். இதனுடன் எங்கல் செயல்பாட்டு பின்னடைவு முயற்சி வங்கியின் உறுதியையும் எப்போதும் மாறிவரும் அச்சுறுத்தல் விடயப்பரப்பை சந்திக்கும் அதன் திறனையும் மேலும் வலுப்படுத்துவதைத் தொடர்கின்றது. • கட்டுப்பாட்டு நட்டமைப்பின் போதுமையை முகாமைப்படுத்துவதற்கு பரந்த தொழில்முயற்சியை உறுதிப்படுத்தவதற்கு உள்ளீடு இடர் மற்றும் கட்டுப்பாட்டு மதிப்பாய்வையும் தொழிற்பாட்டு இடர் கணக்காணிப்பையும் மேலும் மேம்படுத்தவதற்கும் வங்கி திட்டமிட்டுள்ளது. • வியாபார தொடர்ச்சி நியதிகளுக்கும் ஊழியர்களினதும் வாடிக்கையாளர்களினதும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு குறிப்பிடப்பட்ட சவாலாக கோவிட் 19 நோய்ப்பரவல் உள்ளது. இந்த நிலமையைக் கட்டுப்படுத்தவதற்கு வங்கி அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. • செயன்முறை மேம்படுத்தலின் ஊடாக முறைப்பாடுகளை கணக்காணிப்பதற்கு மேலும் மேம்படுத்துவதற்கு வங்கி திட்டமிட்டுள்ளதுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு முக்கிய முறைமையையும் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அழுத்தப் பரிசோதனை மற்றும் சந்தர்ப்ப பகுப்பாய்வு

அழுத்தப் பரீட்சிப்பு என்பது வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது, மேலும் சில சாத்தியமற்ற ஆனால் நம்பத்தகுந்த நிகழ்வுகள் அல்லது நிதி மாறுபாடுகளில் அதன் அசைவுகளுக்கு அதன் சாத்தியமான பாதிப்பை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பிரதான அழுத்தப் பரிசோதனைகளாவன,

- எதிர்மறையான பொருளாதார நிலமையில், எங்கள் இடர் அவாவுக்குள் நிலையான நிதியியல் செயலாற்றுகைகளை உறுதிப்படுத்தும் வங்கி நிதியில் திட்டத்தை சோதிப்பதற்கு
- வங்கியின் மீட்பு திட்டம் மற்றும் தற்செயல் நிதித் தேர்வுகளுக்கான சந்தர்ப்ப பகுப்பாய்வு
- ICAAP யின் தயாரிப்புக்கு ஆதரவளிப்பதற்கு மூலதன நிலையைப் பேணுவதற்குமம் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் மற்றும் திரவத்தன்தை தேவைப்பாடுகளை நிறுவுவதற்கு அறிவித்தல்
- புதிய பண்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கு

எதிர்கால அபிவிருத்திகள்

எங்களின் இடர் முகாமைத்துவதக் கட்டமைப்பை தொடர்ந்து உட்பொதிப்பதன் மூலம் 2021இல் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, வங்கி தற்போதைய பாரிய பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் கோவிட் 19 இன் தொடர்ச்சியான அலைகள், உபாயமார்க்க முன்னெடுப்புகளை அடைய வங்கிக்கு தொடர்ந்து சவாலாக இருக்கும். எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் பகுதிகள், வங்கியின் டிஜிடல் தடத்தை மேம்படுத்தவதன் ஊடாக உபாயமார்க்க வரைபடத்தின் வழங்குகலை ஆதரிப்பதற்கு எங்கள் இடர் மூலதனக் குழுக்கள் எவற்றை உள்ளடக்க வேண்டும் என்பதை உள்ளடக்கும். இது தற்போதைய இடரை தொடர்ந்து உட்பொதிப்பதை உள்ளடக்கும், முகாமைத்துவ முன்முயற்சிகள், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் பெறுபேறுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட உபாயமார்க்க முயற்சிகளின் பாதுகாப்பான விநியோகத்தை உறுதி செய்தல் அனைத்து இடர் முகாமைத்துவ தலையீடுகளின் ஒரு பகுதியாக இருக்கும்.

மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவம் நிறுவனத்தின் இலாபங்களுக்கும் மதிப்பிற்கும் முக்கிய பங்களிப்பாளர்கள் ஊழியர்கள் ஆவர். ஊழியர்கள் ஐந்தொகை அல்லது ஒரு நிறுவனத்தின் கணக்குகளின் புத்தகங்களில் □சொத்து□ என்பதன் கீழ் தோன்றக்கூடும், இருப்பினும், அவர்கள் அதிகம் எந்தவொரு பண மதிப்பும் வழங்க முடியாத பெறுமதிமிக்க சொத்துக்கள் ஆவர்.

எங்கள் ஊழியர்கள்தான் எங்கள் தொலைநோக்கினை உறுதியான விளைவுகளாக மாற்றுகிறார்கள், இதனால் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கிறது. எனவே, நாங்கள் அவர்கள் சிறந்து விளங்க எல்லாவற்றையும் உள்ளடக்கிய மற்றும் ஊக்கமளிக்கும் பணியிடத்தை வழங்குவதை உறுதிசெய்கிறோம், அதே நேரத்தில் எங்கள் முதலீடுகளை பயிற்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பணியாளர் மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றோம். இதனூடாக சிறந்த மக்கள் பணியிடத்தை உருவாக்க மற்றும் பிரகாசிக்க முடிந்துள்ளது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் நாங்கள் தொடர்ந்து நிறுவனத்தின் வளர்ச்சியை வளர்ப்பது மற்றும் தக்கவைத்துக்கொள்வதில் கவனம் செலுத்துகிறோம்.

ஊழியர்களின் பலம்

இந்த ஆண்டிற்கான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 369 ஆக இருந்தது ஒப்பீட்டளவில் சிறியது ஆனால் அவை வங்கியின் செயற்திறனுக்கு அதிக அளவில் பங்களித்தன. இந்த ஆண்டில் 12 பேர் வங்கியில் இருந்து ஓய்வு பெற்றனர் அதில் 03 ஊழியர்கள் வங்கியை விட்டு வெளியேறினர், மற்றும் 01 ஊழியர் வேறு காரணங்களுக்காக வங்கியை விட்டு வெளியேறினார். ஆண்டுக்கு 07 புதிய ஊழியர்களை வங்கியில் இணைத்துக்கொண்டோம். எங்கள் ஆட்சேர்ப்புக் கொள்கையின்படி உள் மற்றும் வெளிப்புற வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட்டது

பணியாட் தொகுதியின் வேறுபாடு

முகாமைத்துவ மட்டம்	வேறுபாடுகள்		
	ஓய்வு பெறல்	ராஜினாமா/ வேறு	வெளிவாரி ஆட்சேர்ப்பு
கூட்டியைந்த முகாமைத்துவம்	1	2	3
சிரேஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம்		1	1
நிறைவேற்றுத் தரம்		1	3
நிறைவேற்றுத் தரம் அல்லாத	10	3	7
ஒப்பந்த அடிப்படை			2
மொத்தம்	**11**	**7**	**16**

ஊழியர் பலம் அடுக்கு ரீதியாக

முகாமைத்துவ மட்டம்	31.12.2020ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை
கூட்டியைந்த முகாமைத்துவம்	10
சிரேஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம்	6
நிறைவேற்றுத் தரம்	111
நிறைவேற்றுத் தரம் அல்லாத	238
ஒப்பந்த அடிப்படை	2
மொத்தம்	**367**

பாலின ரீதியான விபரத்திரட்டு

வங்கித்துறையில் ஆண்கள் மற்றம் பெண்கள் இருவருக்கும், தொழில் வழங்குனராக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி இருக்கின்றறது. 2021ஆம் ஆண்டில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பாலின விபரத்திட்டுக்கு அமைவாக ஆண்கள் 50% வீதமும் பெண்கள் 50% வீதமும் காணப்பட்டனர்.

பணியாளர் வயது விபரத்திரட்டு

வங்கி அனுபவம் வாய்ந்த மற்றும் சிரேஸ்ட பணியாளர்களின் திறனைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளது. வங்கி 40 வயதிற்கும் அதிகமான 49% பணியாளர்களை கொண்டுள்ளது

வயது வகுதி	31.12.2020ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை
50 அல்லது அதற்கு மேல்	74
40 - 49	104
30 - 39	120
29 அல்லது அதற்கு மேல்	69
மொத்தம்	**367**

திறமை முகாமைத்துவம்

எங்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்கு திறமைக் குழாமொன்றைப் பேணுதல் எங்கள் கட்டாய முன்னுரிமையாகும். வங்கி அதனுடைய முழுமையான இயலுமையை உணர்வதற்கு, அவர்களை எதிர்காலத் தலைவர்களாக உருவாவதற்கு அவர்களுடைய ஆளுமையை அபிவிருத்தி செய்வதற்கு டெனமிக் குழுவில் முதலீடு செய்து வங்கியால் சிறந்த வளங்கள் கையகப்படுத்தப்பட்டு தக்கவைக்கப்படுகின்றது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

திறன் ஈர்ப்பு மற்றும் கையப்படுத்தல்

புதிய திறமை கையகப்படுத்தல் வங்கியின் ஆட்சேர்ப்பு நடைமுறை மூலம் செயற்படுத்தப்படுகிறது, இது எங்கள் வணிகத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான ஊழியரைத் தேர்ந்தெடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நமது கலாச்சாரத்திற்கு ஏற்ற மற்றும் வளர்கத் தேவையான திறன்கள், அறிவு, மற்றும் மிக முக்கியமான நடத்தைகள் கொண்ட திறமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. உள்ளகத் திறமைகளுக்கு உடனடிக் கவனம் செலுத்தப்படும் அதே வேளையில், வெற்றிடங்கள் ஏற்படும் போதெல்லாம், உள்ளகத் திறமை கிடைக்கவில்லை என்றால், சிறப்புத் திறன்கள் தேவையான மட்டங்களில் கொண்டு வரப்படுகின்றன.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஒரு பணியாளரின் அறிவு, திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவது பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் ஒரு முக்கிய கருவியாகும், இதன் மூலம் SMIB வளர்ச்சியை அடைகிறது. எங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட வியாபாரக்குறியை பலப்படுத்தும் அதே வேளையில் அவர்களின் திறன்களையும் அறிவையும் மேம்படுத்த பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை வெவ்வேறு செயற்பாடுகளில் பயிற்சியளிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வங்கி முயற்சிக்கிறது, இது அவர்கள் தங்கள் கடமைகளை சிறப்பாகச் செய்ய உதவுவதோடு எதிர்கால பொறுப்புகளுக்கும் அவர்களைத் தயார்படுத்துகின்றது.

மனித வள முகாமைத்துவம் தொடர்ச்சி

தலைமைத்துவ வரிசையை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, வங்கியின் தகுதிவாய்ந்த இளம் ஊழியர்களின் குழுவிற்கு தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் அதிக திறன் வாய்ந்த பணியாளர்களைக் கண்டறிந்து, தொழில் மேம்பாட்டு மற்றும் வாரிசு திட்டமிடல் மூலம் அவர்களை வழிநடத்தவும் தலைவர்கள் மற்றும் வழிகாட்டிகளாகவும் மிகவும் வெற்றிகரமானவர்களாக இருக்க அவர்களைப் பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டம் அவர்களுக்கு அதிக உற்பத்தித்திறன், மாற்றங்களை நிர்வகிக்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் பெரு நிறுவன இலக்குகளை அடைவதில் ஒத்துழைப்புடன் கூடிய பணிச்சூழலை உருவாக்க உதவுகின்றது. தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டம், தலைமைத்துவத் திறன், பேச்சுவார்த்தை திறன், விளக்கப்படுத்தும் திறன், பயனுள்ள எழுதும் திறன், மேலாண்மை திறன் மற்றும் வெற்றிகரமான வழிகாட்டுதல் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை வளர்ப்பதற்கான திறன்களை கவனத்தில் கொள்கின்றது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி வணிக அளவை விரிவுபடுத்தவும் மற்றும் தொழில்துறையில் மைற்கற்களை அடையவும் எதிர்பார்க்கின்றது, அதே நேரத்தில் அறிவு மற்றும் அனுபவத்துடன் நன்கு பொருத்தப்பட்ட ஒரு திறமையான உள்ளகப் பணியாளர்களை உருவாக்குகின்றது.

2021ஆம் ஆண்டில் கோவிட் - 19 இன் உலகளாவிய நோய்த்தொற்று நிலமை காரணமாக பயிற்சித்திட்டங்களை வழங்குவதும் கலந்துகொள்வதும் சவாலானதாக இருந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சித்திட்டங்களை வழங்க நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். மீளாய்வாண்டில், எங்கள் ஊழியர்களுக்கு 01 உள்ளக பயிற்சித் திட்டங்களும் 20 வெளியக பயிற்சித்திட்டங்களும் வழங்கப்பட்டன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கைத்தொழிற்துறை புத்தாக்கங்களையும் அபிவிருத்தியையும் அறிந்துகொள்வதற்காக ஊழியர்களுக்கு வெளிவாரிப் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கியது.

2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பல்வேறு வகை பயிற்சிகளில் ஊழியர்களின் பங்கேற்பை கீழே உள்ள அட்டவணை சுருக்கமாகக் கூறுகிறது

முக்கிய பகுதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
அறிவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி	114
அணுகுமுறை மேம்பாட்டு பயிற்சி□ உந்துதல் பயிற்சி	3
கருத்தரங்குகள், பட்டறைகள், உறுப்பினர் கட்டணம், வினாடி வினா போட்டிகள்	13

பணியாளர் சேவை

சேவை வகை (ஆண்டுகள்)	31.12.2021 திகதியின்படி ஊழியர்களின் எண்ணிக்கை
0-4	67
5-9	152
10-14	8
15-19	49
20 இற்கு மேல்	91
மொத்தம்	**367**

82% ஊழியர்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக வங்கியில் பணிபுரிந்துள்ளதுடன் வங்கியின் அபிவிருத்திக்கு தமது சேவைகளை வழங்கியும் உள்ளனர். நிதி சார்ந்த நன்மைகளை மட்டுமன்றி நிதி சாராத நன்மைகளையும் பணியாட் தொகுதியினருக்கு வழங்கியதன் ஊடாக அவர்களின் தொழில் திருப்தி அதிகரித்துள்ளது.

நாம் இன்றுள்ள நிலைக்கு வருவது இலகுவான காரியமல்ல. ஆனால் ஊழியர்களின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக வங்கி அனைத்தையும் அடைந்துள்ளது.

எதிர்கால விடயங்கள்

வரும் ஆண்டில் எங்களது மனிதவளத்தை சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் எங்கள் பணியாளர்களை தொடர்ந்து பலப்படுத்துவோம். பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகள் பற்றிய முழுமையான பகுப்பாய்வு எமது குழுவின் திட்டத்தில் உள்ளது, மேலும் இந்த புதிய பகுப்பாய்வின் மூலம், மேலும் ஊழியர்களின் தொழில்நுட்பம் மற்றும் மென்மையான திறன் அம்சங்களை உள்ளடக்கிய விரிவான மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சி திட்டம் பலவற்றை உருவாக்க விரும்புகிறோம். முக்கியமாக ஊழியர்கள் தங்கள் திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொள்வதில் விரும்பிய அளவை அடைவதில் கவனம் செலுத்துவதன் மூலம் அடுத்தடுத்த திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துவது குறித்தும் அடுத்த ஆண்டு கவனம் செலுத்தப்படும். சுருக்கமாக, ஒரு சிறந்த பணியிடத்தையும் அதிக திருப்திகரமான பணியாளர்களையும் உருவாக்க முயற்சிப்போம்.

ஒரு பாதையை முன்னோக்கி

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 1931 டிசம்பரில் சிலோன் ஸ்டேட் மோர்ட்கேஜ் பாங் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் கீழ் சிலோன் ஸ்டேட் மோர்ட்கேஜ் பாங் மற்றும் விவசாய மற்றும் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனம் என்பன இணைக்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது "அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது" எனும் பெயரில் தனது பணிகளை 1979 ஜனவரியில் ஆரம்பித்ததுடன் 1998 ஏப்பிரலில் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கியாக அங்கீகரிக்கப்பட்டது.

90 வருடங்கள் தேசத்திற்கான தொடர்ச்சியான சேவைக்குப் பிறகு, இன்று அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது வாடிக்கையாளர்களினால் பாராட்டப்படும் சில்லறை வங்கிப் பண்டங்கள் உள்ளடங்களாக பல்வேறு சேவைகளை வழங்கும் அரசாங்க ஆதரவு நிதி நிறுவனமாக வளர்ந்துள்ளது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி ஒரு அனுமதிபெற்ற விசேட வங்கி மற்றும் அரசுக்கு சொந்தமான வங்கி எனும் இரு போட்டித்தன்மை சிறப்புகளைக் கொண்டுள்ளமையினால் வைப்பாளர்களின் நம்பிக்கையானது, அதனுடைய புதிய கட்ட வளர்ச்சிக்கு குறிப்பிட்டளவில் உந்துசக்தியை வழங்குகின்றது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சந்தைப்படுத்தல் பிரிவு, இந்த போட்டித்தன்மை சிறப்பினை உந்துவதிலும் மற்றும் இலங்கை சந்தையில் அதன் பண்டங்கள் மற்றும் சேவைகளின் உபாயமார்க்க பன்முகப்படுத்தலின் உயர் ஊக்குவித்தலிலும் முக்கிய கருவியாக முன்னிலை வகித்தது.∴ தலைமைதாங்கியது ∴ விளையாடியது.

பொங்கி எழும் கோவிட் 19 தொற்றுநோக்கு மத்தியில் அதனுடைய குறுகிய "வீட்டு நிதி மற்றும் விவசாயம்" துறைகள் மற்றும் முன்பு பூட்டப்பட்ட ஈட்டுக் கடன்களுக்கு அப்பால் சேவைகளை வழங்குவதற்காக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் போர்ட்போலியோவின் பல்வகைப்படுத்தல் மற்றும் புதிய அறிமுகம் என்பன மேற்கொள்ளப்பட்டது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் புதிய வழங்கல்களான சேமிப்பு வைப்புகள், நிலையான வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புத் திட்டங்கள் போன்ற "கேள்வியுள்ள" நிதியியல் பண்டங்கள் வாடிக்கையாளர்களினால் சாதகமாக வரவேற்றப்பட்டன. விசேடமாக, 2001 ஒக்டோபரில் சேமிப்பு கணக்கின் அறிமுகப்படுத்தலுடன் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பண்டங்கள் மற்றும் சேவைகளின் எல்லை விரிவடைந்தது. இது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சில்லறை வங்கிச்சேவை வாடிக்கையாளர்களின் வேறுபட்ட தேவைகளுக்கு வடிவமைக்கப்பட்ட மற்ற சேமிப்பு வசதிகள் மற்றும் நிலையான வைப்புகளை வழங்குவதற்கு இது ஒரு புதிய தொடக்கமாக இருந்தது. சேமிப்பு வழங்களை விரிவுபடுத்தியதைப் போல், சிறிய வியாபாரங்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் ஏனைய கடன்பெறுனர்களுக்கு ஆதரவளிப்பதற்கான அணவலை விரிவாக்குவதற்கு அதன் கடன் பண்ட போர்பொலியோவும் விரிவுபடுத்தப்பட்டது.

முக்கியமாக, தேசிய பொருளாதார மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிப்பதற்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி இரு புதிய திசைகளில் முயற்சி செய்தது.

முதன்முதலாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி நகர மற்றும் கிராமப்புறு பிரதேசங்களில் பல்வேறுபட்ட துறைகளுகளின் தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் வீடமைப்பு மற்றும் விவசாயத்திற்கு அப்பால் பல ஏனைய வியாபார துறைகளின் அபிவிருத்திப் பண்டங்களின் மேம்பாட்டுக்கான சந்தையை மையப்படுத்தியும் தனது ஆதரவைத் திறந்தது. மீண்டும் முதற்தடவையாக நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறைக்கு, தொழில்முயற்சி அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கு அதன் நிதி சேவைகளை வழங்குவதற்காக வடிவமைத்தது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையை ஊக்குவித்தல் மற்றும் பலப்படுத்துதல் எனும் அரசாங்கத்தின் கொள்கையைப் பூர்த்திசெய்வதற்கு அவர்களுடன் இணைந்து நிதியில் வழங்கலின் ஊடாக அந்தத்துறையை பலப்படுத்துவதற்கு அடையாளம் கண்டுள்ளது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் பண்டங்கள் வாடிக்கையாளரின் வேறுபட்ட தேவைகளுக்கு பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்குமான நிலையான தீர்வுகளை அது வழங்கமாட்டாது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் உள்ளடக்கிய நிதி உபாயமார்க்கம் செலவு குறைந்த பல்வேறுபட்ட தொழில்துறைகளில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுப்படுத்த நிதி விருப்பங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் சாதகமாக உள்ளன. அதனால் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாடிக்கையாளர்களால் வரவேற்றப்பட்டன.

இந்தத்துறையை பலப்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் தொலைநோக்குக்கு உதவும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் உதவுதற்காக வங்கி பல கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சுற்றுலா மற்றும் நுண் நிதிபோன்ற பல்வேறுபட்ட ஏனைய கைத்தொழில் துறைகளில் ஈடுபடும் வேளையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளடங்களாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் முக்கிய போர்போலியோவான "கடன்கள் மற்றும் பெறுகைகள்" பன்முகப்படுத்தப்பட்டது.

நாடு முழுவதிலும் முக்கிய இடங்களில் உள்ள 25 கிளை வலையமைப்புகளின் ஊடாக அதன் சேவைகளை வழங்குகின்றது. கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கத்தின் பின்னர் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சேவைகளை வாடிக்கையாளரை மையப்படுத்திய டிஜிடல் ஊடாகத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கான தேவை அதிகரித்தள்ளது. அதன் விளைவாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சில்லறை வங்கியின் வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு வங்கியின் வலையமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. தற்போது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாடிக்கையாளராக இருந்தாலும் வாடிக்கையாளர்களுக்கு பாரிய வசதியையும் அணுகலையும் உருவாக்குவதற்கு டிஜிடலுடன் கூடிய தொடுகைப் புள்ளிகளைக் கொண்ட கிளைகளாக இற்றைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஒரு அரசங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட அனுமதிபொற்ற விசேட வங்கியாக, எங்கள் வாடிக்கையாளர்களின் வங்கித் தேவைகளின் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் வங்கிச் சேவையின் பன்முகமாக்கலைப் பூர்த்திசெய்தல் என்பவற்றுக்கு வீட்டு ஈட்டுக் கடனுக்கு அப்பால் பண்ட போர்ட்போலியோவை விரிவுபடுத்துவதன் ஊடாக அதன் நிலையை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி பலப்படுத்துகின்றது.

இந்த வகையில் வணிக தொழிற்பாடுகளை குறிப்பிட்டளவில் விரிவாக்கியபோதும், இலங்கை சமூகத்திற்கான சமூக தேவைப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி மறக்கவில்லை, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, இலங்கை சமூகத்திற்குள் விரிவடைந்த நோய்ப்பரவலின் தாக்கத்தைக் கருத்தில்கொண்டு கோவிட் 19 நிதியத்திற்கு ரூபா 5 மில்லியனை நன்கொடையாக வழங்கியது.

மதிப்பீட்டு நிறுவனமான ICRA லங்கா லிமிட்டெட் மூலம் அரச ஈட்டு மற்றும் மூதலீட்டு வங்கி இப்போது [SL] BBB+ மதிப்பிடப்பட்டிருப்பதும் மகிழ்ச்சியளிக்கிறது.



நிதியியல் தகவல்கள்

பணிப்பாளரின் அறிக்கை	71
நிதியியல் அறிக்கை மீதான உள்ளக கட்டுப்படுகள் மீது பணிப்பாளரின் அறிக்கை	75
வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகள் மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	77
நிதியியல் அறிக்கையிலுக்கான பணிப்பாளரின் அறிக்கை	79
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	81
நிதியில் நிலமைக் கூற்று	86
இலாபம் அல்லது நட்டக்கூற்று	97
உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று	98
காசுப் பாய்ச்சில் கூற்றுகள்	89
கணக்கியல் கொள்கைகள்	90
நிதிக்கூற்றகளுக்கான குறிப்புகள்	107
பத்து வருடங்களுக்கான புள்ளிவிபர சுருக்கம்	146

பணிப்பாளர்களின் அறிக்கை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி 1988ம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஒரு அனுமதியளிக்கப்பட்ட வங்கியாவதுடன், 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்தினதும் அதன் திருத்தங்களின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியாகும்.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 1975ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட 13 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்ட தேவைகளை உறுதிப்படுத்தும் விதமாக, வங்கியின் 2020 மார்கழி 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை கூற்றுக்கள் மற்றும் அந்த நிதிநிலை கூற்றுக்கள் குறித்த கணக்காய்வாளர் தலைமையின் அறிக்கையுடன் வங்கியின் விவகாரங்கள் மீதான அறிக்கையை வழங்குவதில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் சபை பெரு மகிழ்ச்சியடைகின்றது

வங்கியின் பிரதான செயற்பாடுகள்

1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாகவும், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாகவும் தலைவர் உள்ளடங்களாக ஒன்பது நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்கள். வங்கியில் நிறைவேற்றுத்தரமுள்ள எந்த பணிபாளர்களும் இல்லை. இவர்களில் மூன்று பணிப்பாளர்கள் கீழ் வரும் அமைச்சுகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் கீழ்வரும் அமைச்சர்களினால் நியமிக்கப்படுவார்கள்.

(அ) நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினால்,

(ஆ) வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினால், மற்றும்

(இ) கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்குப் பொறுப்பான ஒரு அமைச்சரினால், ஒரு பணிப்பாளர் திறைசேரி பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

சபையின் குறைவெண் வரம்பாக ஒன்பது அங்கத்தவர்களில் மூன்று அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். வங்கிச் சட்டம் மற்றும் ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கமைவாக குறைந்தபட்சம் மாதத்திற்கொருமுறை அல்லது தலைவர் அவசியம் எனக் கருதும் போது பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். 2021ஆம் ஆண்டு பதினைந்து கூட்டங்கள் நடைபெற்றதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை:

#	பணிப்பாளரின் பெயர்	வருகை தருவதற்கு தகைமையுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை	வருகை தந்த கூட்டங்களின் எண்ணிக்கை
1	டாக்டர். உதயசிறி காரியவசம் (தலைவர்)	15	15
2	திரு. எச்.சீ.எல். சில்வா	15	15
3	திருமதி. டபில்யூ.சி.என்.குரே	15	15
4	திரு. எஸ்.கே.டீ.கலபதி	15	15
5	திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	15	15
6	திருமதி. எச்.என்.என்.குணசேகர	7	7
7	திரு. கே.ஆர்.அபேசிறிவர்தன	7	7

ஒப்பந்தங்கள் தொடர்பாக பணிபாளர்களின் ஈடுபாடுகள்

தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைக் கொள்கையின் நோக்கமானது, வங்கிக்கும் அதனுடன் தொடர்புடைய தரப்பினருக்கும் இடையிலான பரிவர்த்தனைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் கைக்கெட்டிய விலைக்கையிடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதி செய்வதாகும்.

இந்த கொள்கையானது தொடர்புடைய தரப்பினரின் பரிவர்த்தனைகளின் பொருட்தன்மை தீர்மானிக்கப்படும் அடிப்படையையும், வங்கியால் தொடர்புடைய தரப்பினரின் பரிவர்த்தனைகளை கையாளும் முறையையும் கோடிட்டுக்காட்டுகிறது. வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி வழங்கிய உத்தரவுகளுக்கு இணங்க வங்கியின் தொடர்புடைய தரப்பினர் பரிவர்த்தனைக் கொள்கையை வங்கி பின்பற்றியது.

வங்கியுடன் எந்தவொரு பணிப்பாளரும் அல்லது பணிப்பாளரின் மனைவி அல்லது தங்கியிருக்கும் பிள்ளை அல்லது பிள்ளைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டிருக்கவில்லை. பணிப்பாளர்கள் தாங்கள் வகிக்கும் ஏனைய பணிப்பாளர் பதவிகள் மற்றும் தொடர்புகள் பற்றி சபைக் கூட்டத்தின் போது வெளிப்படுத்துவதனூடாக அவ்வாறான விடயங்கள் தொடர்பான வாக்கெடுப்புகளில் அவர்களது ஈடுபாடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். 2021 டிசம்பர் 31இன் முடிவில் எவ்விதமான தொடர்புடைய தரப்பினரின் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படவில்லை

தொழிற்பாட்டு மீளாய்வு மற்றும் எதிர்கால அபிவிருத்திகள்

2021 ஆம் நிதியாண்டில் வங்கியின் நிதி மற்றும் தொழிற்பாட்டு செயல்திறன், எதிர்கால முன்னேற்றங்கள் பற்றிய கண்ணோட்டம் மற்றும் அந்த நடவடிக்கைகளின் முடிவுகள் இந்த ஆண்டு அறிக்கையில் முறையே 06 முதல் 17 பக்கங்களில் உள்ள தலைவர் அறிக்கை, பொது முகாமையாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி அறிக்கை மற்றும் நிதி மதிப்பாய்வு ஆகியவற்றில் உள்ளன. இந்த அறிக்கைகள் இந்த ஆண்டு அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர்

வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக பொது முகாமையாளராக இருப்பதுடன், அவர் வங்கியின் உயர் மட்ட தரத்தில் உள்ள நபராக இருப்பார். அவர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கவும்படுகின்றார். வங்கியின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்கள், கூட்டிணைந்த பெறுமதிகள் மற்றும் முழுமையான இடர் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றை வங்கியின் வியாபாரத்துடன் இணைந்த நாளாந்த நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார்.

பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்ச்சி

தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பெறுமதிகள்

வங்கியில் நடைபெறும் ஒவ்வொன்றுக்கும் தொலைநோக்கு, செயற்பணி, மற்றும் பெறுமதி கூற்றுக்கள் வழிகாட்டல்களை வழங்குகின்றன. ஒவ்வொரு நபரும் வங்கி எங்கு செல்கின்றது மற்றும் எதனை அடைய முயலுகின்றது என்பது தொடர்பாக கவனம் செலுத்துகின்றனர். அத்துடன் அவை வங்கியின் பிரதான பெறுமதிகள் மற்றும் எவ்வாறு மக்கள் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றனர் என வரையறுக்கின்றனர். அதனுடைய தொலைநோக்கினை அடைவதற்கு நன்நெறி நியமத்தின் உயர் மட்டத்தில் அதன் வியாபார நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளுகின்றது. தொலை நோக்கு, செயற்பணி, பெறுமதிகள் இந்த ஆண்டறிக்கையின் 02 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

கூட்டிணைந்த ஆளுகை

கூட்டிணைந்த ஆளுமை பயனுறுதியுள்ள கூட்டிணைந்த ஆளுமை கட்டமைப்பு ஒன்றையும் அதன் செயலாற்றலையும் பேணுவதில் பணிப்பாளர் சபை கடப்பாட்டுடன் செயற்படுகின்றது. வங்கியின் நிதி, செயற்பாடுகள், மற்றும் இணங்குவிப்பு நடவடிக்கைகளை கூட்டிணைந்த ஆளுமை பிரயோகங்களுக்கு அமைவாக நெறிப்படுத்தியும் செயற்படுத்துகின்றது. கூட்டிணைந்த ஆளுமை அறிக்கையானது வருடாந்த அறிக்கையின் பக்கம் 23 இருந்து 50 வரை வழங்கப்பட்டுள்ளது.

சபையின் உப குழுக்கள்

சபையானது வங்கியின் விவாகராங்களில் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வங்கிச் சட்டத்திற்கு இணங்க நான்கு உப குழுக்களை உருவாக்கியுள்ளது

o சபையின் கணக்காய்வுக் குழு

வங்கியின் கணக்காய்வு குழு (BAC) வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், அதன் ஆண்டு அறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தத் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவல்களை மதிப்பாய்வு செய்கிறது மற்றும் வங்கியின் சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குதல், வங்கியின் வெளிப்புற கணக்காய்வு செயல்பாடுகளின் வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் வங்கியின் உட்புற கணக்காய்வு செயல்பாடுகள் மற்றும் நிதி அறிக்கை, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு

மற்றும் செயல்பாட்டு விடயங்கள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவை குழுவின் கீழ் வருகின்றன.

வங்கியின் சபையின் கணக்காய்வுக் குழு நான்கு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும், ஒரு பதிலீட்டு அங்கத்தவரையும் கொண்டுள்ளது. சபையின் தலைவர், சுயாதீனமான நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளராக இருப்பதுடன், அவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வில் தகைமை பெற்றவராக இருப்பார். சபையின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையில் இருந்து அவசியமான தகைமைகள், திறன்கள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவர்.

சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணிபுரிவார்.

பொது முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் - நிதி உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் சட்டம்) மற்றும் பிரதான முகாமையாளர் (கிளைத் தொழிற்பாடுகள்) ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தந்தனர். அதேவேளை கணக்காய்வாளர் நாயகத்தின் அத்தியட்சகர் அவதானிப்பாளராக அனைத்து கூட்டங்களிலும் பங்குபற்றினார்.

எட்டு சபை கணக்காய்வுக் கூட்டங்கள் 2021ம் ஆண்டு நடாத்தப்பட்டன. சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இந்த ஆண்டு அறிக்கையின் பக்கம் 52 இருந்து 53 வரை கொடுக்கப்பட்டள்ளது.

o சபையின் மனிதவள மற்றும் ஊதியங்கள்

வங்கியின் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது வங்கி சார்பாக மனிதவளக் கொள்கைகள், உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குகிறது. வங்கியின் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள் தொடர்பான அனைத்து ஊதியக் கொள்கை, முன்முயற்சிகள், சம்பள கட்டமைப்புகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்கிறது மற்றும் அனைத்து பணியாளர்கள் தொடர்பான விடயங்கள் உட்பட அனைத்து மனிதவள பிரச்சினைகள் தொடர்பான பிற சபையின் துணைக் குழுக்களுடன் ஒரு ஆலோசனைப் பங்கைப் பேணுதல், இவை வங்கியின் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் உள்ள முதன்மை பொறுப்புகளில் ஒன்றாகும்.

இக்குழு நான்கு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன், ஒரு பணிப்பாளர் பதிலீட்டு அங்கத்தவராக நியமிக்கப்படுவார். சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் தொடர்புடைய விடயங்கள் அல்லாத விடத்து பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

குழுக் கூட்டங்கள் வருடத்திற்கு ஒரு தடவையாவது நடத்தப்பட வேண்டும் என்பதுடன் 2021 ஆம் ஆண்டு குழு ஒரு தடவை சந்தித்தது. சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 55இல் வழங்கப்பட்டுள்ளது

o சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அனைத்து இடர்கள் அதாவது கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க இடர்கள் என்பவற்றை இடர் காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களின் ஊடாக மதிப்பீடு செய்யும். சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, குறித்துரைக்கப்பட்ட இடர்களை தீர்ப்பதற்கும் அளவு மற்றும் தர இடர் வரையறைக்குள் இந்த இடர்களை முகாமைத்தவம் செய்வதற்கு கடன் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்தது. குழு வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகளின் அடிப்படையில் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விவேகமான அளவுக்கு அப்பால் அபாயங்கள் இருக்கும் போது, இந்த குறித்துரைக்கப்பட்ட இடர்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, சபையின் கண்ணோட்டம், இணக்கம் மற்றும் அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளைப் பெற்றுக்கொள்வதன் நோக்கத்துடன் சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தலை உறுதி செய்கின்றது. அனைத்து வியாபார செயற்பாடுகளின் மீது உள்ளக கட்டுப்பாடு மற்றும் அனுமதிக்கப்பட்ட கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பவற்றுடன் வங்கியின் இணக்கத்தை மதிப்பீடு செய்தவற்கு சுயாதீன இணக்கச் செயற்பாட்டிற்கு குழு நியமிக்கப்பட்டள்ளது.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு நான்கு நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அதில் ஒருவர் மாற்று உறுப்பினர் ஆவார், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் இடர் முகாமைத்துவ தலைவர் ஆகியோர் பரந்த இடர் வகைகளைக் கவனிக்கின்றனர். சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் செயலாளராக சபையின் செயலாளர் செயல்படுகிறார்.

ஐந்து சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 56 - 58 இல் வழங்கப்பட்டுள்ளது.

o சபையின் பரிந்துரைக் குழு

சபையின் பரிந்துரைக் குழுவானது பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுத்தல்/ நியமித்தலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களை நியமிப்பற்கு அல்லது பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகளை என்பவற்றை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. சபையின் பரிந்துரைக் குழுவானது அதன் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்

சபையின் பரிந்துரைக் குழு நான்கு நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அதில் ஒருவர் மாற்று உறுப்பினராக இருக்கிறார். பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர், உதவி பொது முகாமையாளர்- (HR&L), குழுவின் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் அழைப்பாளர்களாக கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். சபையின் செயலாளர சபையின் பரிந்துரைக் குழுவின் செயலாளராக செயல்படுகிறார்.

சபையின் பரிந்துரைக் குழுக் கூட்டங்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது நடத்தப்படுகின்றன, இருப்பினும் தேவைகளின் அடிப்படையில், கூட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் இரு குழு கூட்டங்கள் நடைபெற்றது. இந்த ஆண்டு அறிக்கையின் 54 ஆம் பக்கத்தில் சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

மூலதனப் போதுமை விகிதம்

மூலதன போதுமை விகிதம் என்பது வங்கியின் கிடைக்கக்கூடிய மூலதனத்தின் ஒரு அளவீடாகும், இது வங்கியின் இடர்- எடை கடன் வெளிப்பாடுகளின் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது. குறைந்தபட்ச மூலதன போதுமை கேள்வியை வங்கி எப்போதும் பராமரித்து வருகிறது.

மூலதன போதுமை விகிதம் வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

இடர் முகாமைத்துவம்

ஆபத்துக்களை நிர்வகிப்பதற்கான ஒட்டுமொத்த பொறுப்பை பணிப்பாளர்கள் குழு ஏற்றுக்கொள்கிறது. இடர்களைத் தணிப்பதில் வங்கி எடுத்துள

உள்ளக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாடு, கணக்கியல் மற்றும் கணக்காய்வியலில் வரையறுக்கப்பட்டவாறு வங்கியின் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் செயற்திறன், நியாயமான நிதியியியல் அறிக்கையிடல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைகளுடனான இணக்கம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான செயன்முறையாகும்.

வியாபாரத்தின் நாளாந்த முகாமைத்துவத்திற்கு அவசியமான கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கான வழிகாட்டலை வழங் குவதற்கு கணக்காய்வுக் குழுவின் ஊடாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுக்கான வினைத்திறனுடையதும் மற்றும் விரிவானதுமான முறைமையை அமுல்படுத்தலை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தியுள்ளது. வருடாந்த அறிக்கையின் 75ம் பக்கங்களில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

இலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

2021 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூ.5.254 மில்லியன் ஆகும். வங்கியின் இலாபம் தொடர்பான விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டள்ளது

விபரங்கள்	ரூ (மில்)
ஒதுக்குகள்	5,393.76
மூலதனச் செலவு	17.59
பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம்	889.81
அரசாங்கத்திற்கான நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்கான பங்களிப்பு	430
வரிவிதிப்பு	430
ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்	N/A
ஐந்தொகைக்கு பின்னரான நிகழ்வுகள்	N/A
தொடர்நதியங்கும் நிலை	N/A

பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களுடன் இணக்கம்

1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அனைத்து ஏற்புடைய சட்டங்களின் நிபந்தனைகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணக்கமாக செயற்படுவதை அனைத்து நேரங்களிலும் வங்கி, நிச்சயப்படுத்திக் கொள்ளுகின்றது.

அனைத்து பங்குடமையாளர்கள் அனைவரையும் சமமாக நடத்துதல்

எமது பங்குடமையாளர்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் வங்கி மேற்கொண்டுள்ளது. வங்கி அதன் சேவைகளை, நியாய விலையிடல், தரமான சேவைகள் மற்றும் நேர்மை மற்றும் நாணயம் என்பவற்றை மேம்படுத்த எண்ணியுள்ளது.

வாடிக்கையாளர்கள் மற்றும் கடன்பெறுனர்கள்

பெற்றுக் கொள்ளக்கூடிய விலையில் வீடமைப்புக் கடன்களை நாட்டிற்கு வழங்குவது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த விடயம் தொடர்பாக கிரமமான ஆய்வுகளை மேற்கொள்வதில் வங்கி விசேட கவனம் எடுக்கின்றது. வேலையின்மையை இல்லாதொழிக்க விரும்பும் அரசாங்கத்திற்கு உதவும் வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும், கைத்தொழிற்சாலையாளர்களுக்கும் உதவுதற்கான பல்வேறுபட்ட கடன் திட்டங்களை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்ச்சி

வைப்பாளர்களும் வழங்குனர்களும்

வங்கியின் பிரதான நிதி வழங்குனர்களாக வைப்பாளர்கள் உள்ளனர். வைப்பு வீதங்கள் வெளியிடப்படுவதுடன் போட்டித்தன்மையாகவும் காணப்படுகின்றது. மூலதனம் மற்றும் வட்டி உரிய திகதியில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

உரிய கொடுப்பனவை மேற்கொள்வதற்காகவும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்விமனுவை வங்கி கோருகின்றது

கணக்காய்வாளரின் அறிக்கை

அரச மற்றும் முதலீட்டு வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி இருக்கின்றார். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் இலக்க விதப்புரையின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும் தலைமையதிபதியின் பணிப்புரைகளுக்கு கீழ் மேற்கொள்ளப்பட்டது.

31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச மற்றும் முதலீட்டு வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கீடுகளின் நிதி கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, இந்த ஆண்டறிக்கையின் 96 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

ஒப்பதல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு, ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றிற்காக அவர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் ஒழுங்குபடுத்தம் அதிகாரங்களுக்கான அவர்களின் ஆழமான மற்றும் உண்மையான நன்றியை வெளிப்படுத்த பணிப்பாளர்கள் இந்த வாய்ப்பைப் பெறுகின்றார்கள். அனைத்து பணிப்பாளர்களிடமும் வங்கி தொடர்ந்து. செயல்படுவதில் வலுவான செயற்திறன் கொண்ட ஊழியர்களால் காட்டப்படும். அர்ப்பணிப்புக்கான உங்கள் பாராட்டுக்களை ஆழமாக வெளிப்படுத்த பணிப்பாளர்கள் விரும்புகின்றார்கள். உங்கள் பணிப்பாளர்கள் இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அரசாங்க அதிகாரசபைகளிடமிருந்து

பணிப்பாளர் சபையின் கட்டளைப் படி



திலானி அழககோன்
சபையின் செயலாளர்

நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை

பொறுப்பு

2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 3 (8) 11 (ஆ) விதப்புரைக்கு இசைவாகவும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் 2017 இல் வெளியிடப்பட்டுள்ள கூட்டிணைந்த ஆளுகை மீதான சிறந்த நடவடிக்கைகளுக்கான நெறிமுறையின் னு.1.5 கோட்பாடுகளின் பிரகாரமும், அரச முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக பணிப்பாளர் சபை இந்த அறிக்கையை சமாப்பிக்கின்றது.

வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டையும் மற்றும் அதன் திறனாற்றலையும் மீளாய்வு செய்யும் பொறுப்பு சபைக்கு உள்ளது. சொத்துக்களை உரிய முறையில் பாதுகாப்பது, கணக்குப் புத்தகங்கள் சரியாக பேணப்படுவது, மற்றும் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையின் நம்பகத் தன்மை ஆகியவற்றை நியாயமான அளவு உறுதிப்பாட்டுடன் வழங்குவதற்கு ஏற்ற வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறை வடிவமைக்கப்பட்டுள்ளதென பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும் தவிர்க்க முடியாத இடர்களின் காரணமாக சாத்தியமான தவறுகள், ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகளை ஒழிப்பது தொடர்பாக முழு அளவிலான உத்தரவாதத்தினை இந்த முறைமை வழங்குவதில்லை.

வங்கி முகம் கொடுக்கும் பிரதான இடர்களை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக நடைமுறையொன்றை சபை நிறுவியுள்ளதுடன், வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைகளில் மற்றும் ஏனைய வழிகாட்டல்களில் ஏற்படும் மாற்றத்தின் போது உள்ளகக்கட்டுப்பாடுகளின் முறைமை மேம்படுத்தலையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த படிமுறை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் அறிக்கை மீதான வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன்

இணங்குவதை உறுதிப்படுத்துவதுவதுடன், சபையினால் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றது. வழிகாட்டலில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் மதிப்பீட்டுக்கான கோட்பாடுகளை கருத்தில் கொண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை சபையினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அமைப்பானது நிதியியல் அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்த நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும்

போதுமானதாக இருப்பதுடன் அதற்கான கணக்குக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் என்பவற்றுடன் இணங்கியிருக்கும்.

வங்கி எதிர்நோக்கும் இடர்களை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்வதன் மூலம், சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் அமுல்படுத்தலில் முகாமைத்துவம் சபைக்கு உதவுவதுடன் இந்த இடர்களை அகற்றிக்

கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், தொழிற்படுத்தல் மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ளுகின்றது.

நிதி அறிக்கையிடல் மீதான உள் கட்டுப்பாட்டு அமைப்பின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனைப் பயன்படுத்துவதில் மற்றும் மதிப்பாய்வு செய்வதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறையின் முக்கிய அம்சங்கள்.

அவ்வப்போது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்திறனை மதிப்பீடு செய்யும் முறைமையையும சபை ஏற்படுத்தியுள்ளது. பிரதான படிமுறை மற்றையவற்றுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

- வங்கிக்குள் போதுமையும், நேர்மையும் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையை உறுதி செய்வதற்காக, பல்வேறு உப குழுக்களை சபை நிறுவியுள்ளதுடன், வங்கியினால் முகங்கொடுக்கும், கொள்கைகள், நடைமுறைகள் என்பவற்றை மதிப்பிடுவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும், சபை மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக வங்கியின் நிறுவன முகாமைத்துவம், சிரேஸ்ட காமைத்துவம் மற்றும் முகாமையாளர்கள் அடுக்குகளில் இருப்பவர்களிடையில் சபையின் அதிகாரத்தை பகிர்ந்து அளித்தும் உள்ளது.

- சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு சுயாதீனமான, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடங்கியுள்ளது. வங்கியின் இடர் விபரத்திரட்டை மீளாய்வு செய்வதற்கும், முகங் கொடுக்கும் பிரதான இடர்களை அடையாளம் காணுவதற்கும் வங்கியின் இடர் முகாமைத்துவம் அடிப்படையிலான கொள்கைகளை தயாரிப்பதற்கும் குழு பொறுப்பாக இருக்கும்.

- உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் நிறுவப்பட்ட வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒத்திருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தவதற்கு மாதிரி அடிப்படையிலான பரிசோதனைகளை வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவு நடத்துகின்றது. வங்கியின் நடைமுறைக் கூறுகள் மற்றும் உற்பத்திகள் என்பவற்றுடன் தொடர்புடைய இடர் மட்டங்களின் அடிப்படையில் அடிக்கடி

  தீர்மானிக்கப்படுகின்ற அனைத்து கூறுகளின் மீதும், கிளைகளின் மீதும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் நிலவக் கூடிய ஒழுங்கின்மைகள், புரள் கூற்றுகள், மோசடிகள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக, பணிப்பாளர்கள் சபையின் தலைவருக்கு, சுயாதீனமான குறிகோள்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு உள்ளக கணக்காய்வுத் தலைவருக்கு உள்ளது.

- பொதுவாக, உரிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் முழு மொத்த விளைத்திறனை கணக்காய்வு குழு ஆய்வு செய்கின்றது. அதனோடு, உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பலவீனங்கள் தொடர்பாக குறிப்பான அவதானிப்புகள் பற்றி கிரமமாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றது, இதற்கேற்ப குழு முறைமைகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பயன்படுத்திய பொறி முறைமைகளில் கணக்காய்வாளரின் உள்ளக கணக்காய்வு அறிக்கை, உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் ஒழுங்கு விதி சார்ந்த அறிக்கைகள், வருடாந்த - மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் உள்ளடங்குகின்றன.

- வங்கியானது LKAS மற்றும் SLFRS ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய இலங்கை கணக்கியல் தரநிலைகளை 2012 இல் ஏற்றுக்கொண்டது. இத்தகைய இலங்கை கணக்கியல் தரநிலைகளை ஏற்றுக்கொள்வது, அங்கீகாரம், அளவீட்டு, வகைப்பாடு மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றின் புதிய தேவைகளுக்கு இணங்க செயல்முறைகளை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் முற்போக்கான மேம்பாடு ஆகியவை செய்யப்படுகின்றன.

நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை தொடர்ச்சி

- 2021 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை கணக்கியல் தரநிலைத் தேவைகளை சபை கவனத்தில் கொண்டுள்ளது மற்றும் நிதி அறிக்கைகளுக்குஅதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப வருடாந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுவதையும், இலங்கை மத்திய வங்கி வழங்கிய அறிக்கையிடல் தேவைகள் குறித்த வழிகாட்டுதலையும் பொறுத்து வங்கியின் நிதி அறிக்கை செயல்முறைகள் உறுதி செய்யப்படுகிறதா என்பதை சபை மீளாய்வு செய்கின்றது.
- தினசரி வியாபார தொழிற்பாடுகளின் வங்கியின் முக்கிய பரப்புகளில் திறம்பட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான மேம்பாட்டுடன் முகாமைத்துவ மட்டத்திலான குழுக்கள் செயற்படுகின்றன.
- வருடாந்த மீளாய்வு கட்டமைப்பு ஒன்றின் வடிவமைப்பு, மற்றும் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு குறித்த திறனாற்றல்கள் என்பவை மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் ஆவணப்படுத்தலை சபை ஏற்கனவே தீர்மானித்துள்ளது. இது உள்ளக கட்டுப்பாடுகளின் திறனாற்றல்கள் மீதான மீளாய்வின் அத்தியாவசியத்திற்கு இது உதவுகின்றது.
- வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் திறமையை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் அறிக்கையிடல் நடைமுறையை வடிவமைப்பதற்கும், செயற்படுத்துவதற்கும், மேலதிக கட்டுப்பாட்டு நடைமுறைகள் உள்ளன என்பதை சபை அறிந்துள்ளது.

உறுதிப்படுத்தல்

மேலே கூறப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கும் அமைவாகவங்கியின் நிதியியல் அறிக்கை முறைமை நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பாக நியாயமான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வெளிவாரி கணக்காய்வாளர் மேற்குறிப்பிட்ட 31 டிசம்பர் 2021ம் திகதி முடிவடைகின்ற வருடத்திற்கான நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கையை மீளாய்வு செய்வார்.

திருமதி. டபில்யு.சீ.என்.குரே
தலைவர் - சபையின் கணக்காய்வுக் குழுத் தலைவர் / பணிப்பாளர் (NE)

திரு. எச்.சீ.டிலிப் லால் சில்வா
பணிப்பாளர்(NE)

திரு. எஸ்.கே.ஏ. கலபதி
பணிப்பாளர் (NE)

வங்கியின் உள்ளக் கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/F/SMIB/IC/2021/1
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 09 மார்ச் 2023

தலைவர்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்களின் கூற்றின் மீது பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் சுதந்திர உத்தரவாத அறிக்கை

அறிமுகம்

இந்த அறிக்கை 2021 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை ("அறிக்கை") குறித்த உத்தரவாதத்தை அளிப்பதாகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 3(8)(ii)(b) பிரிவுக்கு இணங்க வழங்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கையில் வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதலுக்கு" ஏற்ப அறிக்கையைத் தயாரிப்பதற்கும் வழங்குவதற்கும் முகாமைத்துவமே பொறுப்பாகும்.

SLSAE 3050 (திருத்தப்பட்ட) உடன் எனது பொறுப்பு மற்றும் இணக்கம்

எனது பொறுப்பு என்னவென்றால், தயாரிக்கப்பட்ட அறிக்கை அல்லது பணிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயல்முறையை சரியான முறையில் பிரதிபலிக்கிறது போன்ற இரண்டையும் ஆதரிக்கப்படுகிறதா என்பதை மதிப்பிடுவது ஆகும்.

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வெளியிட்டுள்ள இலங்கை தர நிர்ணய உத்தரவாதங்கள் ளுடுளுயுறு 3050 (திருத்தப்பட்ட), பணிப்பாளர்களுக்கான உள்ளக கட்டுப்பாடு குறித்த அறிக்கை வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கை, ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இந்த, ஈடுபாட்டை நான் நடாத்தினேன்.

தரநிலை, அனைத்து பொருள் அம்சங்களிலும், மற்றும் உள் கட்டுப்பாடு குறித்த அறிக்கையை முகாமைத்துவம் தயாரித்துள்ளதா என்பது குறித்த வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்தைப் பெறுவதற்கான நடைமுறைகளைத் திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இந்த ஈடுபாட்டு நோக்கத்திற்காக, எந்தவொரு அறிக்கையையும் புதுப்பிக்க அல்லது மறு வெளியீடு செய்வதற்கு நான் பொறுப்பல்ல, இந்த ஈடுபாட்டின் போது, நிதித் தகவல்களைக் கணக்காய்வு அல்லது மதிப்பாய்வு செய்யப்படவுமில்லை.

செய்யப்பட்ட வேலையின் சுருக்கம்

பணிப்பாளர்களால் அல்லது பணிப்பாளர்களுக்கு தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அறிக்கை ஆதரிக்கப்படுகிறதா என்பதை மதிப்பிடுவதற்கு எனது ஈடுபாட்டை வெளிப்படுத்தினேன் மற்றும் வங்கியின் நிதி அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்த செயல்முறைகள் சரியான முறையில் பிரதிபலித்தது.

நிகழ்த்தப்பட்ட நடைமுறைகள் முதன்மையாக வங்கி பணியாளர்களின் விசாரணைகள் மற்றும் பணிப்பாளர்கள் வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறையை ஆதரிக்கும் மாதிரி அடிப்படையில் ஆவணங்களின் இருப்பு ஆகியவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

SLSAE 3050 (திருத்தப்பட்ட) அறிக்கை அனைத்து இடர் மற்றும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியதா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் செயல்திறன் குறித்து ஒரு கருத்தை உருவாக்குவதா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை எனக்கில்லை.

SLSAE 3050 (திருத்தப்பட்ட) வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட எந்தவொரு குறிப்பிடத்தக்க சிக்கல்களின் பொருள் உள் கட்டுப்பாட்டு அம்சங்களைக் கையாள்வதற்கு விவரிக்கப்பட்டுள்ள செயல்முறைகள் உண்மையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமா என்பதை நான் கருத்தில் கொள்ளத் தேவையில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறைகள் வங்கியின் தன்மை பற்றிய எனது புரிதல், அறிக்கை தயாரிக்கப்பட்ட நிகழ்வு அல்லது பரிவர்த்தனை ஆகியவற்றைப் பொறுத்து எனது தீர்ப்பில் தங்கியுள்ளது.

எனது முடிவுக்கு ஒரு அடிப்படையை வழங்க நான் பெற்ற சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்று நான் நம்புகிறேன்.

எனது முடிவு

வங்கியின் நிதி அறிக்கை குறித்த அமைப்பு நிகழ்த்தப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அறிக்கை, உள் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் செயல்திறனை மறுஆய்வு செய்வதில் பணிப்பாளர்கள் குழு ஏற்றுக்கொண்ட செயல்முறையைப் பற்றிய எனது புரிதலுடன் பொருந்தாது என்று நம்புவதற்கு எதுவுமே என் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை.

டபில்யூ. பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நிதி அறிக்கை செயல்முறைகளை மேற்பார்வையிடுவதற்கான பொறுப்பு, மற்றும் நிதி அறிக்கையிடலைத் தயாரிக்கும் போது இது தொடர்பான சட்டமன்ற தேவைகளை உறுதி செய்யும்

பொறுப்பு கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்யும் பொறுப்பு பணிப்பாளர்களுக்கு உள்ளது. அதன்படி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதி அறிக்கைகள் தொடர்புடைய பணிப்பாளர்கள் குழுவின் பொறுப்பு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வங்கியின் நிதிநிலை அறிக்கைகள் 2021 மார்கழி 31 ஆம் திகதி நிலவரப்படி விவகாரங்களின் உண்மையான மற்றும் கட்டணக் காட்சியை பிரதிபலிக்கும் என்பதையும், பின்னர் முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் நிதி செயல்திறன் பற்றியும் வங்கியின் பணிப்பாளர்கள் குழு உறுதிப்படுத்துகிறது. இந்த ஆண்டு அறிக்கையில் வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் நேர்மை மற்றும் குறிக்கோளின் பொறுப்பை பணிப்பாளர்கள் குழு ஏற்றுக்கொள்கிறது.

நிதி அறிக்கைகள்

அமைப்பைப் புரிந்துகொள்வதற்கும், கண்காணிப்பதற்கும், வழிநடத்துவதற்கும் போதுமான நிதி கல்வியறிவு கொண்ட வங்கியின் பணிப்பாளர்கள் குழு, 1975 ஆம் ஆண்டின் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்ட எண் 1 மற்றும் அதன் திருத்தங்கள் 1971 ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட திருத்தங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க வங்கியின் வணிகத்தை கட்டுப்படுத்தவும், நிர்வாகிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது

இந்த வருடாந்த அறிக்கையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் கணக்கியல் அடிப்படை புத்தகங்களுடன் ஒத்துப்போகின்றன மற்றும் அவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள், இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் இலங்கை நிதி அறிக்கை தரநிலைகளின் தேவைகளுக்கு இசைவானவை, மற்றும் இவை ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் தொடர்புடைய சட்டரீதியான தேவைகளுக்கு இணங்க வங்கியின் நிதி நிலையைப் பற்றிய நியாயமான பார்வையை ஏற்படுத்துகிறது.

இந்த ஆண்டு அறிக்கையில் வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் நேர்மை மற்றும் குறிக்கோளின் பொறுப்பை பணிப்பாளர்கள் குழு ஏற்றுக்கொள்கிறது. இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

1. தற்போதுள்ள நிதி அறிக்கை கட்டமைப்பின் படி நிலையான அறிக்கையில் நிதி அறிக்கைகளைத் தயாரிக்க பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ளன, பொருள் புறப்பாடு ஏதேனும் இருந்தால், வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

2. தொடர்புடைய அனைத்து பொருந்தக்கூடிய கணக்கியல் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ளன.

3. நியாயமான மற்றும் விவேகமான தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காலகட்டத்தின் முடிவிலும் இரண்டு மாதங்களுக்குள், மூன்று மொழிகளிலும், செய்தித்தாள்களில் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் உட்பட காலாண்டு அடிப்படையில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை வங்கி வெளியிட்டுள்ளது, மேலும் அவை வங்கியின் வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சபையின் கணக்காய்வுக் குழுவின் மீளாய்வு மற்றும் பரிந்துரையைத் தொடர்ந்து, அவை வெளியிடுவதற்கு முன்னர் இடைக்கால நிதிநிலை அறிக்கைகளையும் பணிப்பாளர்கள் குழு அங்கீகரிக்கிறது. சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 69 இல் காணப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி பெற்ற விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது.

இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம்

முன்னுணர் எதிர்காலத்தில் அதன் தொழிற்பாடுகளை தொடர்வதற்கு வங்கி போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என சபை திருப்தியடைந்துள்ளது. எனவே, இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள, இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாகவும் மற்றும் நியாயமாக பிரயோகிக்கப்படும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது மற்றும் நியாயமானதும் அவசியமானதுமான நிதி கூற்றுகளை தயாரிக்கும் போது, அவசியமான இடங்களில் விவேகமான தீர்வுகள் ஏற்படுத்தப்பட்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையிலும் வங்கியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு சபையானது அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துள்ளது.

உள்ளக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம்

மோசடிகளையும் பிற முறைகேடுகளையும் கண்டறிவதற்கான வங்கியின் சொத்துக்களைப் பாதுகாக்க நியாயமான நடவடிக்கைகள் மற்றும் அக்கறை செலுத்துவதற்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் குழு பொறுப்பாகும், மேலும் உள் நிதிக் கட்டுப்பாடுகளின் பயனுள்ள மற்றும் விரிவான அமைப்பையும் நிறுவியுள்ளது, அதன் செயல்திறனைக் கண்காணிக்கும் ஒரு சிறந்த அமைப்பாகும். உள்ளகக் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் வங்கியின் சொத்துக்களைப் பாதுகாக்கவும் மற்றும் மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தைத் தடுக்க வலுவான கட்டுப்பாட்டு சூழலைப் பேணுவதில் கணிசமான முக்கியத்துவம் அளிக்கிறது

உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கம் ஒரு பயனுள்ள அமைப்பை அடைவதே ஆகும். இது பணிப்பாளர்கள் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைகிறது, மேலும் இது வங்கியின் வணிகம் சரியான மற்றும் திறம்பட நடத்தப்படுவதை நியாயமான அளவிற்கு உறுதி செய்வதால், சட்டங்களும் விதிமுறைகளும் இணங்குகின்றன மற்றும் நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றன.

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு தொடர்ச்சி

கணக்காய்வுக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் உள்ளக கணக்காய்வுத் துறை உள் கட்டுப்பாடுகளின் அமைப்பின் செயல்திறனைக் கண்காணித்து, தேவையான இடங்களில் மாற்றங்களை பரிந்துரைக்கிறது.

பணிப்பாளர்கள் தங்கள் வழக்கமான கூட்டங்களில் நேரடியாகவும், வாரிய கணக்காய்வுக் குழு மூலமாகவும் நிதி அறிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்படுவதை உறுதி செய்கின்றனர்.

வங்கியின் உள் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பணிப்பாளர்களின் அறிக்கை இந்த வருட அறிக்கையின் பக்கம் 60 முதல் பக்கம் 66 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

இணக்க அறிக்கை

அவர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் கீழ் வங்கியினால் கொடுப்பனவு செய்ய வேண்டிய அனைத்து வரிகளும் மற்றும் ஊழியர்களினதும் மற்றும் அவர்களின் சார்பாகவும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகளும் மற்றும் வரிகளும் என்பதையும் மற்றும் அரசாங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ஏனைய அனைத்து நிலுவைகளும் உரிய நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபைகளுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது எனவும் செலுத்தப்பட வேண்டியவை நிதியறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில் குறிப்பிடப்பட்டன எனவும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்

கணக்காய்வு அறிக்கை

வங்கியின் கணக்காய்வாளராக, கணக்காய்வாளர் தலைமை அதிபதி இருப்பதுடன், வங்கியின் நிதிக் கூற்றுகள் மீதான இறுதி கருத்தை வழங்குபவராகவும் இருக்கின்றார்.

பணிப்பாளர் சபையின் நிதியியல் கூற்றுகள் உள்ளடங்களாக வங்கியின் அனைத்து பதிவுகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளதுடன் அவை தகுந்ததாக கருதப்படும் ஆய்வுகளை மேற்கொண்டு கணக்காய்வாளர் நாயகம் அவற்றினைப் பரீட்சித்து அவர்களுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 85 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் நிதியியல் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் தரப்பட்டுள்ளன..

முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள்

வங்கி ஒரு தரப்பாகவும் அதில் பணிப்பாளர் அல்லது வங்கியின் முன்னாள் பணிப்பாளர்கள் முக்கியமான நலன்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே வருடத்தின் எந்தவொரு நேரத்திலும் அல்லது வருடத்தின் இறுதியில் பணிப்பாளர் சபையுடன் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களில் ஈடுபடவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நியதிச் சட்ட கொடுப்பனவுகள்

நிதியியல் நிலைமைத் திகதியில் உள்ளவாறு, வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய. அனைத்து தொடர்புடைய ஒழுங்கமைப்பு மற்றும் நியம அதிகாரிகள் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நியம கொடுப்பனவுகள் வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது அல்லது பொருத்தமானவிடத்து நிதிக் கூற்றுகளில் வழங்கப்பட்டுள்ளதென பணிப்பாளர்கள் திருப்தியடைந்துள்ளனர் என்பதை தமது சிறந்த அறிவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இந்தக் கூற்றில் தரப்பட்டுள்ளவாறு பணிப்பாளர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளனர் எனும் கருத்தை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர்.

சபையின் கட்டளைப்படி,



திலானி அழககோன்
சபையின் செயலாளர்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/F/SMIB/2021/01

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 13 ஒக்டோபர் 2022

14 OCT 2022

தலைவர்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

2018ஆம் ஆண்டு 19ஆம் திகதி தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் படி, 2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த பொது கணக்காய்வாளரின் அறிக்கை.

1. நிதி அறிக்கைகள்

1.1. கருத்து

2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ("வங்கி") நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு ஆனது, 2021 டிசம்பர் 31 நிலவரப்படி நிதி நிலை அறிக்கை மற்றும் வருமான அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, பங்கு மாற்றங்களின் அறிக்கை, முடிவடைந்த ஆண்டிற்கான பணப்பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது மற்றும் இலங்கை குடியரசு ஜனநாயக சோசலிஸ்ட்டின் அரசியலமைப்பின் 154(1) வது பிரிவில் உள்ள விதிகளைத் தொடர்ந்து எனது வழிகாட்டுதலின் கீழ் 2018ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டம் 19 மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் விதிகளுடன் இணைந்து குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் உருவாக்கப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) வது பிரிவில் உள்ள விதிகளைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

எனது கருத்துப்படி, வங்கியின் நிதி அறிக்கைகள் 2021 டிசம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி வங்கியின் நிதி நிலை குறித்து உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கின்றன, மேலும் முடிவடைந்த ஆண்டிற்கான அவர்களின் நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கங்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி அமைந்துள்ளன.

RECEIVED
16 FEB 2023
Finance Division
State Mortgage & Investment Bank

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
+94 11 2 88 70 28 - 34
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
+94 11 2 88 72 23
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

தலைவர்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

2018ஆம் ஆண்டு 19ஆம் திகதி தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் படி, 2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த பொது கணக்காய்வாளரின் அறிக்கை.

1. நிதி அறிக்கைகள்

1.1. கருத்து

2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ("வங்கி") நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு ஆனது, 2021 டிசம்பர் 31 நிலவரப்படி நிதி நிலை அறிக்கை மற்றும் வருமான அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, பங்கு மாற்றங்களின் அறிக்கை, முடிவடைந்த ஆண்டிற்கான பணப்பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது மற்றும் இலங்கை குடியரசு ஜனநாயக சோசலிஸ்ட்டின் அரசியலமைப்பின் 154(1) வது பிரிவில் உள்ள விதிகளைத் தொடர்ந்து எனது வழிகாட்டுதலின் கீழ் 2018ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டம் 19 மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் விதிகளுடன் இணைந்து குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் உருவாக்கப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) வது பிரிவில் உள்ள விதிகளைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

எனது கருத்துப்படி, வங்கியின் நிதி அறிக்கைகள் 2021 டிசம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி வங்கியின் நிதி நிலை குறித்து உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கின்றன, மேலும் முடிவடைந்த ஆண்டிற்கான அவர்களின் நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கங்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி அமைந்துள்ளன.

1.2. கருத்துக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) அமைய எனது கணக்காய்வை நடத்தினேன். அந்த தரங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் எனது கருத்துக்கு ஒரு அடிப்படையை வழங்க போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்று நான் நம்புகிறேன்.

1.3 வங்கியின் 2021ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வாளர் நாயகத்தின் திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்ட, 2021ஆம் ஆண்டுக்கான வங்கியின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்களை உள்ளடக்கிய ஆனால் நிதியியல் கூற்றில் உள்ளடகப்படாத தகவல்கள் கணக்காய்வாளர் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டள்ளது. முகாமைத்துவம் ஏனைய தகவல்களுக்குப் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகள் மீதான எனது கருத்துகள் ஏனைய தகவல்களை உள்ளடக்கமாட்டாது மற்றும் அதுதொடர்பாக எவ்வித வடிவத்திலும் உத்தரவாதத்தையும் நான் வெளிப்படுத்தமாட்டேன்.

எனது நிதியியல் கூற்றுகள் தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும் போது அவற்றைப் படிப்பதே,



அவ்வாறு செய்யும் போது மற்றத் தகவல்கள் நிதிநிலைக் கூற்று அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது வேறுவிதமாக முரணானதாக உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவும் அல்லது பொருள் தவறாகக் கூறப்படுகின்றது என வெளிப்பட்டால் அதனை அறிதலே எனது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுகின்ற நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு வழிவகுக்க, அனைத்து வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறப்புக்ளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

1.4. முகாமைத்துவத்தின் பொறுப்புகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளுக்கான ஆளுகைக்கு உட்பட்டவைகள்

முகாமைத்துவமே இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தரும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் மோசடி அல்லது பிழை காரணமாக பொருள் தவறான விளக்கத்திலிருந்து விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் போன்ற உள் கட்டுப்பாடுகளை நிர்ணயிப்பதற்கும் பொறுப்பாகும்,

